# தனிமையின் நன்மைகள்

தெளிவும் தகுதியும் படைத்த அடியார்களுக்குத் தன் அருட்கொடைகளை வாரிவழங்கிய இறைவனே அனைத்துப் புகழுக்கும் உரியவன். அவர்களின் முயற்சியையும் ஊக்கத்தையும் தன் அன்பைப் பெறுவதற்கான வழியில் அவன் திருப்பி வைத்தான். அவனது உயர்வையும் வலிமையையும் உணர்ந்து களிப்படையும் பேற்றினை அவர்களுக்குக் குறைவின்றிக் கொடுத்தான். ‘முனாஜாத்’ எனப்படுகிற தெய்வச் சிந்தனையில் அவர்களுக்கு மனநிறைவை உண்டாக்கினான். சூழ்ந்து நிற்கிற உலகத்து இன்பங்களை ஏறிட்டும் பார்க்காதபடி அவர்களின் உள்ளங்களில் வெறுப்பைத் தோற்றுவித்தான்.

இதனால் அவர்கள் மற்றவர்களோடு கலந்து வாழ்வதைத் துறந்துவிட்டுத் தனிமையைத் தேர்ந்தெடுத் தார்கள். தோன்றி மறையும் இன்பத்தைக் குறியாக வைத்து வாழ்வதால் சிந்தனையின்மீது விரித்துப் போர்த்தப்பட்ட கனத்த திரை சுருட்டி எறியப்பட்டுவிட்ட காரணத்தினால் அவர்கள் தெய்வத் தன்மையின் சுடரைக் கண்டு ரசித்துப் பூரிப்பு அடைந்தார்கள். ‘இஸ்லாத்தின் சட்டங்கள் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டவை’ என்ற கருத்தை உணர்ந்திருந்தாலும், அவர்கள் இஸ்லாத்தின் உயிர்த்துடிப்பைத் தனிமையில் கண்டார்கள். சமுதாயத்தில் கலந்து வாழ்வதால் பல நன்மைகள் விளைகின்றன என்பதை ஏற்றுக் கொண்டாலும், தனிமையில் கிடைக்கிற நன்மைகளை முறைப்படி விளக்குவதற்கு அவர்கள் வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது நாம் எதைப்பற்றி உரையாடப் போகிறோம் என்பதற்கு நான் விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிறேன்.

இஸ்லாத்தின் சட்டங்களுக்கு உட்பட்டு நடக்கும் மனிதன் மற்றவர்களோடு கலந்து வாழ்வதை விடுத்துத் தனிமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமா?

இந்தக் கேள்வியை மூலக் கருவாக வைத்துத்தான் நம் உரையாடலைத் துவங்கப் போகிறோம். எனினும் இந்த நூல் முழுவதையும் படித்து முடிப்பதற்கு முன்னர் நீங்கள் எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாது. ஏனெனில், தனிமை என்பது அறிஞர்களின் கருத்து வேற்றுமையைச் சம்பாதித்துக் கொண்ட ஒரு பிரச்சினையாகும். அறிஞர்களில் ஒரு சாரார் தனிமையை ஆதரிக்கிற அதே நேரத்தில் மறு சாரார் சமுதாய வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். முதல் சாரார் தம் கருத்துக்கு ஆதாரம் காட்டுவதுபோல் இரண்டாம் சாராரும் தம் தீர்மானத்துக்கு ஆதாரம் கொடுக்கிறார்கள்.

இப்போது நாம் தனிமையைப் பற்றித்தான் ஆராய வேண்டும். ஏனெனில் இந்த நூலுக்கு நாம், 'தனிமையின் நன்மைகள்' என்று பெயர் கொடுத்திருக்கிறோம். சமுதாய வாழ்வு பற்றிய விளக்கம் 'சமுதாய வாழ்வு' என்ற நூலில் இடம் பெறவிருக்கிறது.*

பெரும்பான்மையாகத் துறவிகளும் பக்தர்களும் தனிமைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது வரலாற்றிலிருந்து நாம் தெரிந்து கொண்ட செய்தியாகும்.

அவர்கள் சமுதாய வாழ்வில் அக்கறை காட்டவில்லை என்பதும் மக்களோடு மக்களாக கலந்து வாழவில்லை என்பதும் கருத்து வேற்றுமைக்குச் சிறிதும் இடமில்லாத உண்மைகள்.

## இல்லறமும் துறவறமும்

"பக்தர்களும் துறவிகளும் தேர்ந்தெடுக்கிற தனிமை, இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் எங்களுக்கு எப்படி நன்மை

* சமுதாய வாழ்வு என்ற நூல் அடுத்து வெளிவரவிருக்கிறது.



செய்ய முடியும்!" என்று உங்களில் யாரேனும் கேட்டால், அவர்களுக்கு நான் கொடுக்கவிரும்புகிற விடை இதுதான்:

தனிமை என்பது அறிஞர்களிடையே கருத்து வேற்றுமையைப் பெற்ற ஒன்று. இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் உங்களுக்குத் தனிமையினால் நன்மை கிடைக்க முடியுமா என்பதும் சமுதாயத்தை மறந்துவிட்டு நீங்கள் தனித்துத்தான் வாழ வேண்டுமா என்பதும் எடுத்த எடுப்பில் தீர்மானிக்கத் தகுந்த பிரச்சினைகள் அல்ல. வாழ்க்கையில் நீங்கள் அடையத் தீர்மானித்திருக்கிற குறிக்கோள், எப்போதும் உங்களோடு பின்னிப் பிணைந்து நிற்கிற மனப்பான்மை, உங்களைக் குறிப்பிட்ட வழியில் உந்தித் தள்ளிச் செயல்பட வைக்கிற அடிப்படையான உணர்ச்சி முதலிய அளவுகோல்களைத் துணை கொண்டுதான் நீங்கள் தனிமைப் பற்றிய பிரச்சினையில் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியும். விளைவுகளை வைத்துத்தான் அனைத்துச் செயல்களும் தீர்மானிக்கப்படுகின்றன என்பதையும் ஒரு செயல் எல்லாருக்கும் என்றைக்கும் ஒரே விதமான நன்மைகளை—அல்லது தீமைகளைத் தோற்றுவிப்பதில்லை என்பதையும் நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

எனவே மீண்டும் கூறுகிறேன்: இந்த நூல் முழுவதையும் முறைப்படி படித்து முடிப்பதற்கு முன்னர் நீங்கள் எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாது. அடுத்து நான் சொல்லப் போகும் செய்திகளை எல்லாம் சிதறாத எண்ணத்துடன் கவனித்துப் புரிந்து கொண்டால், உங்களுக்குத் தனிமை தேவையா— இல்லையா எனும் பிரச்சினைக்கு நீங்களே தீர்ப்பு வழங்கிக் கொள்ளலாம்.

இங்கே ஓர் உண்மையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் : பக்தர்களுக்கும் துறவிகளுக்கும் நன்மை தருகிற ஒரு செயல் உங்களுக்கு நிச்சயமாகத் தீமை செய்யக் கூடியதாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணுவது தவறு. இல்லறத்தில் நீங்கள் மேற்கொள்கிற செயல்கள் அனைத்தும் துறவறத்திற்கு முற்றிலும் மாறுபட்டவை என்பதையோ துறவிகள் செய்கிற எந்தக் காரியத்திலும் இல்லறத்தின் வர்ணம் அறவே கிடையாது என்பதையோ எவரும் எந்த வழியிலும் நிரூபிக்க முடியாது.

எனவே இடையில் தோன்றும் பிரச்சினைகள் குறித்து வினா எழுப்புகிற மனப்பான்மைக்குச் சிறிது நேரம் ஓய்வு கொடுத்துவிட்டு, தனிமை பற்றிய சிந்தனையில் உங்கள் எண்ணம் முழுவதையும் செலுத்துங்கள்; ஒரு நூலின் முதற் பக்கம் எழுப்புகிற வினாவுக்கு அதன் இறுதிப் பக்கம் விளக்கமாக அமைய முடியும்!

## ஆதரவும் எதிர்ப்பும்

சற்று முன்னர் நான் குறிப்பிட்டதுபோல், தகுதியும் திறமையும் படைத்த அறிஞர்களில் ஒரு சாரார் தனிமையை ஆதரிக்கிற அதே நேரத்தில் மறு சாரார் தனிமைக்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

சுஃப்யான் சவ்ரி, இப்ராஹீம் பின் அத்ஹம், தாவூத் தாயீ, ஃபுளைல் பின் இயால், சுலைமான் கவ்வாஸ், யூசுஃப் பின் அஸ்பாத், ஹுதைஃபா மர்அஷி, பிஷ்ர் காஃபி ஆகியோர் முதற்சாராரைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் வெளிப்படையான சட்டங்களில் மட்டுமன்றி, ஞான மார்க்கத்திலும் ஈடுபாடு கொண்டவர்கள் என்பது அனேகமாக எல்லாருக்கும் தெரிந்த செய்தி. சமுதாயத்தில்



கலந்து வாழ்வதால் அடையமுடியாத நன்மைகளைத் தனிமையில் நிச்சயமாக அடையமுடியும் என்பது இவர்களின் கருத்து.

இரண்டாம் சாராரின் கருத்து இதற்கு நேர் எதிரானது. சயீது பின் முஸய்யப், ஷஅபி, இப்னு அபீ லைலா, ஹிஷாம் பின் உர்வா, இப்னு உயைனா, இப்னுமாலிக், இமாம் ஷாஃபி, அஹ்மது பின் ஹன்பல் முதலியோர் இந்தச் சாராரைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் தனிமைக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, மற்றவர்ளோடு கலந்துவாழ்வதை 'முஸ்தஹப்பு' — 'வரவேற்கத்தகுந்தது' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு மனிதன் மற்றவர்களோடு பழகும்போது தன்னுடைய அறிவை வளர்த்துக் கொள்வதற்குரிய வாய்ப்புக் கிடைக்கிறது; ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. — இப்படிப் பல நன்மைகள் தோன்ற முடியும். இந்த நன்மைகளில் எதுவும் தனித்து வாழும் மனிதனுக்குக் கிடைக்க முடியாது என்பது இவர்களின் தீர்மானம். எனவே இவர்கள் தனிமைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் வியப்புக்குச் சிறிதும் இடம் கிடையாது.

தனிமையைப்பற்றி ஆராய முற்பட்டிருக்கும் நமக்கு இந்த இரு சாராரின் கருத்துக்களையும் அலசிப் பார்த்து முடிவு காணவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தனிமைக்கு எதிராக கூறப்பட்ட கருத்துக்களை நிறுத்துப் பார்ப்பதற்கு முன்னர், தனிமையை வலியுறுத்துகிற செய்திகளை ஆராய்வது முக்கியமான காரியம் என்று எண்ணுகிறேன்.

தனிமைக்கு ஆதரவு தரும் கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. எந்தச் செயலும் விளைவை வைத்துத்தான்

தீர்மானிக்கப்படுகிறது என்ற சட்ட நுணுக்கத்தை மனத்தில் வைத்துக் கொண்டு ஆராயும்போது, இந்தக் கருத்துக்கள் அத்தனைக்கும் நியாயமான காரணங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் நமது முன்னோரிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் செய்திகளில் ஒரு பகுதி காரணங்களுடன் கூடியது; மறுபகுதி காரணங்கள் இல்லாத ஆதரவுக் கருத்துக்களைக் கொண்டது.

'காரணமில்லாத ஆதரவுக் கருத்து' என்று நான் குறிப்பிட்டதிலிருந்து, இத்தகைய கருத்துகளுக்கு உண்மையில் எந்தக் காரணமும் கிடையாது என்று நீங்கள் நினைத்துவிடக்கூடாது. நமது முன்னோரிடமிருந்து வெளிப் பட்டிருக்கிற எந்தக் கருத்துக்கும் காரணம் உண்டு என்ப தைச் சிந்தனையில் ஆர்வம் கொண்ட எந்த மனிதனும் மறுக்கமுடியாது. அவர்கள் சில நேரங்களில் காரணத்தை எடுத்துக்கூறித் தம் கருத்தை மட்டும் வெளியிட்டார்கள். வேறு சில நேரங்களில் காரணத்தை மனத்தில் மறைத்து வைத்துக் கொண்டு கருத்தை மட்டும் வெளியில் கூறினார்கள். இத்தகைய செய்திகளைத்தான் 'காரண மில்லாத ஆதரவுக் கருத்துக்கள்' என்று நான் குறிப்பிடுகிறேன்.

"அறிஞர்கள் தம் கருத்துக்குரிய காரணத்தை மறைத்து வைப்பது நியாயம்தானா?" என்று நீங்கள் என்னிடம் கேட்கத் துணிந்தால் —

"விளையாடும் நேரத்தில் விளையாடு; படிக்க வேண்டிய நேரத்தில் பாடத்தைப் படி!" என்று உங்கள் மகனுக்கு நீங்கள் அறிவுரை கூறியபோது, அதற்குரிய காரணத்தை அந்தச் சிறுவனுக்கு ஏன் எடுத்துச் சொல்லவில்லை என்று எண்ணிப் பார்க்கத் துணியுங்கள்.



இப்போது, தனிமைக்கு ஆதரவு தருகிற இந்தக் கருத்துக்களை முதலில் நாம் ஆராய வேண்டும்.

"உங்கள் தனிமையின் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்பது நபித் தோழர் உமர் பின் கத்தாப் அவர்களின் கருத்து. இஸ்லாத்தின் சட்டங்களில் தனிமைக்கும் ஓர் இடமுண்டு எனும் உண்மை இங்கே வலியுறுத்தப்படுகிறது.

"தனிமையும் இறைவணக்கம்தான்" என்று இமாம் இப்னு சீரீன் கூறுகிறார்கள்.

"இறைவனை நண்பனாக்கிக் கொள்; மனிதர்களை வேறொருபக்கம் விட்டுவிடு!" என்பது இறைஞானம் பெற்றவர்களிடையே பரவலாகக் காணப்படுகிற முதுமொழிகளில் ஒன்று.

துறவி அபூ ரபீவு வேண்டிக் கொண்டார்: "எனக்கு அறிவுரை கூறுங்கள்".

ஞானி தாவூத் தாயீ கொடுத்த அறிவுரை அடுத்து வருகிறது: "மக்களோடு கலந்து வாழாதீர்கள். அவர்களைக் கண்டு பயந்து ஒடுங்கள் — புலியைக்கண்டு பயந்து ஓடுவதுபோல்!"

அறிஞர் ஹஸன் கூறுகிறார்: "நான் 'தௌராத்' திலிருந்து சில வார்த்தைகள் தெரிந்து வைத்திருக்கிறேன். ஒருவன் தன்னிடம் இருப்பதை வைத்துத் திருப்தி அடையும்போது, மற்றவர்களின் உதவியை எதிர்பார்க்காத நிலைக்கு உயர்கிறான். மற்றவர்களின் சகவாசத்தை விட்டுத் தனித்து வாழும்போது பலதரப்பட்ட துன்பங்களி லிருந்து பாதுகாப்புத் தேடிக் கொண்டவனாகிறான். உணர்ச்சியை அடக்கியாளும்போது உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கிறான்."

உஹைப் பின் வர்து சொல்கிறார்: "ஞானம் என்பது பத்துப் பகுதிகள் கொண்டது. அவற்றில் ஒன்பது பகுதிகள் ஒன்றும் பேசாமல் மௌனம் சாதிப்பதில் அடங்கியிருக் கின்றன. ஒரு பகுதி, மக்களைவிட்டுத் தனித்து வாழ்வதில் அடங்கியிருக்கிறது."

அடுத்து வருவது ஞானி சுஃப்யான் சவ்ரியின் கருத்து: "இது, வாயை மூடிக்கொண்டு வீட்டில் தனித்து வாழவேண்டிய காலம்".

மாலிக் பின் அனஸ் அவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்று இங்கு நினைவு கூரத் தகுந்தது. அவர்கள் சமுதாயத்தில் பெரிதும் கலந்து வாழ்ந்தார்கள்; யாரேனும் மரணமடைந்தால் அவர்கள் விரைந்து சென்றார்கள்; யாரேனும் நோயுற்றிருப்பதாகக் கேள்விப்பட்டால் வீட்டைத் தேடிச் சென்றார்கள். ஆனால் நாளடைவில் அவர்களின் செயல் மாறுதல் அடைந்துவிட்டது. சமுதாயத்தோடு தொடர்பு கொண்ட காரியங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக விட்டுவிட்டார்கள்.

இந்த மனமாற்றம் குறித்து வினவப்பட்டபோது அவர்கள் இப்படிப் பதில் கொடுத்தார்கள்: "ஒரு மனிதன் தன்னுடைய பலத்தையும் பலவீனத்தையும் வெளியில் எடுத்துக் கூறுவது சாத்தியமில்லை".

சஅது பின் அபீ வக்காஸ், சயீது பின் ஸைது ஆகிய இருவரும் சமுதாயத்தைவிட்டு விலகித் தனிமையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். வெளியில் நடைபெறுகிற எந்தக் காரியத்திலும் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வ தில்லை. வெள்ளிக்கிழமைதோறும் நடத்தப்படுகிற ஜும்ஆத் தொழுகைக்கும் அவர்கள் வருவதில்லை. அவர்கள் இருவரும் மரணமடையும்வரை இந்த நடைமுறையில் சிறிதும் மாறுதல் தோன்றவில்லை.



"வீட்டின் நடுப்பகுதியே மற்ற இடங்கள் அனைத்தையும் விடச் சிறந்தது. அங்கிருந்து நீங்கள் யாரையும் பார்க்க முடியாது; யாரும் உங்களைப் பார்க்க இயலாது!" என்று இப்னு அப்பாஸ் தீர்ப்பு வழங்குகிறார்கள்.

"இறைவன்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். தனித்து வாழ்வது 'ஹலால்' ஆகிவிட்டது" என்று ஞானி சுஃப்யான் சவ்ரி அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்கள் என்று யூசுஃப் பின் அஸ்பாத் கூறுகிறார். — இவர் சுஃப்யான் சவ்ரியுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டு வாழ்ந்தவர்.

மேலே இடம் பெற்ற செய்திகள் அனைத்தும் ஒருமுக மாகத் தனிமைக்கு ஆதரவு கொடுக்கின்றன. இவை அனைத்தும், முன்னர் நான் குறிப்பிட்டதுபோல், காரண மில்லாத ஆதரவுக் கருத்துக்களாகும். காரணங்களுடன் கூறிய கருத்துக்களை இப்போது நாம் ஆராயவேண்டிய தில்லை. ஏனெனில் அவை உரிய கட்டத்தில் இடம் பெறவிருக்கின்றன.

### தனிமைக்கு எதிர்ப்பு

அறிஞர்களில் ஒரு சாரார் தனிமைக்கு ஆதரவு தருகிற அதே நேரத்தில் மறு சாரார் சமுதாய வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டேன். அவர்கள் ஏன் இப்படி எதிர்ப்புத் தெரிவிக் கிறார்கள் என்பதை இப்போது நாம் ஆராயவேண்டும். தம் கருத்துக்கு அவர்கள் கொடுக்கும் ஆதாரங்கள் வலிமை மிக்கவைதானா என்று சிந்திக்க வேண்டும்.

"வேற்றுமை கொண்டு விலகிப் போனவர்களைப் போல் இருக்காதீர்கள்" என்பது திருக்குர்ஆனின் வசனங்களில் ஒன்று. தனிமையை எதிர்த்துச் சமுதாய வாழ்வுக்கு ஆதரவு கொடுக்கும் அறிஞர்கள் இந்த வசனத்தைத் தம் கருத்துக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

அவர்கள் இப்படிக் கூறுகிறார்கள் :

"ஒருவன் தனிமையில் வாழத் தயாராகும்போது, சமுதாயத்தோடு இணைந்து போகாமல் வேற்றுமை கொண்டவனாகிறான்; மற்ற மனிதர்களைவிட்டு விலகிச் சென்றவனாகிறான். எனவே இந்த இறைவசனம் சமுதாயத்தில் கலந்துவாழ்வதை ஆதரிக்கிற அதே நேரத்தில், தனிமைக்கு எதிர்ப்பும் தெரிவிக்கிறது."

இந்தக் கருத்து மிகத் தெளிவானதாகவும் ஆதாரப் பூர்வமானதாகவும் தோன்றுகிறது. உங்களில் பலர் இதனை அப்படியே ஏற்றுக்கொண்டு தனிமைக்கு எதிராகத் தீர்ப்புக் கொடுக்கவும் துணியலாம். ஆனால் நீங்கள் அவர்களை ஒருபோதும் பின்பற்றக்கூடாது. ஏனெனில் வெளித் தோற்றத்தை மட்டிலும் ஆதாரமாக வைத்து முடிவுக்கு வந்ததால் ஏற்பட்ட தீய விளைவுகள் வரலாற்றின் பக்கங்களை நிரப்பிக் கொண்டிருக்கின்றன.

நீங்கள் தனிமையைத் தேர்ந்தெடுத்து வாழும்போது, மக்கள்மீது நீங்கள் கொண்டிருக்கும் வெறுப்புத்தான் அதற்குக் காரணம் என்று எவரும் நிரூபிக்க முடியாது. மக்களின் நல்வாழ்வில் பெரிதும் அக்கறை கொண்ட அறிஞர்கள் பலர் மலைக்குகைகளில் வாசம் செய்து வந்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குப் புதிய செய்தியல்ல.

தவிர, இந்த வசனம் சமுதாயத்தைவிட்டுப் பிரிந்து தனித்து வாழ்கிறவர்களைத்தான் குறிக்கிறது என்று யாரேனும் கூறினால், அவர்கள் இந்த வசனத்தின் நோக்கத்தை அறவே புரிந்துகொள்ளவில்லை என்பது என் கருத்து. ஏனெனில் இந்த வசனத்துக்கும் தனிமைக்கும் சம்பந்தமே கிடையாது.

அப்படியானால் இந்த இறைக் கருத்துக்கு நோக்கம் தான் என்ன?



இந்தக் கேள்விக்கு நான் கொடுக்கும் விடை சுருக்கமானது மட்டுமல்ல, உண்மையிலேயே ஆதாரப்பூர்வ மானதுமாகும். திருக்குர்ஆனின் வசனங்களுக்குப் பொருள் கொடுப்பதிலும் சட்ட நுணுக்கம் பற்றிய பிரச்சினையில் முடிவுக்கு வருவதிலும் தோன்றுகிற கருத்து வேற்றுமை தான் இங்கே குறிக்கப்படுகிறது.

எனவே இந்த வசனத்தை வைத்துத் தனிமைக்கு எதிராக எவரும் எந்தத் தீர்மானத்திற்கும் வரமுடியாது.

## தனிமைக்கும் அன்புக்கும் பகைமை கிடையாது

தனிமைக்கு எதிராக எடுத்துக் காட்டப்படும் ஆதாரங் களில் மற்றொன்று இது: "இறைவன் உங்கள் உள்ளங் களுக்கிடையே பாசப் பிணைப்பை ஏற்படுத்தினான்."

வேறொன்று அடுத்து வருகிறது: "மூமின் என்பவன் அன்பு மயமானவனாகவும் அன்பு செலுத்தப்படுகிற வனாகவும் இருக்க வேண்டும். அன்பு காட்டாத, அன்பு காட்டப்படாத மனிதர்களால் எந்த நன்மையும் கிடையாது." — இவற்றில் முந்தியது இறைவசனம் ஒன்றில் ஒரு பகுதி; அடுத்தது பெருமானார் கூறிய கருத்துக்களில் ஒன்று.

மேலே நான் குறிப்பிட்ட செய்திகளை நீங்கள் நன்கு கவனித்திருந்தால், இந்த ஆதாரங்கள் இரண்டும் தனிமைக்கு எதிரானவை அல்ல என்பதைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்.

இந்த இறைவசனம், முஸ்லிம்களிடையே காணப்பட்ட ஒற்றுமையையும் அவர்களின் இதயங்களில் பரவி நின்ற பாசப் பிணைப்பையும் தான் தெளிவுப்படுத்துகிறதே தவிர, தனிமைக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ எந்தக் கருத்தையும் சுட்டிக் காட்டவில்லை.

'மனத்தில் பரவி நிற்கிற பாசம், சமுதாயத்தை விட்டுப் பிரிந்து தனித்து வாழும்போது குறைந்து போகக் கூடும்!'

என்று விவாதம் செய்வதற்கும் இங்கே வழி கிடையாது. ஏனெனில் பிரிவு என்பது பாசத்துக்குத் தெம்பு சேர்க்குமே யன்றி அன்புக்குப் பாதகம் செய்யாது.

"ஒருநாள்விட்டு மறுநாள் சந்தியுங்கள். இது அன்பை அதிகப்படுத்துவதாகும்" என்று பெருமானார் பேசுகிறார்கள். பிரிந்தவர்கள் ஒன்று சேரும்போது அங்கே என்ன நடக்கிறது என்று கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்: தனிமை என்பது பாசத்துக்கும் அன்புக்கும் எதிரானதல்ல என்பதை நீங்கள் சுத்தமாகத் தெரிந்து கொள்ளலாம்.

இப்போது, தனிமைக்கு எதிராக எடுத்துக் காட்டப் பட்ட நபிக் கருத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

இந்த நபிக் கருத்து, ஒரு மூமினுக்கு இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறது. அவன் அன்புள்ளம் படைத்தவனாகவும் மற்றவர்களின் அன்புக்கு அருகதை பெற்றவனாகவும் இருக்கவேண்டும் என்று அறிவுரை கூறுகிறது. வெறுப்பு, பகைமை, விரக்தி, பொறாமை முதலான தீயபண்புகளுக்கு அவனுடைய உள்ளத்தில் இடம் இருக்கக்கூடாது என்று எச்சரிக்கை செய்கிறது.

ஆனால் சமுதாயத்தில் கலந்து வாழ்வதால் மனத்தில் குடியேறுகிற தீய பண்புகளைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் — அல்லது வரவேற்கத்தகுந்த நற்பண்பு களை வளர்த்துக் கொள்ளும் எண்ணத்துடன் ஒருவன் தனிமையை மேற்கொள்ளும்போது, இந்த நபிமொழி அவனுக்கு எப்படித் தடைபோட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை!

தனிமையைத் தகர்க்கும் குறிக்கோளை மனத்தில் வைத்துக் கொண்டு இந்த நபிக் கருத்தை ஆதாரமாகத் தேர்ந்தெடுத்தவர்கள், தனித்து வாழும் மனிதனின் உள்ளத்தில் மிக உயர்ந்த பண்புகள் மலர்ந்து விரிய முடியும் என்பதையும் —



சமுதாயத்தில் கலந்து நிற்கும் மனிதனின் எண்ணத்தில் மிகக் கொடிய பண்புகள் வளரக்கூடும் என்பதையும் உணரும் தகுதியற்றவர்கள் என்று என்னால் நம்ப முடியவில்லை!

எனவே சமுதாய வாழ்வில்தான் நற்பண்புகள் உருவாக முடியும் என்று கூறுவதும் தனித்து வாழும்போது அங்கே தீய பண்புகளைத் தவிர்த்து வேறு எதுவும் வளர முடியாது என்று சொல்வதும் உண்மை நிலைக்கு முற்றிலும் முரண்பட்டவையாகும்.

நீங்கள் இன்னும் ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்தால் வியப்புத் தருகிற உண்மை ஒன்றைத் தெரிந்து கொள்ளும் பேறு உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும்.

ஒருவன் தனித்து வாழும்போது தோன்ற முடியாத தீய பண்புகள், சமுதாயத்தில் கலந்து உறவாடும்போது அவன் மனத்தில் நிரந்தரமாக இடம்பிடித்துக் கொள்கின்றன.

இதனால்தான் நான் சொல்கிறேன்: தனிமையை எதிர்க்கும் எண்ணத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நபிக்கருத்து, சமுதாய வாழ்வை வலியுறுத்துகிற ஆதாரமல்ல. இதை வைத்துக் கொண்டு எவரும் தனிமைக்குத் தடைபோட முடியாது.

### குறுக்கே புகுந்த வினா

இங்கே நீங்கள் வழக்கம்போல் குறுக்கே புகுந்து வினா எழுப்புகிறீர்கள்.

"அப்படியானால் ஒருவன் சமுதாயத்தில் இணைந்து வாழ்வது கூடாது என்று கூறுகிறீர்களா? அவன் தன் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கவேண்டும் என்று சொல்கிறீர்களா?"

இப்போது நாம் எதைப்பற்றி உரையாடிக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சமுதாய வாழ்வைத் துறந்துவிட்டுத் தனிமையை மேற்கொள்ளும்போது எத்தகைய நன்மைகள் தோன்றுகின்றன, எப்படிப்பட்ட தீமைகள் உருவாகின்றன என்பதைப் பற்றித்தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இப்போது இந்த வழியில் தான் நம் சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

இதற்குப் பின்னர் சமுதாய வாழ்வைப்பற்றி நாம் உரையாடப் போகிறோம். இப்போது தோன்றுகிற வினாக்களை நினைவில் வைத்திருந்து அப்போது கேளுங்கள். சில கட்டங்களில் கேள்வி கேட்பதற்கும் பொறுமை தேவைப்படுகிறது.

'தனித்து வாழ்வதைவிடச் சமுதாய மக்களோடு கலந்து கிடப்பதே சிறந்தது' என்று கூறுகிறவர்களில் நீங்களும் ஒருவர் என்றால், உங்களிடமிருந்து ஒரு மறுப்புக் குரலை நான் எதிர்பார்க்கிறேன்.

என்னைப் பார்த்து இப்படிக் கேட்கிறீர்கள்: இதுவரை நீங்கள் எடுத்துக் கூறிவந்த செய்திகளிலிருந்து, தனிமையை வலியுறுத்தும் நோக்கம் உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். பெருமானாரிடமிருந்து எனக்குக் கிடைத்திருக்கிற செய்திகளை வைத்துப் பார்க்கும்போது, உங்கள் நோக்கம் இஸ்லாத்தின் போதனைகளுக்கு நேர் எதிரானது என்று தயக்கமின்றித் தீர்மானிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

"ஒருவன் 'ஜமாஅத்'தைவிட்டு ஒரு சாண் விலகிச் சென்றால் இஸ்லாத்தின் வளையம் அவன் கழுத்தைவிட்டுக் கழன்றுபோகும்" என்று பெருமானார் கூறியிருக்கிற செய்தியை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். 'ஜமாஅத்' என்ற சொல்லுக்குச் 'சமுதாயம்' என்பது பொருளாகும்.



இந்த நபிமொழி ஆதாரப்பூர்வமானது என்பதை நீங்கள் மறுக்க முடியாது. 'ஸிஹாஹ் ஸித்தா' என்று குறிக்கப்படுகிற ஆறு ஹதீஸ் தொகுப்புக்களில் ஒன்றான 'ஸஹீஹ் முஸ்லிம்' எனும் நூலில் இந்த நபிமொழி காணப்படுகிறது.

எனவே சமுதாய வாழ்வைவிடத் தனிமையை உயர்த்திக் கூறுவது, பெருமானாரின் அறிவுரைக்கு எதிரான செயலாகும். இந்த நபிக் கருத்தை எதிரில் வைத்துக் கொண்டு நீங்கள் தனிமைக்கு எப்படி ஆதரவு கொடுக்க முடியும்?

நான் சொல்கிறேன் :

இந்த நபிக் கருத்து ஆதாரப்பூர்வமானதுதான் என்பதை நிரூபிப்பதற்கு நீங்கள் பெருத்த சிரமத்தை மேற்கொண்டிருக்கிறீர்கள். இந்த நபிமொழியை நான் முழுமனத்துடன் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் 'ஸஹீஹ் முஸ்லிம்' எனும் ஹதீஸ் தொகுப்பைப் புரட்டிப்பார்த்து ஆதாரம் தேடுகிற சிரமத்தை ஏற்றுக் கொண்ட நீங்கள் அதற்குரிய விரிவுரைகளையும் சற்று ஆராய்ந்து பார்த்திருந்தால்—

'ஜமாஅத்' என்ற வார்த்தைக்கு 'சமுதாயம்' எனப் பொருள் கொடுக்க முடியாது என்பதையும் நீங்கள் நிச்சயமாக உணர்ந்திருக்க முடியும்.

சில கட்டங்களில் 'ஜமாஅத்' எனும் வார்த்தை சமுதாயத்தைக் குறிப்பதுண்டு என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றாலும் இந்த நபிக் கருத்தில் 'ஜமாஅத்' என்ற சொல் சமுதாயத்தைக் குறிக்கவில்லை என்று கூறுவதில் எனக்குச் சிறிதும் தயக்கம் கிடையாது.

'ஜமாஅத்' எனும் வார்த்தைக்கு 'கூட்டம்' என்றும் 'குழு' என்றும் பொருள் கொடுக்கலாம். இது அகராதியை அடிப்படையாகக் கொண்ட நேரடி மொழிபெயர்ப்பு.

நீங்கள் எடுத்துக்காட்டிய நபிக்கருத்து எந்தச் சூழலில் வெளியிடப்பட்டது என்பதைக் கவனித்துப் பார்க்கும்போது, 'ஜமாஅத்' எனும் சொல் இங்கே ஒரு குழு — அல்லது சிறியதொரு கூட்டம் என்ற பொருளில் தான் உபயோகிக்கப் பட்டிருக்கிறது எனும் தெளிவு நமக்குக் கிடைக்கிறது.

ஒரு குறிக்கோளை அடையும் எண்ணத்தில் ஓர் ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டு ஒரு தலைவனுக்குக் கீழே இயங்குகிற ஒரு குழு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்த நபிக்கருத்து இலக்கணம் வகுத்துக் கொடுக்கிறது.

வெளிநாட்டு மன்னர்களுக்கு இஸ்லாத்தின் செய்திகளை எடுத்துச்சென்ற தூதுக்குழுவை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

பகைமையினால் இரண்டுபட்டுக் கிடக்கிற ஒரு குடும்பத்தை ஒன்றுபடுத்தும் நோக்கத்தில் அனுப்பப்படுகிற சமாதானக் குழு மற்றோர் உதாரணமாகும்.

சீர்குலைந்து போயிருக்கும் ஒரு சமுதாயத்தைச் சரியான ஒழுக்க நிலைக்கு உயர்த்தும் நோக்கத்தில் புறப்பட்டுச் செல்கிற சீர்திருத்தக் குழுவும் பொருத்தமான உதாரணம்தான்.

இத்தகைய 'ஜமாஅத்' — அல்லது குழு இரண்டு மூன்று பேர் கொண்டதாகவும் இருக்கலாம்; இருபது முப்பது பேர் கொண்டதாகவும் அமையலாம்.

இந்த 'ஜமாஅத்'தின் உறுப்பினர்கள் தாம் மேற்கொண்டிருக்கும் பொறுப்பில் அக்கறை கொண்டவர்களாகவும் தலைவனின் ஆணைகளுக்கு உட்பட்டு நடக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்களில் ஒருவன் 'ஜமாஅத்'தின் சட்டங்களைப் புறக்கணித்து ஒரு சாண் விலகிச்சென்றால் அவன் இஸ்லாத்தின் எல்லைக் கோட்டைத் தாண்டியவனாகிறான் என்று பெருமானார் தீர்ப்புக் கொடுத்தார்கள்.



எனவே இந்த நபிமொழியை வைத்துக்கொண்டு தனிமைக்கு எதிராக ஆதாரம் காட்டுவது—

வண்டியை இழுக்கிற குதிரைக்குக் கொடுக்க வேண்டிய தீனியை வண்டியோட்டிக்கு உணவாகக் கொடுக்கிற செயலைப் போன்றது.

**வெறுப்புக்கும் ஓர் எல்லை உண்டு**

மேலே இடம்பெற்ற விளக்கத்தை உள்ளத்தில் வைத்து உற்றுப் பார்க்க விரும்பாத காரணத்தால் இப்போது நீங்கள் 'ஸஹீஹ் புகாரி' எனும் ஹதீஸ் தொகுப்பைத் துணைக்குக் கூப்பிடுகிறீர்கள். நீங்கள் இப்படிக் கேட்கிறீர்கள்:

> நபிமொழித் தொகுப்புக்களில் மிகச் சிறந்தது 'ஸஹீஹ் புகாரி' எனும் நூலாகும். இந்தத் தொகுப்பில் காணப்படும் நபிக் கருத்துக்கள் ஆதாரப்பூர்வமானவை என்பதை நீங்கள் மறுக்க முடியாது. இந்தத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட நபிக் கருத்து ஒன்றை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
>
> "ஒரு மனிதன் மற்றொரு மனிதனை மூன்று நாட்களுக்குமேல் வெறுத்திருப்பது கூடாது..."
>
> இந்த நபிக் கருத்து மக்களிடையே ஒற்றுமை நிலைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிற அதே நேரத்தில் ஒருவர்மீது மற்றொருவர் வெறுப்புக் கொண்டு பகைமையை வளர்த்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்கிறது.
>
> எனவே மக்கள்மீது வெறுப்புக் கொண்டு ஒருவன் தனிமையைத் தேர்ந்தெடுக்கும்போது அவனுடைய செயலுக்கு இஸ்லாம் எப்படி அனுமதி கொடுக்க முடியும்?

இந்த நபிக் கருத்து ஸஹீஹ் புகாரியில் மட்டுமன்றி, ஸஹீஹ் முஸ்லிம் எனும் தொகுப்பிலும் காணப்படுகிறது. இந்த நபிமொழியின் வலிமை குறித்து எவரும் வினா எழுப்பமுடியாது. இது ஆதாரப்பூர்வமான நபிக் கருத்துத் தான் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இங்கே எனக்கும் உங்களுக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. இந்த நபிமொழி வெறுப்புக்கும் பகைமைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். இதற்கும் என்னுடைய ஒப்புதல் உண்டு.

ஆனால் இந்த நபிக்கருத்து, சமுதாய வாழ்வுக்கு ஆதரவாகவும் தனிமைக்கு எதிராகவும் அமைந்திருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள் அல்லவா? இங்கே தான் எனக்கும் உங்களுக்கும் கருத்து வேறுபாடு தோன்றுகிறது.

ஒருவன் மற்றவர்கள்மீது சினம் கொண்டு வெறுப்படைந்து தனிமையைத் தேர்ந்தெடுப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த நபிக் கருத்து, மற்றவர்கள்மீது கோபம் கொண்டு வெறுப்படைவதைக் கண்டிக்கிறதே தவிர, அவன் தேர்ந்தெடுக்கும் தனிமையை எதிர்க்கவில்லை!

சமுதாய மக்கள்மீது ஏற்பட்ட வெறுப்பினால்தான் ஒவ்வொரு மனிதனும் தனிமையை நாடிச் செல்கிறான் என்றோ—

தனித்து வாழ்கிறவர்கள் எல்லாரும் சமுதாய மக்கள்மீது வெறுப்பை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் என்றோ உங்களால் நிரூபிக்க முடியாது.

இதேபோன்று, சமுதாயத்தோடு கலந்து வாழ்கிறவர் களுக்குச் சினமும் வெறுப்பும் கிடையாது என்றோ —

சமுதாயத்தோடு இணைந்து வாழ்கிறவர்கள் சினத்தையும் வெறுப்பையும் வேரோடு வெட்டி எறிந்து விடுகிறார்கள் என்றோ எவரும் கூறமுடியாது. அப்படி



யாரேனும் கூற முன்வந்தால், அவர்களின் கூற்று உண்மை நிலைக்கு முற்றிலும் எதிரானது என்பதை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

'ஹிரா' குகையின் தனிமையை நாடிச் சென்ற பெருமானார் தம் சமுதாயத்தின்மீது பேரன்பு கொண்டிருந் தார்கள் என்பதும்—

எப்போதும் மக்களோடு பின்னிப் பிணைந்து உறவாடிக் கொண்டிருந்த அபூஜஹ்லின் நெஞ்சத்தில் பகைமையும் பொறாமையும் குடிகொண்டிருந்தன என்பதும் வரலாற்றின் பொன்னேடுகளிலிருந்து நாம் பொறுக்கி எடுத்த செய்திகளாகும்.

சினத்தின் சக்திக்கு அடிமைப்பட்ட ஒருவன் மற்றவர் களிடம் உரையாடுவதை நிறுத்திக் கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் மற்றவர்களுக்கு 'சலாம்' சொல்வதுமில்லை; மற்றவர்கள் சொல்லும் 'சலாமு'க்குப் பதில் கொடுப்பதுமில்லை.— 'மூன்று நாட்களுக்குமேல் வெறுத்திருப்பது கூடாது' என்ற நபிக் கருத்து இப்படிப்பட்ட மனிதனைத்தான் கண்டிக்கிறதேயன்றி, நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் தனிமையைத் தேடிச்செல்கிற மனிதனை அல்ல!

**வெறுப்புக்கு விதிவிலக்கு**

இங்கே முக்கியமான செய்தியொன்றை நீங்கள் கவனிக்க வேண்டும்: பெருமானாரின் கட்டளை பொதுவாகக் கூறப்பட்ட ஒன்று. பொதுச் சட்டங்கள் அனைத்துக்கும் சில விதிவிலக்குகள் இருக்கின்றன. 'ஒரு மனிதன் மற்றொரு மனிதனை மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்திருப்பது கூடாது' என்ற இந்தக் கட்டளைக்கும் விதிவிலக்கு உண்டு. இப்படிப்பட்ட விதிவிலக்கு இரண்டு கட்டங்களில் தோன்றுகின்றன. இந்தக் கட்டங்களில் ஒருவன்

மற்றொருவனை மூன்று நாட்களுக்கு மேலே வெறுத்திருப்பதற்கு இஸ்லாம் அனுமதி கொடுக்கிறது.

*முதற் கட்டம்*: நீங்கள் ஒரு மனிதன்மீது பேரன்பு வைத்திருக்கிறீர்கள். அவனுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்கிறீர்கள். அவன் உழைத்துப் பாடுபடும் நேரத்தில், "நான் இருக்கும்போது நீ ஏன் சிரமப்பட வேண்டும்? உன் முகத்தில் வேர்வைத் துளிகள் ஒருபோதும் தோன்றக்கூடாது!" என்று கூறுகிறீர்கள்.

இதனால் ஏற்படும் தீய விளைவுகள்: அவன் உழைப்பின்றி ஊதியம் பெறுகிற எண்ணத்தை வளர்த்துக் கொள்கிறான். வேலை செய்யாமல் கூலி வாங்க நினைக்கிற மனப்பண்புக்கு அடிமைப்படுகிறான். தனக்குத்தேவைப்படுகிற அனைத்தும் சிரமமின்றிக் கிடைத்துவிடுகிற காரணத்தால் அவன் தன் தகுதிக்கு மேற்பட்ட பொருள்களில் ஆசை கொள்கிறான். அன்பின் அரவணைப்பிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தினால், சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்மீது அன்பு செலுத்த வேண்டும் என்று நினைக்கிறான்; அன்பு கிடைக்காத சூழலில் தன்னைத்தானே நொந்துகொண்டு— மற்றவர்கள்மீது குற்றத்தைச் சுமத்திவிட்டு முன்னேற்றப்பாதையிலிருந்து விலகி நிற்கிறான்.

இவை அனைத்தும் அவனுக்கு உங்களிடமிருந்து கிடைக்கிற அன்பினால் தோன்றுகின்றன. இப்படிப்பட்ட கட்டத்தில் அவனை வெறுப்பதற்கு இஸ்லாம் அனுமதி கொடுக்கிறது. ஏனெனில் இங்கே அன்பு எனும் பண்பு நன்மைகளைத் தோற்றுவிக்கத் தவறிவிடுகிறது என்பது மட்டுமல்ல, பல்வேறு தீமைகள் தோன்றுவதற்கு வழியையும் வகுத்துக் கொடுத்துவிடுகிறது. மொத்தத்தில், ஒரு மனிதனின் வாழ்க்கையில் அன்பினால் தீமையும் வெறுப்பினால் நன்மையும் தோன்றினால், அந்தக் கட்டத்தில் முன்னதன் சிறப்பைப் பின்னது அடைந்துவிடும். செயல்கள் அனைத்தும், அவற்றினால் தோன்றுகிற விளைவுகளை வைத்தே தீர்மானிக்கப்படுகின்றன எனும் சட்ட நுணுக்கம் இங்கே நினைவுகூரத் தகுந்தது.



எனவே நீங்கள் ஒரு மனிதனை வெறுக்கும்போது உங்கள் வெறுப்பு அவனுக்கு நன்மை செய்யக்கூடும் என்று தோன்றினால், அவனை மூன்று நாட்களுக்கு மேலே வெறுத்திருப்பதற்கு இஸ்லாம் சலுகை கொடுக்கிறது.

*இரண்டாம் கட்டம்*: மற்றவர்களை வெறுக்கிற காரணத்தினால் உங்களுக்கு நற்பயன் கிடைக்க முடியும் என்று தெரிந்தால் அங்கே உங்கள் மனத்தில் மூன்று நாட்களுக்குமேல் வெறுப்பு நிலைப்பதற்குச் சட்டம் இடம் தருகிறது.

வெறுப்பு என்பது என்றைக்கும் தீங்கு செய்கிற பண்புகளில் ஒன்று. மனத்தில் வெறுப்பைத் தேக்கி வைத்திருப்பவர்கள் ஒருபோதும் அமைதி அடைவதில்லை என்பது ஆதாரம் கொடுத்து நிரூபிக்க வேண்டிய செய்தியல்ல.

"மக்கள்மீது வெறுப்புக் கொண்டவர்களுக்கு இறைவனின் அன்பு கிடைக்காது" என்று அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

வெறுப்பினால் நன்மை தோன்ற முடியும் என்று நீங்கள் சொல்வதைக் கேட்கும்போது எனக்குப் பெருத்த வியப்புத் தோன்றுகிறது. எனவே வெறுப்பினால் சிறிதளவேனும் நன்மை கிடைக்க முடியும் என்ற கருத்துக்கு விளக்கம் தர முடியுமா?

—நீங்கள் இப்படி வினா எழுப்பினால் அது இடத்துக்குப் பொருத்தமற்ற கேள்வி என்று என்னால் கூற முடியாது. இந்தக் கேள்வி நியாயமானது மட்டுமல்ல, நிச்சயமாக உங்களுக்கு நன்மை தரக் கூடியதுமாகும்.

அன்பும் வெறுப்பும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு பண்புகளாகும். இவை இரண்டும் மனிதர்கள் அனைவருக்கும் இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விரும்புவதும் வெறுப்பதும் மானிட இயற்கைக்கு அப்பாற்பட்டவை அல்ல என்று எவரும் துணிந்து கூறலாம். இந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டால், வெறுப்பினாலும் சில நேரங்களில் நன்மை தோன்ற முடியும் என்பதில் உங்களுக்குச் சந்தேகம் வரமுடியாது. ஏனெனில் மனித உணர்ச்சிகளை ஊடுருவிப் பார்த்து உண்மையைத் தெரிந்து கொண்ட ஞானிகள், ''மனித மனத்தில் குடிகொண்டு நிற்கிற உணர்ச்சிகள் அனைத்தும் அவனுக்கு நன்மை தரக் கூடியவைதான். இதனால்தான் கெட்ட உணர்ச்சி என்று கருதப்படுகிற கோபத்தைக் கட்டோடு அழித்துவிடுவதற்கு இஸ்லாத்தில் அனுமதி கிடையாது!" என்று கூறுகிறார்கள்.

''சினம் கொள்ள வேண்டிய கட்டத்தில் ஒரு மனிதனுக்குச் சினம் வரவில்லை என்றால் அவனைக் கழுதை என்று குறிப்பிடலாம்" என்று இமாம் ஷாஃபி கூறிய கருத்தைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். சில நேரங்களில் அன்பைவைத்து அடையமுடியாத நன்மைகளைக் கோபத்தின் துணைகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்பதற்கு உங்கள் வாழ்க்கையை உற்றுப் பார்ப்பதன் மூலம் நீங்கள் ஆதாரம் தேடிக் கொள்ளலாம்.

அன்பு என்பது பெரும்பான்மையாக நன்மையைத் தோற்றுவிக்கக் கூடியது. வெறுப்பு என்பது பெரும்பான்மை யாகத் தீமையை உண்டாக்கக் கூடியது. எனவே முன்னது பாராட்டப்படுகிற அதேநேரத்தில் பின்னது இகழப்படுகிறது. முன்னது நற்பண்பு என்று குறிக்கப்படுகிற அதேவேளையில் பின்னது துர்ப்பண்பு என்ற பெயரை அடைகிறது. சில நேரங் களில், செலுத்தப்படும் அன்பு தீய விளைவையும் காட்டப்படும் வெறுப்பு நல்ல பயனையும் உருவாக்கமுடியும்.



இப்படி மாறுபட்ட விளைவுகள் தோன்றமுடியும் என்பது மனித வாழ்க்கையைக் கூர்ந்து கவனிக்கிற எவருக்கும் தெரியாத செய்தியல்ல. வெறுப்பினால் உருவாகும் நன்மை வெறுக்கப்பட்டவனுக்குக் கிடைத்தால் — அல்லது வெறுக்கிறவனுக்குக் கிடைத்தால், மனத்தில் வெறுப்பை வைத்துக் கொள்வதற்கு இஸ்லாம் அனுமதி கொடுக்கிறது.

இங்கே நீங்கள், 'வெறுப்பினால் எந்த நன்மையும் தோன்ற முடியாது' என்று வாதம் செய்கிறீர்கள். 'வெறுப்பு என்பது என்றைக்கும் தீங்கு செய்யக் கூடியதுதான்' என்று அடித்துப் பேசுகிறீர்கள்.

எனவே உங்கள் கருத்து உண்மை நிலைக்குப் பொருத்தமானதுதானா என்று ஆராயவேண்டிய அவசியம் இப்போது நமக்கு முன்னால் வந்து நிற்கிறது.

'வெறுப்பு என்பது என்றைக்கும் தீங்கு செய்யக் கூடியதுதான்' என்று விவாதம் செய்யும் நீங்கள், அநீதியையும் ஒழுங்கீனத்தையும் வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுவதையும்—

தீயவர்களை வெறுக்கிற காரணத்தால் உங்களுக்கு அவர்களின் தீய குணங்கள் ஒட்டிக் கொள்ளாதபடி பாதுகாப்புக் கிடைக்கிறது என்பதையும்—

நல்லவர்கள்மீது அன்பு வைக்காத காரணத்தால் அவர்களின் நற்பண்புகள் உங்கள் மனத்தில் பதிந்து நின்று உங்களை நல்லவராக மாற்றுகிற வாய்ப்பு அழிந்துவிடுகிறது என்பதையும் சிறிதுநேரம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மனத்தில் வெறுப்பைத் தேக்கி வைத்திருப்பவர் ஒரு போதும் அமைதி அடைவதில்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள்.

இந்தக் கூற்றை மட்டுமன்றி, வெறுப்பைத் தேக்கி வைத்து வாழ்கிறவர்கள் பலதரப்பட்ட நோய்களுக்குப் பலி

யாகிறார்கள் என்ற கருத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். வெறுப்புக்கு அடி மனத்தில் நிரந்தர இடம் கொடுத்துவிட்ட காரணத்தால் பைத்தியம் பிடித்தவர்களையும் நான் கண்டிருக்கிறேன்.

இந்த விளைவுகளுக்கு வெறுப்புத்தான் காரணம் என்று நிரூபிப்பது சாதாரணக் காரியமல்ல. ஏனெனில் மனஅமைதியுடனும் சுத்தமான பகுத்தறிவுடனும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் உள்ளத்தில் வெறுப்புக்குச் சிறிதும் இடம் கிடையாது என்று நானும் கூற முடியாது; நீங்களும் சொல்ல முடியாது.

மனித மனத்தில் பின்னிக் கிடக்கிற உணர்ச்சிகள் அனைத்தும் அவனுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் படைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, அவன் அமைதி இழந்து தவிக்க வேண்டும் எனும் நோக்கத்தில் அல்ல. 'அவற்றை முறையான பயிற்சிக்கு உட்படுத்தி உபயோகிக்கும்போது தீய பண்புகளை வைத்தே நற்பயன்கள் பலவற்றை நிச்சயமாக அடைய முடியும்' என்பது ஞான மார்க்கத்தில் பரிச்சயமுள்ள எவரும் மறுக்காத ஒன்று.

அடக்கியாளப்பட வேண்டிய உணர்ச்சிகளை அரியாசனத்தில் உட்காரவைத்துவிட்டு, அடக்கியாளப் பிறந்த மனிதன் அவற்றிற்கு அடங்கி நடக்கும்போது அங்கே தீயவிளைவுகளைத் தவிர்த்து வேறு எதுவும் தோன்றுவதற்கு வாய்ப்பு இருக்க முடியாது.

அன்பு, ஆர்வம், கனிவு, பக்தி முதலான நற்பண்பு களுக்கு எப்படி வேலை கொடுக்க வேண்டும் என்று எல்லைக்கோடு போட்ட இஸ்லாம்—

வெறுப்பு, சினம், பரபரப்பு, சந்தேகம், பொறாமை முதலிய தீய பண்புகளை எவ்வாறு உபயோகிக்கவேண்டும் என்பதற்கும் வரையறை வகுத்துக் கொடுத்திருக்கிறது. இஸ்லாம் வரைந்து தந்திருக்கிற இந்தச் சட்டங்களை



ஒருவன் சரியாகப் பின்பற்றி வாழும்போது, எந்தத் தீய பண்பும் அவனுக்குத் தீமையைக் கொண்டு வர முடியாது.

இந்தச் சட்டங்களைப் புறக்கணிக்கும் மனிதன், உணர்ந்தோ உணராமலோ, பொங்கிவரும் தீயஉணர்ச்சி களுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொள்கிறான். இதனால், அவன் தன் உணர்ச்சிகளைச் சரியான வழியில் உபயோகிப்பதற்கு பதிலாக, உணர்ச்சிகள் தம் நோக்கத் துக்குத் தகுந்தபடி அவனை உபயோகித்துக் கொள்கின்றன.

பிரயாணத்தை மேற்கொண்டிருப்பவன் தன் குறிக்கோளை நோக்கிக் குதிரையைச் செலுத்த வேண்டுமே யன்றி, குதிரையின் நோக்கத்துக்காகத் தன்னுடைய குறிக்கோளைத் தியாகம் செய்துவிடக் கூடாது. இல்லையேல், மலைக் கோட்டையை நோக்கிப் புறப்பட்டவன் கடைசியில் குளக்கரையில் குதிரைக்குப் பக்கத்தில் காவலாக நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

எனவே 'வெறுப்பு என்பது என்றைக்கும் தீங்கு செய்யக் கூடியதுதான்' என்று கூறுவது, சினம் கொண்ட மனிதனைக்கூடச் சிரிக்க வைக்கும் செய்தியாகும்.

அடுத்து, 'மக்கள்மீது வெறுப்புக் கொண்டவர்களுக்கு இறைவனின் அன்பு கிடைக்காது' என்ற கருத்து என் கருத்துக்கு முரணானதல்ல. இந்தச் சொற்றொடர், மக்கள்மீது வெறுப்புக் கொள்வதைப் பொதுப்படையாக மறுக்கிறதே தவிர —

'தனக்கு நன்மை ஏற்படலாம் என்று தோன்றும் கட்டத்தில் ஒரு மனிதன் மூன்று நாட்களுக்கு மேலே மனத்தில் வெறுப்புக்கு இடம் கொடுக்கலாம்' என்ற என் கூற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இங்கே ஓர் உண்மையை நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்:

மேலே நான் கூறிய செய்திகள், 'சில வேளை களில் வெறுப்பினாலும் நன்மை ஏற்படலாம்' என்பதை விளக்கிக் காட்டும் எண்ணத்தில்தான் எடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர—

'வெறுப்பு என்பது வரவேற்கத் தகுந்த சிறந்த பண்புகளில் ஒன்று' என்று நிரூபிக்கும் நோக்கத்தில் அல்ல!

'அன்பு செலுத்துவதற்குப் பதிலாக வெறுப்பை வளர்த்துக் கொள்ளலாம்' என்று நான் கூறுவதாக நினைத்து உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள்.

நாம் எதைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே உங்கள் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனெனில் இடையில் தோன்றிய பிரச்சினைகளுக்கு விளக்கம் கூறும் முயற்சியில் நீண்டநேரம் கழிந்துவிட்ட காரணத்தால், நம் உரையாடலின் மூலக் கருவை நீங்கள் மறந்திருக்கலாம்.

'ஒருவன் மற்றொருவனை மூன்று நாட்களுக்குமேல் வெறுத்திருக்கக் கூடாது' எனும் நபிக் கருத்துக்கு ஏற்கெனவே நான் விளக்கம் கொடுத்திருக்கிறேன். இது பொதுவாகக் கூறப்பட்ட கருத்து என்றும், இதற்குச் சில கட்டங்களில் விதிவிலக்குக் கொடுக்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட விதிவிலக்கு இரண்டு கட்டங்களில் நமக்குக் கிடைக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஒருவன் மற்றொருவனை வெறுக்கும்போது, இந்த வெறுப்பினால் மற்றவனுக்கு நன்மை கிடைக்கலாம் என்று தோன்றினால் அது முதற் கட்டம்.



ஒரு மனிதன் மற்றவன்மீது வெறுப்புக் கொள்வதால் தனக்கு நன்மை கிடைக்கமுடியும் என்று தெரிந்தால் அது இரண்டாம் கட்டம்.

முதற் கட்டத்தில், வெறுக்கப்பட்டவனுக்கு நன்மை கிடைக்கிறது. இரண்டாம் கட்டத்தில், வெறுக்கிறவன் நற்பயன் அடைகிறான்.

இந்த இரண்டு கட்டங்களிலும் ஒரு மனிதன் மூன்று நாட்களுக்குமேல் தன் மனத்தில் வெறுப்புக்கு இடம் கொடுக்கலாம் என்பது இஸ்லாத்தின் தீர்ப்பு.

முதற்கட்டத்தைப் பற்றி ஏற்கெனவே விரிவாக ஆராய்ந்துவிட்ட நாம் இப்போது இரண்டாம் கட்டத்தைப் பற்றி உரையாட வேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம்.

## மூன்று நாட்களைத் தாண்டிய வெறுப்பு

அன்னை ஆயிஷா அவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் செய்தியொன்று நம் கருத்துக்கு ஆதாரமாக வந்து நிற்கிறது. துல்ஹஜ் மாதத்திலிருந்து, முஹர்ரம் மாதத்தைக் கடந்து, ஸஃபர் மாதத்தில் ஒரு பகுதிவரை தம்மை பெருமானார் வெறுத்திருந்ததாக அன்னை ஆயிஷா தெரிவிக்கிறார்கள்.

ஒரு முறை பெருமானார் தம் மனைவியரைவிட்டுப் பிரிந்து இருபத்தொன்பது நாட்கள் தனித்திருந்தார்கள்.

இதைப்பற்றி நபித் தோழர்கள் வியப்புடன், "தாங்கள் தனிமையில் இருபத்தொன்பது நாட்களை கழித்து விட்டீர்கள்!" என்று கூறியபோது —

பெருமானார் கொடுத்த விடை 'நான் தனிமையில் செலவிட்ட காலத்தை நாட்களாகக் கணக்கிடாதீர்கள்; மாதமாகக் கணக்கிடுங்கள்' என்று சொல்வதுபோல் அமைந்தது: "சிலவேளைகளில் ஒரு மாதத்திற்கு இருபத்தொன்பது நாட்கள் வருவதுண்டு!"

— இந்தச் செய்தி நபித் தோழர் உமர் பின் கத்தாப் அவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கிறது.

அடுத்து வருகிற நபிக்கருத்து, இதுவரை நான் கூறிவந்த செய்திகளுக்கு மிகத் தெளிவாகத் தீர்ப்பு வழங்குகிறது.

"தீமைகளிலிருந்து தனக்குப் பாதுகாப்புக் கிடைக்காது எனும் நிலைமையில் இருந்தாலன்றி, ஒருவன் மற்றொருவனை, மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்திருக்கக் கூடாது!"— தனக்குத் தீங்கு ஏற்படாது, அல்லது தனக்கு நற்பயன் கிடைக்கும் என்ற சூழலில் ஒருவன் மற்றொருவனை மூன்று நாட்களுக்குமேல் வெறுத் திருக்கலாம் என்பது இதன் கருத்து.

இந்த நபிமொழியை நீங்கள் நன்கு புரிந்து கொண்டால்—

"மூடர்களை வெறுப்பது ஒரு மனிதனை இறைவனுக்கு அருகில் அழைத்துச் செல்கிற செயலாகும். இந்த வெறுப்பு மூன்று நாட்களுக்கு மட்டுமன்றி, மரணம்வரைகூட நீடிக்கலாம்" என்று அறிஞர் ஹஸன் பஸ்ரி கூறியிருப்பது உங்கள் எண்ணத்தில் வியப்பைத் தோற்றுவிக்க முடியாது.

மூடர்கள் மீது அன்புவைத்து நெருங்கிப் பழகும்போது, அவர்களின் மூடக் கொள்கைகள் உங்கள் மனத்தில் இடம்பிடித்து விடக்கூடும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

"நல்லவர்களின் சகவாசம் உன்னை நல்லவனாக்கி விடும். தீயவர்களின் தொடர்பு உனக்குத் தீமையைக் கொண்டுவந்துவிடும்" என்பது மிகப் பிரசித்தமான பாரசீகக் கவிதை ஒன்றின் கருத்து.

முஹம்மது பின் உமர் வாகிதி எடுத்துக் காட்டுகிற வரலாற்றுக் குறிப்பு இங்கே நினைவு கூரத் தகுந்தது.



"எனக்குத் தெரிந்த ஒருவர் மற்றொருவரை வெறுத் திருந்தார். அவர் இறக்கும்வரை அவரது மனத்தைவிட்டு அந்த வெறுப்பு நீங்கவில்லை!" என்று யாரோ ஒருவர் கூறியபோது —

வரலாற்றின் ஏடுகளில் சிலவற்றை வாகிதி திறந்து வைத்தார்:

இது அப்படியொன்றும் புதிய செய்தியல்ல. இதே வழியில் ஒரு சாரார் ஏற்கெனவே நடந்து சென்றிருக்கிறார்கள்.

சஅது பின் அபீ வக்காஸ் என்ற நபித் தோழர் அம்மார் பின் யாசிரை வெறுத்திருந்தார். அவர் இறக்கும்வரை இந்த வெறுப்பு அவரது மனத்தைவிட்டு விலகவில்லை.

வஹ்ப் பின் முனப்பிஹை அறிஞர் தாவூஸ் வெறுத்தார். இந்த வெறுப்பு மாறுவதற்குள் அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள்.

நபித் தோழர் உஸ்மான் பின் அஃப்பான், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃபை வெறுத்திருந்த செய்தியும்— அன்னை ஆயிஷாவின் மனத்தில் ஹஃப்ஸாவின்மீது நிரந்தர வெறுப்பு இருந்தது என்ற உண்மையும் வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்றன.

'எந்தச் சூழலில் ஒருவன் மற்றொருவனை மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்திருக்கலாம்?' எனும் பிரச்சினையை இதற்குமேல் விளக்கவேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிறேன். மேலே நான் எடுத்துக் காட்டிய செய்திகளிலிருந்து ஓர் உண்மையை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்: 'ஒரு மனிதன் மற்றொரு மனிதனை மூன்று நாட்களுக்குமேல் வெறுத்திருப்பது கூடாது' எனும் நபிமொழி, சமுதாயத்தை

விட்டு ஒதுங்கித் தனித்துவாழும் மனிதனுக்கு எதிரான தல்ல. இந்த நபிக் கருத்தை ஆதாரமாக எடுத்துக்காட்டித் தனிமைக்குத் தடைபோட முற்படுவது தெளிவு படைத்தவர்கள் செய்கிற வேலையல்ல!

**இறுதிக் கணை**

இதுவரை நான் சொல்லிக் கொண்டிருந்த செய்திகளைக் கூர்ந்து கவனித்துவந்த நீங்கள் இறுதியாக ஒரு கணையை என்மீது வீசுகிறீர்கள். இந்தக் கணை வீச்சிலிருந்து தனிமையைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

நீங்கள் தொடுக்கும் கடைசி அம்பு அடுத்து இடம் பெறுகிறது.

இறை வணக்கத்தைக் குறியாகக் கொண்டு மலையை நாடிச் சென்ற ஒருவர் பெருமானாரிடம் அழைத்து வரப்பட்டார்.

"இந்த வேலையை நீரும் செய்யக் கூடாது; உங்களில் யாரும் செய்யக் கூடாது. முஸ்லிம்கள் வாழ்கிற ஏதேனும் ஓர் ஊரில்தான் நீங்கள் ஒவ்வொருவரும் கலந்து வாழவேண்டும். இப்படி வாழ்வது, நாற்பது ஆண்டுகள் தனிமையில் தியானம் செய்வதைவிடச் சிறந்தது" என்று பெருமானார் கூறினார்கள்.

தனித்து வாழ்வது கூடாது என்பதற்கு இந்த நபிக் கருத்து அழுத்தமான ஆதாரமாகும்.

இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

மேலெழுந்தவாறாகப் பார்த்துப் பழகிக் கொண்டவர் களுக்கு இது மிகத் தெளிவான ஆதாரம்தான். ஆனால் ஆழ்ந்து சிந்தனை செய்கிறவர்கள் இதனைத் தனிமைக்கு எதிரானது என்று ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இந்த



நபிக் கருத்து எந்தச் சூழலில், எந்த நோக்கத்துக்காக வெளியிடப்பட்டது என்பதைத் தெரிந்து கொண்ட எவரும் இதனை ஆதாரமாகக் கொண்டு வரமாட்டார்கள் என்பது என் தீர்மானம்.

இந்த நபிமொழி இஸ்லாத்தின் குழந்தைப் பிராயத்தில் வெளியிடப்பட்ட ஒன்று. அப்போது இஸ்லாத்தைத் தழுவியவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. எதிர்ப்பும் பகைமையும் மிக வலிமையுடன் அவர்களைச் சூழ்ந்து முற்றுகை போட்டு நின்றன. அவர்களுக்கு எப்போது எந்த ஆபத்து ஏற்படும் என்று கணிக்க முடியாத ஒரு சூழ்நிலை தோன்றியிருந்தது.

இதனால், சமுதாயத்தில் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது; தனித்துவாழ முற்படுகிறவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவெடுத்தது.

இந்தக் கட்டத்தில் பெருமானார் தனிமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்பது வியப்புக்கு இடம்தராத செய்தியாகும். ஏனெனில் இந்தச் சூழலில் தனிமையைத் தேர்ந்தெடுக்கிறவர்கள், தெரிந்தோ தெரியாமலோ, சமுதாயத்தின் வலிமைக்குத் தீங்கு செய்கிறார்கள். அவர்கள் தனிமையை நாடிச் செல்லும்போது எந்த நோக்கத்தை மனத்தில் வைத்திருக்கிறார்கள் என்பது முக்கியமான பிரச்சினை அல்ல. அவர்கள் ஒய்வெடுக்கும் எண்ணத்தை மனத்தில் கொண்டிருந்தாலும், தியானத்தில் இன்பம் அடைகிற குறிக்கோளை உள்ளத்தில் வைத்திருந்தாலும் — விளைவைப் பொருத்த வரையில் எந்த மாறுதலும் தோன்ற முடியாது.

இதிலிருந்து, மேலே இடம்பெற்ற நபிக்கருத்து சமுதாயத்தின் வலிமைக்குத் தீங்கு ஏற்படும் வகையில்

மேற்கொள்ளப்படுகிற தனிமையைத்தான் கண்டிக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். எனவே, ஒருவன் சமுதாயத்தில் கலந்து வாழ்வதால் தோன்றுகிற தீமைகளிலிருந்து தற்காப்புத் தேடிக்கொள்ளும் எண்ணத்துடன்—

அல்லது, தனித்து வாழும்போது உருவாகும் நன்மைகளைத் தனதாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் தனிமையை மேற்கொண்டால் அவனுக்கு இந்த நபிக் கருத்து எந்த வகையிலும் தடை விதிக்காது.

இதுவரை நான் கூறிவந்த செய்திகளிலிருந்து, தனிமைக்கு எதிராக எடுத்துக் காட்டப்பட்ட ஆதாரங்கள் அனைத்தும் பலவீனமானவை என்பதை நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

**எதிர் கோணம்**

திறமையும் தெளிவும் படைத்த அறிஞர்களில் ஒரு சாரார் தனிமையை எதிர்க்கிற அதே நேரத்தில் மறு சாரார் தனிமைக்கு ஆதரவு கொடுக்கிறார்கள் என்று ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள், என்பது என் நம்பிக்கை. தனிமைக்கு எதிராக எடுத்துக் காட்டப்பட்ட ஆதாரங்களை இதுவரை ஆராய்ந்த நாம் இப்போது எதிர் கோணத்திலிருந்து பிரச்சினையைப் பார்க்க வேண்டும். இந்த ஆராய்ச்சி இங்கு பெரிதும் அவசியமானது என்று எண்ணுகிறேன். இத்தகைய எதிர்கோணச் சிந்தனைக்கு நாம் இடம் கொடுக்கவில்லை என்றால், தனிமை பற்றிய நம்முடைய உரையாடல் ஒருதலைப் பாங்கானதாக அமையுமேயன்றி — 'முழுமையானது' என்ற பெயரை அடையாது.

எனவே இப்போது நம் சிந்தனைக்குக் கருவாக அமைவது, 'தனிமைக்கு ஆதரவாகக் கூறப்படும் ஆதாரங்கள் வலிமையானவைதானா?' எனும் பிரச்சினை.



தனிமையை வலியுறுத்தும் நோக்கத்தில் எடுத்துக் காட்டப்படும் ஆதாரங்களில் ஒன்று அடுத்து வருகிறது. இது இப்ராஹீம் நபியைப் பற்றித் திருக்குர்ஆனில் காணப்படுகிற செய்திகளில் ஒன்று.

"அவர்களையும் இறைவனைத் தவிர்த்து அவர்கள் வணங்குகிறவற்றையும் இப்ராஹீம் விட்டு விலகியபோது, அவருக்கு இஸ்ஹாக்கையும் யாகூபையும் அன்பளிப்பாகக் கொடுத்தோம். ஒவ்வொருவரையும் நாம் நபியாக்கினோம்."

தனிமையை ஆதரிக்கிறவர்கள் இந்தக் கருத்தை எடுத்துக் காட்டி இவ்வாறு ஆதாரம் தேடுகிறார்கள்:

'சமுதாயத்தைவிட்டு விலகித் தனிமையைத் தேர்ந்தெடுத்த காரணத்தினால் தான் இப்ராஹீம் நபிக்கு இப்படிப்பட்ட அன்பளிப்புக் கிடைத்தது. இந்த இறைவசனம் தனிமையினால் கிடைக்கிற 'பரக்கத்'தைச் சுட்டிக் காட்டுகிறது. எனவே சமுதாயத்தில் கலந்து வாழ்வதைவிடத் தனிமையை நாடிச் செல்வது சிறந்தது."

இந்தச் செய்தி தனிமையை வலியுறுத்துகிறது என்று நீங்கள் நினைத்தால் உங்களுக்கு நான் கூறுகிறேன்:

திருத்தூதர்கள் எல்லாருக்கும் கொடுக்கப்பட்டது போன்ற ஒரு பொறுப்பு இப்ராஹீம் நபிக்கும் கொடுக்கப்பட்டது. மற்ற இறைத் தூதர்களைப் போலவே இப்ராஹீம் நபியும் முரண்வழியில் சென்றுக் கொண்டிருந்த மக்களுக்கு இறைவழியை எடுத்துக் கூறினார்கள். தாம் மேற்கொண்ட முயற்சி பயனற்றுப் போனதைக் கண்ட நபியவர்கள் அந்த மக்களை வெறுத்து விலகிச் சென்றார்கள். அவர்கள் முரண்வழியில் நடந்தவர்களைத்தான் வெறுத்தார்களே தவிர இறைவழியில் சென்றவர்களை அல்ல.

இப்படிச் சீர்கெட்டுப்போன சமுதாயத்தைவிட்டு விலகிச் செல்வதில் 'பரக்கத்' இருக்கிறதா, இல்லையா என்று நாம்

ஆராயவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், ஒரு முஸ்லிம் இஸ்லாமிய சமுதாயத்தைவிட்டு தனித்து வாழ்வதற்கு மார்க்கம் அனுமதி கொடுக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றித்தான் இப்போது நாம் உரையாடிக் கொண்டிருக்கிறோம். இந்தச் செயலைத்தான் நான் 'தனிமை' என்று குறிப்பிடுகிறேன்.

எனவே முரண்வழியினரைவிட்டு இப்ராஹீம் நபி விலகிச் சென்றார்கள் எனும் செய்தி, நாம் மூலக் கருவாக வைத்து உரையாடிக் கொண்டிருக்கும் தனிமைக்கு ஆதரவானதல்ல. மீண்டும் உங்களுக்கு நினைவுறுத்துகிறேன் — ஒரு முஸ்லிம் தன் சமுதாயத்தை விட்டு விலகி வாழும் செயலுக்குத்தான் 'தனிமை' என்று நான் பெயர் கொடுக்கிறேன்; இப்ராஹீம் நபியவர்கள் தம் அறிவுரைகளுக்கு செவி சாய்க்காத மக்களைவிட்டுத்தான் விலகினார்கள். இதனால் அவர்களின் செயலுக்கு 'தனிமை' எனப் பெயரிட முடியாத நிலைமை ஏற்படுகிறது.

## வீட்டோடு இருங்கள்

—என்ற கருத்தைப் பெருமானாரின் பொன்மொழி யொன்றில் நான் பார்த்திருக்கிறேன் என்று கூறி மீண்டும் ஓர் ஆதாரத்தை நீங்கள் தேடி எடுத்து எனக்கு எதிரில் வைக்கிறீர்கள்.

"வெற்றி என்றால் என்ன? அதை எப்படி அடைவது?" எனப் பொருள் தரும் வகையில் நபித் தோழர் ஒருவர் கேட்டபோது—

பெருமானார் இவ்வாறு பதில் கொடுத்தார்கள்: "நீங்கள் வீட்டோடு இருங்கள். உங்கள் நாவைக் கட்டுப்படுத்துங்கள். நீங்கள் செய்த தவறுகளை நினைத்து அழுங்கள்."

"இந்த நபிமொழியில் 'வீட்டோடு இருங்கள்' எனும் கருத்து தனிமையை வலியுறுத்துகிறது" என்று நீங்கள் கூறுகிறீர்கள்.



உண்மையிலேயே இந்த நபிமொழி தனிமைக்கு ஆதரவு கொடுக்கிறது என்று நீங்கள் நம்பினால், நான் கூறப்போகும் செய்தியைக் கொஞ்சம் கவனித்துக் கேளுங்கள்.

பெருமானார் இந்தக் கருத்தை நபித் தோழர்கள் சூழ்ந்து உட்கார்ந்திருந்த நேரத்தில் எல்லாருக்கும் பொதுவாகக் கூறியிருந்தால், உங்கள் வாதத்தை நியாயமானது என்று குறிப்பிடலாம், ஆனால் இந்தச் செய்தியைப் பெருமானார் எல்லாருக்கும் பொதுவாக, எல்லாரும் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் வெளியிட்டார்கள் என்று சொல்வதற்கு வரலாற்றில் ஆதாரம் கிடையாது. மக்கமாநகரில் இருந்தபோது அவர்கள் இப்படிக் கூறியிருந்தால் 'கஅபா' என்று அழைக்கப்படுகிற தேவாலயத்திற்கு நபித் தோழர்களில் யாரும் வந்திருக்க மாட்டார்கள்; மதீனாவில் வசித்த காலத்தில் சொல்லியிருந்தால் மஸ்ஜித் நபவியில் ஒரே ஒரு நபித் தோழரைக் கூடப் பார்த்திருக்க முடியாது.

பெருமானார் வெளியிட்ட இந்தச் செய்தி நபித் தோழர் அப்துல்லாஹ் பின் ஆமிருக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரையாகும். நெருங்கிப் பழகிய காரணத்தினால் இந்த நபித்தோழர் பெருமானாரைப் பற்றியும் அவர்களின் கூற்றில் மறைந்திருக்கிற பொருளைப்பற்றியும் உணர்ந்து கொள்ளும் பேறு பெற்றிருந்தார். இப்படிப்பட்டவர்கள், தனிமையை மேற்கொண்டால் அவர்களுக்கு மிகப்பெரும் நன்மை கிடைக்க முடியும் என்பதற்கு நபித்தோழர்களில் சிலரது வாழ்க்கை நமக்குத் தெளிவாக ஆதாரம் கொடுக்கிறது. சமுதாயத்தோடு கலந்து வாழும்போது கிடைக்காத அரிய பயன்களை அவர்கள் தனிமையில் அடைந்தார்கள் என்று வரலாறு கூறுகிறது.

ஆனால் இந்த நபிக் கருத்தை எல்லாரும் பின்பற்ற முடியாது. ஏனெனில் பெருமானார் அப்துல்லாஹ் பின் ஆமிருக்குத்தான். இப்படிக் கூறினார்களே அன்றி,

நபித்தோழர்கள் எல்லாருக்கும் அல்ல. எனவே இந்த நபிமொழியையும் தனிமைக்கு ஆதாரமானது என்று எடுத்துக் கூற முடியாது.

வீட்டுவாசலில் காவலுக்கு நிற்கும் மனிதனைப் பார்த்து, "இரவில் நீ தூங்கக் கூடாது" என்று நீங்கள் கூறினால், இது காவல்காரனுக்குத்தான் கட்டளையாக இருக்குமேயன்றி வீட்டுக்குள் வசிக்கும் மனிதர்களுக்கல்ல!

சமுதாயத்தில் புகுந்து கலந்து வாழும்போது ஒரு மனிதன் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது முற்றிலும் உண்மை. ஆனால் சமுதாய மக்கள் அனைவருக்கும் இது பொருந்தாது. சமுதாயத்தில் கலந்து வாழ்ந்த காரணத்தால் மிகக் கொடிய பண்புகளை எல்லாம் தமக்கே தெரியாமல் வளர்த்துக் கொண்ட பலரை இன்றைக்கும் நீங்கள் பார்க்கலாம். இப்படிப்பட்டவர்களுக்குத் தனிமையில் நன்மை கிடைக்க முடியும் என்று கூறுவதில் என்ன தவறு இருக்க முடியும்? ஆனால் இவர்களுக்குக் கிடைக்கிற அதே நன்மைகள் மற்ற எல்லாருக்கும் கிடைக்க முடியும் என்று நீங்கள் எப்படிக் கூற முடியும்?

ஒரு செயல் எல்லாருக்கும் எல்லா நேரங்களிலும் ஒரே விதமான நன்மையை—அல்லது தீமையைத் தோற்றுவிக்க முடியாது என்று ஆரம்பத்தில் நான் சுட்டிக்காட்டிய செய்தியை இப்போது உங்கள் எண்ணத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

எனவே நபித்தோழர் அப்துல்லாஹ் பின் ஆமிருக்குப் பெருமானார் கூறிய செய்தி, அவருக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் கொடுக்கப்பட்ட அறிவுரையேயன்றி, நபித்தோழர்கள் எல்லாருக்கும் பொதுவாக இடப்பட்ட கட்டளையல்ல. இந்த நபிக் கருத்தைத் தனிமைக்கு ஆதரவானது என்று கூறுவதற்கு இடமில்லை.



இந்த நபிமொழி தனிமைக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்ட நீங்கள் மீண்டும் ஓர் ஆதாரத்தைத் தேடிக் கண்டுபிடித்து எனக்கு எதிரில் வைக்கிறீர்கள்.

**மறைந்து வாழும் மனிதன்**

இதுவும் நபிமொழித் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதுதான். "ஒழுக்கமும் தூய்மையும் கொண்டு மறைந்து வாழும் மனிதனை இறைவன் விரும்புகிறான்."

"இந்த நபிக் கருத்தில் 'மறைந்துவாழும்' என்ற சொற்பிரயோகம் தனிமையை வலியுறுத்துகிறது என்று நான் கருதுகிறேன். இதனை நீங்கள் எப்படி மறுக்க முடியும்? தனிமையின் சிறப்புக்கு இதற்குமேல் ஓர் ஆதாரம் தேவையா?" என்று கேட்கிறீர்கள்.

உங்கள் கேள்விக்கு நான் கொடுக்கும் விடை அடுத்து வருகிறது.

இந்த நபிக் கருத்து, நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல், சமுதாய வாழ்வை துறந்துவிட்டுத் தனிமைக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களைக் குறி வைத்துக் கூறப்பட்டதல்ல என்பதை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம்.

சமுதாயத்தில் பிணைந்து வாழ்கிறவர்கள் எல்லாரும் ஒரே வகையைச் சேர்ந்தவர்கள் என்று கூறமுடியாது. அவர்களிடையே குணத்தாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்து நிற்கும் பலரை — அல்லது சிலரை நீங்கள் நிச்சயமாகப் பார்க்க முடியும். இவர்கள் மற்றவர்களின் அன்புக்கும் மரியாதைக்கும் அருகதை பெற்றவர்கள். இதனால், ஒழுக்கமும் தூய்மையும் கொண்டவர்கள் தமக்குப் பெருமையைத் தேடிக் கொள்வதற்கான அரிய வாய்ப்பு சமுதாய வாழ்வில் தோன்றுகிறது. இப்படிப்பட்டவர்கள்

பெருமை அடையும் நோக்கத்தைக் குறியாக வைத்துச் சமுதாயத்தில் கலந்து வாழும்போது அவர்களின் ஒழுக்கத்துக்கும் தூய்மைக்கும் களங்கம் ஏற்படுகிற வாய்ப்பும் தோன்றுவதுண்டு.

எனவே மக்களோடு மக்களாகக் கலந்து வாழ்கிறவர்கள் தம் ஒழுக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமே யல்லாமல், தம் ஒழுக்கத்தையும் தூய்மையையும் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுவதன் மூலம் பெருமைக்குத் தூண்டில் போடக் கூடாது என்ற கருத்தைப் பெருமானார் வெளியிட்டார்கள்.

மேலே இடம் பெற்ற நபிமொழியில் 'மறைந்து வாழும் மனிதன்' என்பது, ஒழுக்கத்தைக் காட்டிப் பெருமை தேடுகிற நோக்கத்தைத் துறந்துவிட்டுத் தன்னையும் தன் ஒழுக்கத்தையும் மறைத்து மறைந்து வாழ்கிற மனிதனைத்தான் குறிக்குமேயன்றி—

சமுதாயத்தைவிட்டுத் தனித்து வாழும் மனிதனையல்ல! ஏனெனில் தனிமையில் வாழும் எந்த மனிதனுக்கும் பெருமையில் நாட்டம் இருக்க முடியாது என்று கூறுவது உண்மைக்கு எதிரானது. புகழடைய வேண்டும் என்ற எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு தனிமைக்குச் சென்ற பலரை நான் கண்டிருக்கிறேன். நீங்கள் கண்டிருக்க முடியாது என்று நான் கூறவில்லை.

நீங்கள் சிறிதுநேரம் சிந்தனை செய்து பார்த்தால், சமுதாயத்தில் இணைந்து வாழ்கிறவர்களைவிடத் தனித்து வாழ்கிறவர்களுக்குத்தான் அதிகமான மரியாதையும் பெருமையும் கிடைக்கின்றன எனும் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும்போது, இந்த நபிக் கருத்து தனிமைக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல— தனித்து வாழ்கிறவர்களுக்கு எதிர்ப்பும் தெரிவிக்கிறது என்று தீர்மானிக்க தோன்றுகிறது. எனவே இந்த நபிமொழியை எடுத்துவைத்துக் கொண்டு, அது எந்தச் சூழலில் வெளியிடப்பட்டது என்ற சிந்தனையைத் துறந்துவிட்டு, தனிமைக்கு ஆதரவாக ஆதாரம் காட்டுவது அர்த்தமற்றதொரு செயலாகும்.



தனிமைக்கு ஆதரவாக எடுத்துக் காட்டப்படும் ஆதாரங்களை நாம் இதற்குமேல் ஆராயவேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிறேன். ஏனெனில் தனிமையினால் எப்படிப்பட்ட நன்மைகள் தோன்றுகின்றன — எத்தகைய தீமைகள் உருவாகின்றன எனும் முக்கியப் பிரச்சினை நமது சிந்தனைக்குக் காத்துக் கொண்டிருக்கிறது.

'சமுதாயத்தைவிட்டு விலகித் தனிமையில் வாழ்வதற்கு இஸ்லாம் அனுமதி கொடுக்கிறதா?' என்ற வினாவை மூலக்கருவாக வைத்து இதுவரை நாம் நடத்திவந்த உரையாடலிலிருந்து சில உண்மைகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன: தனிமைக்கு எதிராக எடுத்துக் காட்டப்பட்ட மேற்கோள்கள் மட்டுமன்றி, தனிமைக்கு ஆதரவாக இழுத்து வரப்பட்ட ஆதாரங்களும் பலவீனமானவை. அவற்றின் அடிப்படையில் தனிமைக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ எந்தத் தீர்ப்பும் வழங்க முடியாது. இதனால் தனிமைக்கு 'இஸ்லாம் அனுமதி தருகிறதா?' எனும் கேள்வி தீர்க்கமான விடையை எதிர்பார்த்துக் காத்து நிற்கிறது.

## செயலும் விளைவும்

தனிமையை ஆதரித்தவர்களும் எதிர்த்தவர்களும் வலிமைமிக்க ஆதாரங்களை அடிப்படையாக வைத்துத் தம் கருத்தை நிரூபிக்காத காரணத்தால், இந்தப் பிரச்சினையை வேறொரு கோணத்திலிருந்து ஆராயவேண்டிய அவசியம்

நமக்கு ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினை அறிஞர்களின் ஒருமித்த ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளத் தவறிவிட்ட காரணத்தால், தனிமையினால் தோன்றக் கூடிய நன்மைகளையும் தீமைகளையும் அலசிப் பார்க்க வேண்டிய பொறுப்பு நமக்கு வருகிறது.

'பசித்திரு; விழித்திரு; தனித்திரு' என்பது ஞான மார்க்கத்தில் போதிக்கப்படுகிற முதற் செய்தி என்பது உங்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. பசியைப் பற்றியும் விழிப்பைப் பற்றியும் இப்போது நாம் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அவை தனித்தினியே உரிய நேரத்தில் விளக்கப்படவிருக்கின்றன. தனித்திருந்து சிந்தனை செய்வதன் மூலம் மிகப்பெரும் நன்மைகளை அடையமுடியும் என்பது தெளிவுபடைத்தவர்கள் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். அதே நேரத்தில், தனித்து வாழ்ந்த காரணத்தினால் மிகப்பெரும் தீமைகளுக்குப் பலியானவர்கள் பலர் என்ற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே, ஒருவன் மேற்கொள்ளும் தனிமை அவனுக்கு நன்மையைக் கொண்டு வருமா— அல்லது தீமைக்கு வழிவகுக்குமா என்று சுத்தமாகத் தெரிந்துகொள்ளும்வரை அவனுடைய செயலுக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ எவரும் தீர்ப்புக் கொடுக்க முடியாது. 'விளைவுகளை வைத்தே செயல்கள் தீர்மானிக்கப்படுகின்றன' எனும் சட்ட நுணுக்கத்தை மீண்டும் உங்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

மேலே நான் எடுத்துக் காட்டிய செய்திகளிலிருந்து ஓர் உண்மையை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்: 'இஸ்லாம் தனிமைக்கு ஆதரவு கொடுக்கிறதா?' எனும் வினா, எடுத்த எடுப்பில் உடனுக்குடன் விடை கொடுக்கத் தகுந்த ஒன்றல்ல. தனிமையினால் உருவாகவிருக்கிற நன்மைகளையும் தீமைகளையும் அளவுகோல்களாகக்



கொண்டுதான் இந்தக் கேள்விக்குப் பதில் கொடுக்க முடியும்.

ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டதுபோல், தனிமை என்பது அறிஞர்களிடையே கருத்து வேற்றுமையைத் தேடிக்கொண்ட ஒன்று. பக்தர்களும் துறவிகளும் தனிமைக்குப் பெருத்த ஆதரவு கொடுக்கிறார்கள் என்பது உண்மைதான் என்றாலும், தனிமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் பக்திக்கும் துறவுக்கும் பகைவர்கள் என்று எவரும் நிரூபிக்க முடியாது.

இந்தப் பிரச்சினையை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள விரும்பினால் திருமணம் பற்றிய சட்டத்தை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள். தனிமை குறித்து அறிஞர்கள் கொண்டிருக்கும் கருத்து வேறுபாடு திருமணப் பிரச்சினையிலும் காணப்படுகிறது. திருமணம் என்பது பெருமானாரின் நடைமுறைகளில் ஒன்று என்பதும், அது 'சுன்னத்' எனும் படித்தரத்தை அடைந்திருக்கிறது என்பதும் தெளிவான செய்திகள். என்றாலும், இந்தச் சட்டம் எல்லா மனிதர்களுக்கும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அமுலுக்கு வரக்கூடிய ஒன்றல்ல. குறிப்பிட்ட சூழல்களில் குறிப்பிட்ட சிலருக்கு இந்தச் சட்டத்திலிருந்து இஸ்லாம் விதிவிலக்கு அளித்திருக்கிறது. ஒரு மனிதன் திருமணம் செய்து கொள்வதால் தம்பதிகளுக்குத் தீமையும் துன்பமும் நிச்சயமாக ஏற்படும் என்று தோன்றினால், அந்தச் சூழலில் இஸ்லாம் திருமணத்துக்கு எப்படி ஆதரவு கொடுக்க முடியும்?

இல்லறத்தில் மட்டுமல்லாமல் ஆத்மிகத்திலும் மனிதன் உயரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் திருமணம் வலியுறுத்தப்படுகிறது. பெருமானாரின் வாழ்வையும் வாக்கையும் கூர்ந்து கவனிக்கிறவர்களுக்கு என்னுடைய இந்தக் கூற்று நிச்சயமாகக் குழப்பத்தைத்

தோற்றுவிக்க முடியாது. இந்த அடிப்படை நோக்கம் நிறைவேற முடியாது என்று தெளிவாகத் தெரியும் கட்டத்தில் — திருமணம் என்பது நல்ல விளைவுகளைத் தோற்றுவிக்காத வெற்றுச்சடங்காக மாறும் கட்டத்தில் அதற்கு இஸ்லாத்தின் ஆதரவு கிடைப்பது சாத்தியமில்லை. பிறப்பாலோ செயலாலோ ஆண்மையை இழந்துவிட்ட ஒருவன் திருமணம் செய்து கொள்வதற்கு இஸ்லாம் தடை விதிக்கிறது.

இப்படிப்பட்ட சூழல்களில் திருமணம் 'சுன்னத்' என்ற படித்தரத்தைவிட்டுக் கீழே இறங்கி வந்துவிடுகிறது.

எனவே, 'ஒருவன் திருமணம் செய்து கொள்ளலாமா?' —அல்லது 'திருமணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமா?' என்று வினா எழுப்பப்படும்போது, அதற்குக் கொடுக்கப்படும் விடை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது. சம்பந்தப்பட்ட மனிதனின் உடல்நிலை, மனநிலை, சூழ்நிலை முதலியவற்றின் மாறுதலால் விடையிலும் மாறுதல் தோன்றுகிறது.

இதேபோன்று, 'ஒருவன் தனித்து வாழலாமா?' என்றோ 'தனித்துத்தான் வாழவேண்டுமா?' என்றோ வினா வீசப்படும்போது அதற்கு எப்போதும் ஒரே மாதிரியாக விடை கொடுக்க முடியாது. ஏற்கெனவே நான் குறிப்பிட்டதுபோல், தனிமையினால் சிலருக்கு நன்மை கிடைக்கிற அதே நேரத்தில் வேறு சிலருக்குத் தனிமை என்பது மிகப் பெரும் ஆபத்துகளுக்கு அழைப்புக் கொடுக்கும் செயலாக மாறுகிறது. விளைவைப் பற்றிய அறிவு இல்லாமல், தனிமைக்குத் தீர்ப்புக் கொடுப்பது கண்களை இறுக மூடிக் கொண்டு விண்மீன்களைப் பார்க்க முற்படுவது போன்றதொரு காரியமாகும்.

இதனால், தனிமையினால் கிடைக்கவிருக்கிற நன்மைகளையும் தீமைகளையும் விரிவாக ஆராய வேண்டிய நிலைமை இப்போது நமக்கு எதிரில் வந்து நிற்கிறது.



தனிமை பற்றிய பிரச்சினையை ஆழ்ந்து கவனித்துப் பார்க்கும்போது, அங்கே ஆறு நன்மைகள் கிடைக்கின்றன எனும் உண்மை நமக்குத் தெளிவாகிறது. அவற்றில் ஒன்றுகூடச் சமுதாயத்தில் கலந்து நிற்கிறவர்களுக்குக் கிடைக்க முடியாது.

**முதல் நன்மை**

சமுதாயத்தோடு இணைந்து நின்று மக்களில் ஒருவராக வாழும்போது உங்கள் மனத்தில் தோன்றும் எண்ணங் களுக்கும், இறைவனைப் பற்றிய சிந்தனையில் இன்பம் பெறும் நோக்கத்துடன் தனிமையை மேற்கொள்ளும்போது உங்கள் உள்ளத்தில் மலரும் எண்ணங்களுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு என்பது பொதுவாக எல்லாருக்கும் தெரிந்த ஒன்று.

இறை வணக்கத்தின் தித்திப்பைச் சுவைப்பது, மக்களிடம் உரையாடுவதற்குப் பதிலாக இறைவனிடம் உரையாடுவது, இல்லறத்திலும் துறவறத்திலும் இறைவன் மறைத்து வைத்திருக்கிற ஆழ்ந்த உண்மைகளைப் புரிந்து கொள்வது முதலிய நன்மைகள் தனித்து வாழ்கிறவர் களுக்கு நிச்சயமாகக் கிடைக்க முடியும். நீங்கள் மக்களில் ஒருவராகக் கலந்து வாழும்போது இந்த அரிய வாய்ப்பு உங்கள் பிடியிலிருந்து நழுவிப் போய்விடும் என்பதற்கு நான் விளக்கம் கூற வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிறேன்.

உலக வரலாற்றைக் கூர்ந்து கவனிக்கிறவர்கள் எல்லாரும் ஒருமித்த மனத்துடன் ஏற்றுக் கொள்ளும் செய்தியொன்று இப்போது என் நினைவுக்கு வருகிறது.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட உணர்ச்சிகளினால் உந்தித் தள்ளப்படுகிற மக்களுக்கு மத்தியில் நெருங்கிப் பழகும்போது இறைவனைப் பற்றிய எண்ணம் விடை பெற்றுச்

சென்றுவிடுகிறது. இறைவனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து செல்கிறவர்களுக்கு மக்களைப் பற்றிய நினைப்பு இன்பத்தைக் கொண்டு வருவதில்லை.

இந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், செயலைத் தூண்டுகிற எண்ணத்துக்கும் செயலுக்கும் பின்னால் தோன்றுகிற எண்ணத்துக்குமுள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்ளும் பேறு இதுவரை உங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே பொருள்.

### எண்ணமும் செயலும்

பள்ளிவாசலின் தனிமையில் இறைவனை வணங்கும் எண்ணத்துடன் வீட்டைவிட்டுப் புறப்பட்ட எத்தனையோ பேர், கடைவீதியில் சிறிதுநேரம் உரையாடிக் கொண்டிருந்த காரணத்தால், இறைவனையும் அவன் விதித்த கடமையையும் கட்டோடு மறந்து புறப்பட்ட இடத்திற்கு திரும்பி வந்திருக்கிறார்கள்.

இங்கே அவர்களின் மனத்தில் தோன்றிய எண்ணம் ஒன்று இறைவனின் பக்கம் அவர்களை அழைக்கிற அதே நேரத்தில், உரையாடலினால் தோன்றிய மற்றோர் எண்ணம் அவர்களை நேர் எதிரான பாதையில் இழுத்துச் செல்கிறது.

"இறைவனை வணங்கும் நோக்கத்தில் நீ வெளியே புறப்பட்டுச் சென்றால் யாருடனும் உரையாடாதே!" என்று ஜுனைத் பக்தாதி கூறியிருப்பது இங்கு நினைவுகூரத் தகுந்தது.

இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்பும் கருத்து இதுதான்: உயர்ந்த நோக்கத்தை மனத்தில் கொண்டு தனிமையைத் தேர்ந்தெடுக்கும் மனிதனின் மனத்தில் இறைவனைப் பற்றிய எண்ணம் வலுவாகத் தோன்றமுடியும். இந்த எண்ணம் அவனை இறைவணக்கத்தின் பக்கம் வேகமாக இழுத்துச் செல்லக் கூடியது.



இது செயலுக்கு முன்னால் தோன்றுகிற எண்ணம். அவன் மற்றவர்களோடு பழகும்போது, உரையாடும்போது மற்றோர் எண்ணம் அவனுக்குத் தோன்றுகிறது. இது பழக்கத்துக்குப் பிறகு— உரையாடலுக்குப் பின்னர் தோன்றுகிற எண்ணம். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானவை. முதலில் தோன்றிய எண்ணத்தைப் பின்னால் தோன்றிய எண்ணம் சீர்குலைக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்; இவை இரண்டிற்குமுள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளுங்கள்.

நீண்ட நாள் இறைவணக்கத்தில் இன்பம் கண்ட எத்தனையோ பேர், சமுதாயத்தில் சிறிதுகாலம் கலந்து வாழ்ந்த ஒரே காரணத்தால், தமக்கும் இறைவனுக்கு மிடையில் கனத்த திரையைத் தோற்றுவித்துக் கொண்டார்கள்.

மனத்தில் தோன்றுகிற எண்ணங்களையும் அவை தோற்றுவிக்கிற உணர்ச்சிகளையும் சேர்த்து வைத்துச் சிந்தனை செய்கிறவர்களில் நீங்களும் ஒருவர் என்றால், நான் எடுத்துக்காட்டிய செய்தியில் உங்களுக்குச் சிறிதும் சந்தேகம் ஏற்பட முடியாது.

இந்த உண்மைக்கு வரலாற்று நூல்கள் வலிமை மிக்க ஆதாரங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றன என்பது முற்றிலும் தெளிவான ஒன்று. என்றாலும் நீங்கள் உங்கள் வாழ்வில் நடந்த சம்பவங்களைத் தொகுத்துச் சிந்திக்கத் துணிந்தால் இதனை நிரூபிப்பதற்கு வரலாற்று ஏடுகள் துணை செய்யவேண்டிய அவசியம் கிடையாது. ஏனெனில் கடந்த காலத்தில் உங்களிடமிருந்து வெளிப்பட்ட செயல்கள் ஒவ்வொன்றும் நிகழ் காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் தேவையான — பெரிதும் தேவையான ஒவ்வோர் உண்மையைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

வரலாற்று நூல் வாழ்க்கைக்குத் தேவையற்றது என்பது என் கருத்தல்ல. தெளிவு படைத்த எவரும் இப்படிப்பட்ட கருத்தைத் தம் மனத்தில் வைத்திருக்க முடியாது. வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்ள முடியாத தத்துவக் கருத்துக்கள் பலவற்றை ஒருவன் தன் வாழ்க்கையை உற்றுப்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம் என்பதுதான் என் கருத்து.

## சொந்தக் கருத்தும் இரவல் கருத்தும்

மக்களில் பெரும்பாலோர் தம் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து தெளிந்து வெளிவந்த கருத்துகளைப் புறக்கணித்துவிட்டு, மற்றவர்களின் கருத்துக்களைத் தம் கருத்துக்களாக நினைத்துத் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சிந்தனையிலிருந்து வெளிவந்த சொந்தக் கருத்துக்கும் மற்றவர்களின் தூண்டுதலால் உங்கள் மனத்தில் தோற்றுவிக்கப்பட்ட இரவல் கருத்துக்கும் வேறுபாடு தெரியாதவர்களில் நீங்களும் ஒருவர் என்றால், வரலாற்று நூல்கள் உங்களுக்குப் பல்லாயிரம் உண்மைகளைத் தெளிவுப்படுத்தமுடியும்; ஒருவன் சமுதாயத்தைவிட்டுப்பிரிந்து தனித்து வாழும்போது அவனுக்கு எத்தகைய நன்மைகள் கிடைக்கின்றன என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள முடியும்.

“இஸ்லாத்தின் சட்டங்களுக்குத் தலைகுனிந்து நடக்கும் மனிதன் சமுதாய வாழ்வைக் கட்டோடு துறந்து விடவேண்டுமா? சமுதாய வாழ்வில் அவனுக்கு எந்த நன்மையும் ஏற்பட முடியாதா?” என்று நீங்கள் வினா எழுப்பினால்—

உங்களுக்கு நான் கூறுகிறேன்:

இதுவரை நான் கூறிவந்த செய்திகளைச் சிறிதுநேரம் எண்ணிப் பாருங்கள். பொது வாழ்வை — சமுதாய வாழ்வைத் தேர்ந்தெடுத்த எந்த மனிதனுக்கும் எத்தகைய நன்மையும் கிடைக்க முடியாது என்று எந்தக் கட்டத்திலும் நான் கூறவில்லை என்பதை உங்கள் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



சமுதாயத்தினால் சிலருக்கு நன்மை கிடைக்கிற அதே நேரத்தில், தனிமையினால் வேறு சிலருக்கு நன்மை வந்து சேர்கிறது. இதேபோன்று சமுதாயத்தினால் ஒருவித நன்மை உருப்பெற்றால், தனிமையினால் வேறுவித நன்மை மலர்கிறது.

இப்போது, தனிமையினால் எப்படிப்பட்ட நன்மைகள் உருப்பெற முடியும், யாருக்கு அவை கிடைக்க முடியும் என்ற வினாக்களை அடிப்படையாக வைத்துத்தான் நாம் உரையாடிக் கொண்டிருககிறோம். இதனை நீங்கள் நன்கு மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

தனிமையினால் யாருக்கு என்ன தீமை ஏற்படமுடியும் என்பது பற்றி — அல்லது சமுதாயத்தினால் யாருக்கு எந்த நன்மை கிடைக்க முடியும் என்பது பற்றி ‘சமுதாய வாழ்வு’ என்ற தலைப்பின்கீழ் விரைவில் நாம் உரையாட விருக்கிறோம்.

## இறைவணக்கத்திற்குத் தனிமை தேவையாகும்

மேலே நான் எடுத்துக் காட்டிய செய்திகளிலிருந்து, தனிமைக்கும் இறைவணக்கத்துக்குமுள்ள அழுத்தமான பிணைப்பை நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

“இறைவன் எங்கும் நிறைந்தவன். ஊருக்கு வெளியே அமைந்த மலைக் குகையில் மட்டுமன்றி, குடும்பத்து உறுப்பினர் குழுமியிருக்கிற வீட்டின் நடுப்பகுதியிலும் அவன்

இருக்கிறான். அவனை நீங்கள் எந்த இடத்திலும் வணங்கலாம். ஆனால் இறைவணக்கத்தின் தித்திப்பைச் சுவைக்க விரும்பினால் நீங்கள் தனிமையைத்தான் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இயன்றவரையில் இறைவனுக்கும் உங்களுக்கும் நடுவில் வேறுயாரும்— வேறு எதுவும் நுழைந்துவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்" என்று அறிஞர் ஹஸன் பஸ்ரி தமது மாணாக்கர்களுக்குக் கூறிக் கொண்டிருந்த அறிவுரையை இப்போது உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மனத்தை அலையவிடாமல் தடுத்து நிறுத்தி ஒன்றுபட்ட எண்ணத்துடன் செய்ய வேண்டிய காரியங்களில் இறைவணக்கமும் ஒன்று. ஒருவன் இறைவணக்கத்தில் ஈடுபடும்போது அவனுடைய மனநிலை எப்படி இருக்க வேண்டும் என்பதை 'அஸ்ராருஸ் ஸலாத்' என்ற நூலில் தெளிவுப்படுத்தியிருக்கிறேன்.*

இறைவணக்கத்திற்குப் பெரிதும் தேவையான இந்த மனநிலை, ஒன்றுக்கொன்று எதிரான உணர்ச்சிகளினால் உந்தித் தள்ளப்படுகிற சமுதாய மக்களிடம் சிறிதும் எதிர்பார்க்கமுடியாத ஒன்று. சமுதாய வாழ்வில் பரவி நிற்கிற, மனநிலையையும் தனித்து வாழ்கிறவர்கள் அரவணைத்துக் கொண்டிருக்கிற மனநிலையையும் சிறிது நேரம் இணைத்து வைத்து சிந்தனை செய்து பார்த்தால், "தனிமை இல்லாத இடத்தில் நிச்சயமாக இறைவணக்கம் இருக்க முடியாது!" என்று நீங்களே தீர்ப்புக் கொடுத்து விடுவீர்கள்.

இப்படிச் சிந்தனை செய்து ஒரு முடிவுக்கு நீங்கள் வருவதானால் அதற்கும் தனிமைதான் தேவைப்படுகிறது என்பது நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டிய ஒன்று.

---

*'இஹ்யாவு உலூமித்தீனி'ல் ஒரு பகுதியான இந்த நூலின் விரிவுரை 'இறைவணக்கம்' என்ற பெயரில் ஏற்கெனவே வெளிவந்துவிட்டது.



சமுதாயத்தில் கலந்துவாழ்வதால் ஒரு மனிதனுக்கு எப்படிப்பட்ட தீமைகள் ஏற்படுகின்றன என்று தீர்மானிக்கும் நோக்கத்தைக் குறியாக வைத்து, பக்தாதைச் சேர்ந்த அறிஞர்களில் சிலர் ஊருக்கு வெளியே சென்று தனித்து வாழ்ந்து சிந்தனை செய்தார்கள் என்ற வரலாற்றுக் குறிப்பு, அடுத்து உங்கள் கவனத்துக்கு நான் கொண்டுவர விரும்பும் செய்தியாகும்.

இதனால்தான், "திருக்குர்ஆனின் சட்டங்களை முறைப்படி பின்பற்றும் எண்ணம் கொண்டவன் அவசியம் தனிமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்" என்று ஓர் அறிஞர் குறிப்பிட்டார்.

நமது முன்னோரில் சிலரது வாழ்க்கை இந்த அறிஞரின் கருத்துக்குத் தெளிவான உதாரணமாக அமைந்திருக்கிறது. அவர்களின் வாழ்க்கை மற்றவர்களின் வாழ்க்கைக்கு முற்றிலும் மாறுபட்டது. எண்ணத்திலும் குறிக்கோளிலும் மட்டுமன்றி, அசைவிலும் பேச்சிலும் கூட அவர்கள் வேறுபட்டு வாழ்ந்தார்கள்

அவர்களின் மனத்தில் இறைவனைப் பற்றிய எண்ணம் எப்போதும் நிறைந்து நின்றது. அவனை அவர்கள் எந்த நேரத்திலும்— எந்தச் சூழலிலும் மறந்தது கிடையாது. மொத்தத்தில், அவர்கள் இறைவனைப் பற்றிய எண்ணத் திலேயே வாழ்ந்தார்கள்; அந்த எண்ணத்துடனேயே இறந்தார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்குச் சமுதாய வாழ்வைவிடத் தனிமையே சிறந்தது. ஏனெனில் அவர்கள் சமுதாயத்தில் கலந்துவாழ முற்படும்போது, தனிமையின் அரவணைப்பில் தாம்பெற்ற அரிய இன்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய அவசியம் ஏற்படும்!

**'ஹிரா' குகையின் தனிமையில்**

இதனால்தான் பெருமானார் நபித்துவம் அடைவதற்குச் சற்று முன்னாலிருந்து தொடர்ந்தாற்போல் 'ஹிரா' குகையின் தனிமையை நாடிச் சென்றார்கள். அங்கே அவர்கள் இறைவனைப் பற்றிய சிந்தனையில் மூழ்கிக் களிப் படைந்தார்கள். இந்தக் குகையில்தான் அவர்களுக்கு முதன்முதலில் இறைச்செய்தி அருளப்பட்டது என்பது எல்லாருக்கும் தெரிந்த ஒன்று.

பின்னர், நபித்துவத்தின் ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கிய பிறகு அவர்கள் சமுதாயத்தில் கலந்து நின்று மக்களில் ஒருவராக வாழ்ந்தார்கள். ஆனால் சமுதாயத்தின் தொடர்பு அவர்களுக்கும் இறைச் சிந்தனைக்கும் நடுவில் தடையாக நிற்கவில்லை. சமுதாயத்தில் இரண்டறக் கலந்துவாழ்ந்து கொண்டிருந் தாலும், அவர்களின் எண்ணம் இறைவன் என்ற ஒரே மையப் புள்ளியைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாத மக்கள், பெருமானாருக்கும் அபூபக்ர் சித்தீக் அவர்களுக்குமுள்ள நெருக்கமான உறவைக் கவனித்துவிட்டு, 'அபூபக்ர் சித்தீக் தான் இறைதூதரின் நண்பர்' என்று நினைத்தார்கள்.

ஆனால் பெருமானார் தம் நிலைமைக்கு இப்படி விளக்கம் கொடுத்தார்கள்:

"நான் யாரையேனும் நண்பராக்கிக் கொள்வதாக இருந்திருந்தால் அபூபக்ரை நண்பராக்கிக் கொண் டிருப்பேன். ஆனால் நான் இறைவனின் நண்பன்."

இப்படிச் சமுதாயத்தில் கலந்து வாழ்ந்து கொண்டே தனிமையின் பயன்களை அடைவது அப்படியொன்றும் சாதாரணக் காரியமல்ல. பொதுவாகக் கூறுவதானால், நபித்துவத்தின் வலிமை துணை செய்யவில்லை என்றால்



இது சிறிதும் சாத்தியமில்லாத ஒன்று. பெருமானாருக்குச் சாத்தியமான ஒன்று தமக்கும் சாத்தியமானதாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்துத் தம்மைத் தாமே யாரும் ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. ஏனெனில் —

தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வது, மற்றவர்களை ஏமாற்றுவதைவிடப் பெரும் குற்றம் என்பது ஞான மார்க்கத்தின் தீர்ப்பு.

எனினும், தம் உடலைச் சமுதாயத்தின் நடுவில் அலையவிட்டுக் கொண்டே உள்ளத்தால் இறைவனைத் தியானிக்கிற இந்தத் தகுதி 'அவ்லியா' எனப்படும் இறை நண்பர்களில் சிலருக்கு உண்டு என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன்.

ஞானி ஜுனைதுல் பக்தாதியின் கூற்று ஒன்று இந்த இடத்திற்கு மிகப் பொருத்தமானது:

''முப்பது ஆண்டுகளாக நான் இறைவனோடு உரையாடிக் கொண்டிருக்கிறேன். ஆனால் மக்கள் நினைக்கிறார்கள்— நான் அவர்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறேன் என்று!"

இந்தக் கூற்று உங்களில் யாருக்கும் குழப்பத்தைத் தோற்றுவிக்கக் கூடாது என்று நான் நினைக்கிறேன்; 'இது எப்படிச் சாத்தியமாகும்?' என்ற சந்தேகத்தை உண்டாக்கிவிடக் கூடாது என்று விரும்புகிறேன்.

சமுதாயமும் தனிமையும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு சூழல்கள். சற்று முன்னர் நான் குறிப்பிட்டதுபோல், இவை இரண்டையும் ஒரே நேரத்தில் ஒன்று சேர்ப்பது மிகச் சிரமமான ஒன்று. என்னுடைய இந்தக் கருத்தில் உங்களுக்குச் சந்தேகம் தோன்றினால், சற்றுநேரம் அமைதியாக உட்கார்ந்து சிந்தனை செய்து பாருங்கள். அப்புறம், உங்கள் மனத்தில் தோன்றிய சந்தேகம் மாயமாக

மறைந்து எங்கு சென்றது என்பதை உங்களாலேயே கண்டுபிடிக்க முடியாது.

பொருளாதாரப் பிரச்சினையில் — அல்லது, குடும்பப் பிரச்சினையில் — அல்லது, சமுதாயப் பிரச்சினையில் சிக்கிக் கொண்டு தவிக்கிறவர்களை நீங்கள் பார்த்திருக் கலாம்; மக்களிடையில் அவர்கள் பழகும்போது எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைக் கவனிக்கலாம். அவர்கள் அன்றாட வேலைகளைச் செய்வார்கள். நண்பர்களோடு உரையாடுவார்கள்; விளையாடுவார்கள்; சிரிப்பார்கள்.

ஆனால் மனத்தைச் சொந்தப் பிரச்சினை சித்திரவதை செய்துகொண்டிருக்கிற காரணத்தால் அவர்களின் சொல்லிலும் செயலிலும் உயிர்த்துடிப்புக் குறைந்திருப்பதை எவரும் தெரிந்து கொள்ளலாம். அவர்களின் எண்ணத்தில் ஏதோ ஓர் உறுத்தல் இருக்கிறது என்பதை எவரும் புரிந்து கொள்ளலாம்.

அவர்கள் மனத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு வாயால் வேறொன்றைக் கூறுவார்கள். சில நேரங்களில் தம் எதிரில் நடப்பவற்றை உணர இயலாதவர்களாகவும் தம்மிடம் சொல்லப்படும் செய்திகளைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும் இருப்பார்கள். இதனால் நீங்கள் ஏதேனும் கேட்டால் கிடைக்கும் விடையில் அவர்களின் எண்ணப் புரட்சியின் சாயல் சுத்தமாகப் படிந்திருக்கும்.

மொத்தத்தில், அவர்கள் கடுமையான பசியுடன் மரத்தடியில் படுத்திருந்த மனிதனைப் போலவே இருப்பார்கள். அவனைப் பார்த்து—

"நான்கும் ஆறும் சேர்ந்தால் மொத்தம் எவ்வளவு?" என்று யாரோ கேட்டார்களாம்.

அவன் துள்ளி எழுந்து இப்படிப் பதில் சொன்னானாம்; "பத்து கோதுமை ரொட்டிகள்!"



இவர்கள் தனிமையில் தோன்றும் பிரச்சினைகளிடம் தம் உள்ளத்தை அடகு வைத்துவிட்டுச் சமுதாயத்தில் கலந்து வாழ்கிறார்கள். இதனால் அவர்கள் சமுதாயத்தின் நன்மைகளை மட்டுமன்றி, தனிமையின் பயன்களையும் இழக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. என்றாலும் மக்களிடையே பழகிக்கொண்டு அதற்கு நேர்மாறான ஒன்றில் எண்ணத்தை வைத்திருப்பதால் இவர்களைப் பற்றி—

"உடலால் மக்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள். மனத்தால் தனிமையில் அலைகிறார்கள்" என்று நாம் குறிப்பிட்டால், அதில் அப்படியொன்றும் பெரிய தவறு கிடையாது.

இத்தகையவர்களைக் கண்களால் பார்ப்பதற்கு நீங்கள் அரபியாவிலிருந்து அபிசீனியாவரை நடந்துசெல்ல வேண்டிய தில்லை. நீங்கள் பழகுகிற மக்களிலேயே இப்படிப்பட்ட பலரைப் பார்க்கலாம். இன்னும் சொல்லப்போனால்—

இதைப் படித்துக் கொண்டிருப்பவர்களில் சிலர்— அல்லது பலர் இப்படிப்பட்ட நிலையில்தான் இருக்கிறார்கள் என்றால், நான் சிறிதும் வியப்பு அடையப் போவதில்லை.

"நானும் இதே நிலையில்தான் இருக்கிறேன்" என்று நீங்களே சொல்கிறீர்களா? நான் ஆச்சரியப்படவில்லை.

சமுதாயத்தையும் தனிமையையும் அரைகுறை யாகவேனும் ஒன்று சேர்ப்பது சாதாரண மனிதனுக்கே சாத்தியம் என்றால்—

ஜுனைதுல் பக்தாதி போன்ற ஞானிகளுக்கு அது ஏன் சாத்தியமில்லை? அவர்களின் கூற்றில் குழப்பத்திற்கும் சந்தேகத்திற்கும் எப்படி இடம் இருக்க முடியும்?

இங்கே மிக முக்கியமான செய்தியொன்றை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்:

'பத்து கோதுமை ரொட்டிகள்' என்று சொன்னவனின் மனமும் ஜுனைதுல் பக்தாதியின் மனமும் ஒரே நிலைமையில் தான் இருந்தது என்று நினைத்துவிடாதீர்கள். முன்னவன் ஒரு சாரரைச் சேர்ந்தவன்; பின்னவர் வேறொரு சாராரில் ஓர் உறுப்பினர்.

முதல் சாரார், தனிமையில் தோன்றும் இன்பங் களையும் துன்பங்களையும் அடக்கியாண்டு தம் அதிகாரத் திற்குள் கொண்டு வருவது எப்படி என்று தெரிந்து கொள்ளாதவர்கள்; தனிமையில் தோன்றிய பிரச்சினைகளை மனத்தில் தாங்கிக் கொண்டு சமுதாயத்தில் கலந்து வாழ்கிறவர்கள்; சமுதாயத்தில் எப்படிப் பழக வேண்டும் என்ற அறிவை மறந்தவர்கள்; இப்படித்தான் பேச வேண்டும் என்று தெரியாத காரணத்தால் எப்படியெப்படியோ பேசுகிறவர்கள். மொத்தத்தில் இவர்கள்—

மக்களிடையே நடமாடியபடியே தூங்கிக் கொண்டிருப்பவர்கள்!

**முழுமையான விழிப்பு நிலை**

இரண்டாம் சாரார் முழுமையான விழிப்புணர்வு பெற்றவர்கள்; தனிமையில் வாழ்வதாலும் மக்களிடம் பழகுவதாலும் தோன்றுகிற எல்லா நன்மைகளையும், அனைத்துத் தீமைகளையும் நன்கு உணர்ந்தவர்கள்; தமக்கு ஏற்படுகிற எந்தப் பிரச்சினையையும் நேருக்கு நேர் நின்று அமைதியாகச் சமாளிக்கும் தகுதி படைத்தவர்கள். இதனால் அவர்கள் சமுதாயத்தில் கலந்து உறவாடும்போது அவர்களின் பேச்சிலும் செயலிலும் முழுமையான உயிர்த் துடிப்புக் காணப்பட்டது. தம்மிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்குத் தெளிவாகவும் அழுத்தமாகவும் விடை கொடுப்பது அவர்களுக்கு மிகச் சுலபமான காரியம்.

கோடி கோடியான இன்பங்கள் கொட்டிக் குவிந்து கிடக்கிற இந்த உலகத்தில் அவர்கள் இறைவனைப் பற்றிய



சிந்தனையில் பேரின்பம் கண்டார்கள்; 'அவர்களின் உள்ளத்தில் இறைவனைத் தவிர்த்து வேறு எந்தப் பொருளுக்கும் இடம் கிடையாது' என்று கூறும் வகையில் வாழ்ந்தார்கள். மொத்தத்தில் அவர்கள்—

மக்களிடையில் பழகியபடியே இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தார்கள்!

இரு சாராருக்குமுள்ள இந்த வேற்றுமையை நீங்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். பனித்துளி எப்படி ஒளி சிந்தினாலும் அது வைரமாக முடியாது. இரண்டும் ஒன்றுதான் எனக் கூறுகிற குற்றத்தை நீங்கள் என்றைக்கும் செய்யக்கூடாது.

மேலே நான் குறிப்பிட்டதுபோல், வேறு எந்த எண்ணத்திற்கும் இடம் கொடுக்காமல் இறைவனைப் பற்றிய சிந்தனையிலேயே மூழ்கியிருக்கிற சிலருக்குத் தான்—

சமுதாயத்தில் கலந்து வாழ்ந்து கொண்டே இறைவனைத் தியானிக்கும் தகுதி உண்டு. மக்களில் பெரும்பாலோருக்கு இது சிறிதும் சாத்தியமில்லாத ஒன்று. எனவே அவர்கள் இறைச் சிந்தனையின் இன்பத்தைச் சுவைக்க விரும்பினால் தனிமையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இப்போது, தனிமையைத் தேர்ந்தெடுத்தவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம்.

அறிஞர் ஒருவரிடம் இப்படியொரு கேள்வி கேட்கப்பட்டது:

"அறிவு படைத்தவர்கள் தனிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களே அதற்குக் காரணம் என்ன? சமுதாயத்தைவிட்டு விலகி வாழ்வதில் அவர்கள் என்ன நன்மையை எதிர்பார்க்கிறார்கள்?"

அந்த அறிஞர் பதிலளித்தார்: "தம் உள்ளத்தில் சிந்தனை எப்போதும் நிலைத்து நிற்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்; மனத்தில் அறிவுகள் ஆழமாகப் பதிய வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இதனால், தாம் சிறந்த முறையில் வாழமுடியும் என்றும் 'மஅரிஃபா' எனப்படும் ஞானத்தின் தித்திப்பைச் சுவைக்க முடியும் என்றும் உணர்கிறார்கள். அவர்கள் தனிமையைத் தேர்ந்தெடுப்பதற்கு இதுதான் காரணம்."

—மக்களோடு இணைந்து வாழ்கிறவர்களுக்கு இந்த நன்மைகள் கிடைக்க முடியாது என்பது இதன் கருத்து.

## இறைவனிடம் பேசும் மனிதர்

"தனிமையின் துன்பத்தை நீங்கள் எப்படிச் சகித்துக் கொள்கிறீர்கள்?" என்று துறவியொருவர் வினவப்பட்டபோது, அவர் இப்படி விடை கொடுத்தார்:

"நான் தனியாக இருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? அப்படியில்லை. நான் இறைவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறேன். என்னிடம் அவன் பேச வேண்டும் என்று நான் விரும்பினால், திருக்குர்ஆனை எடுத்து வைத்து ஓதுவேன். அவனோடு நான் உரையாட வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டால், தொழுகையில் ஈடுபடுவேன்."

—இங்கே நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை: பெரும்பாலோருக்குச் சிரமமானதாகத் தோன்றுகிற ஒன்று. பக்தி மனம் படைத்த சிலருக்கு இன்பம் நிறைந்த ஒன்றாகத் தெரிகிறது.

"நீங்கள் சமுதாயத்தைவிட்டு விலகித் தனிமையில் வாழ்கிறீர்கள்; துறவறத்தைக் கடைப்பிடிக்கிறீர்கள். இதனால் நீங்கள் அடையும் நன்மை என்ன?" எனக் கேட்கப்பட்டபோது அறிஞர் ஒருவர் பதில் கொடுத்தார் :



## "இறைவன்மீது பேரன்பு!"

—தனிமை என்பது இறைவன்மீது பேரன்பைத் தோற்றுவிக்கும் வழிகளில் சிறந்தது என்பது மட்டுமன்றி, தனிமையைப் புறக்கணிக்கிறவர்களின் உள்ளத்தில் இறைவன்மீது பேரன்பு தோன்ற முடியாது என்ற உண்மையும் இங்கே சுட்டிக் காட்டப்படுவதை நீங்கள் பார்க்கலாம்.

"இப்ராஹீம்! நீங்கள் குராஸான் நாட்டைவிட்டு ஏன் இங்கு வந்துவிட்டீர்கள்?" என்று கேட்டார் சுஃப்யான் பின் உயைனா.

இப்ராஹீம் பின் அத்ஹம் கொடுத்த பதில்:

என் மார்க்கத்தை எடுத்துக் கொண்டு ஒவ்வோர் இடமாக ஓடிக் கொண்டிருந்தேன். என்னைப் பார்த்தவர்கள்—

'வாழ்க்கையில் குழப்பமடைந்தவன்' என்றோ—

'பிறருடைய பொருள்களைத் தலைமீது சுமந்து வருகிற வேலைக்காரன்' என்றோ—

'உப்பு விற்பவன்' என்றோ சொன்னார்கள். அப்போதெல்லாம் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை. அப்புறம் இங்கே வந்து தனிமையில் வாழ்கிறேன். இங்கேதான் வாழ்க்கையின் இன்பத்தை நான் அனுபவிக்கிறேன்.

—மார்க்கத்தின் அடிப்படையில் வாழ்க்கையின் இன்பத்தைச் சுவைக்க விரும்புகிறவர்களுக்குச் சமுதாய வாழ்வினால் நன்மை கிடைக்காது எனும் கருத்து இங்கே வலியுறுத்தப்படுகிறது.

"நீங்கள் எங்களோடு உட்கார்ந்து உரையாடுவதில்லை. நீங்கள் சிரித்து நாங்கள் பார்த்ததில்லை. மக்களிடம் கலந்து பழக முடியாதவாறு எது உங்களைத் தடுக்கிறது? நீங்கள்

ஏன் தனித்தே வாழ்கிறீர்கள்?" என்று கேட்கப்பட்டார் கஸ்வான்.

கஸ்வானின் விடை சுருக்கமானது. அதே நேரத்தில் விளக்கமானது.

"என்னுடைய தேவைகள் நிறைவேறுவதற்கு யாருடைய உதவி எனக்கு அவசியமோ அவனுக்கு அருகில் உட்காருவதில் என் மனம் ஆனந்தம் அடைகிறது."

—தனிமையில் அமர்ந்து இறைவனைத் தியானிப்பதில் கிடைக்கும் இன்பம் இங்கு குறிக்கப்படுகிறது. இறைவனின் உதவி தேவைப்படாத எந்த மனிதனையும் நீங்கள் பார்க்க முடியாது. கண்களுக்கு மறைந்திருக்கும் அவன் கற்பனைக்கும் எட்டாத வகையில் செய்துவரும் உதவிகளுக்கு யார் எப்படி விளக்கம் கொடுக்க முடியும்? தனிமையில் அமர்ந்து அவனைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருப்பவர்கள் அடைகிற இன்பத்துக்கு யார் எப்படி எல்லைக்கோடு போட முடியும்?

## தோன்றும் எண்ணமெல்லாம் அறிவாக முடியாது!

"இறைவனின் உதவியின்றி யாரும் வாழ முடியாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் தாம் இறைவனின் உதவி இல்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பதாக நினைக்கிறவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று உங்களில் யாரேனும் கேட்க எண்ணினால்—

அவர்களுக்கு நான் சொல்கிறேன்:

இப்படிப்பட்டவர்கள் நோய் கொண்ட மனம் படைத்தவர்கள். அன்றாட வாழ்க்கையின் நிகழ்ச்சிகளி லிருந்து உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்குப் பதிலாக, தம் மனத்தில் தோன்றும் எண்ணங்களை எல்லாம் 'அறிவுகள்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த



'அறிவுகளை' அவர்கள் முறையான பரிசீலனைக்குக் கொண்டு வருவதில்லை என்பது மட்டுமல்ல, தம்மைத் தவிர்த்து வேறு யாருக்கும் உண்மையான அறிவு கிடையாது என்ற எண்ணத்தில் கர்வம் கொண்டு தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

வேறு எதற்கும் இடமில்லாதபடி அவர்களின் மனத்தில் கர்வம் குடிகொண்டிருப்பதால் அறிவுரை கூறி உண்மையை அவர்களுக்கு எடுத்துக் காட்டுவது அப்படியொன்றும் சாதாரணக் காரியமல்ல. தமக்குத் தாமே ஆழ்ந்து சிந்தனை செய்து அடிமனத்தைத் தொட்டுத் தடவிப் பார்க்கும்வரை உள்ளதை உள்ளபடி தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாது.

பகலில் தூங்கும் பூனை தன் கண்களைத் தானாகவே திறந்து பார்க்கும்வரை உலகத்தின் வெளிச்சத்தைக் காணும் வாய்ப்பு அதற்குக் கிடைக்க முடியாது.

தனிமையின் நன்மைகளைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், கண்களைத் திறந்து வைத்தபடியே ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறவர்களைக் குறித்து உரையாடுவது நமக்கு நல்லதல்ல. இவர்களைப் பற்றி 'அறிவும் தெளிவும்' என்ற பெயரில் ஏற்கெனவே நான் ஒரு சிறிய நூல் எழுதியிருக்கிறேன். அவசியம் என்று நீங்கள் நினைத்தால் அந்த நூலைப் படித்துப் பாருங்கள்.

அடுத்து வரும் செய்தி ஹஸன் பஸ்ரியைப் பற்றியது.

ஞானத் துறையில் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்த ஹஸன் பஸ்ரி மதீனமா நகரில் பிறந்திருந் தாலும், அவரது ஞானப் போதனைகள் அனைத்தும் பஸ்ரா நகரிலேயே நடந்து கொண்டிருந்தன. ஹிஜ்ரி வருடக் கணக்குப்படி 89 ஆண்டுகள் வாழ்ந்த அவரது முழுப் பெயர்: ஹஸன் அபூ ஸயீத். 'ஹஸன்' என்றும் 'அபூ ஸயீத்'

என்றும் பஸ்ரா வாசிகளால் அழைக்கப்பட்ட அவர் சில வேளைகளில் தம்மைத் தாமே 'ஹஸன்' என்று குறிப்பிட்டுப் பேசுவதுண்டு.

ஹஸன் பஸ்ரி பெருமானாரைச் சந்தித்ததில்லை. என்றாலும் உஸ்மான் பின் அஃப்பான், அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ஆகிய நபித் தோழர்களைக் கண்டு உரையாடி யிருக்கிறார். ஹிஜ்ரி 21-ஆம் ஆண்டிலிருந்து 110-ஆண்டுவரை (642—728 கி.பி.) வாழ்ந்த ஹஸன் பஸ்ரியின் ஆத்மிகக் கருத்துக்கள், ஞான மார்க்கத்தில் ஆர்வம் கொண்ட எவரும் சிறிதும் சிந்தனை செய்யாமல் அப்படியே ஏற்றுக் கொள்ளத் தகுந்தவை.

ஹஸன் பஸ்ரி தம் மாணாக்கர்களோடு உரையாடிக் கொண்டிருந்த நேரத்தில்—

''பஸ்ராவில் ஒரு மனிதர் இருக்கிறார். அவர் மக்களோடு பழகியதை நாங்கள் ஒரு போதும் பார்த்த தில்லை. எப்போதும் தனிமையில்தான் அவர் உட்கார்ந் திருக்கிறார்!" என்று மாணாக்கர்கள் சொன்னார்கள்.

"அவரை உங்களில் யாரேனும் பார்க்க நேர்ந்தால் என்னிடம் வந்து சொல்லுங்கள்." —இது ஹஸன் பஸ்ரியின் கட்டளை.

ஒரு நாள் அந்த மனிதர் மாணாக்கர்களால் ஹஸன் பஸ்ரிக்குச் சுட்டிக் காட்டப்பட்டார். "அன்று ஒரு நாள் நாங்கள் குறிப்பிட்ட மனிதர் இவர்தான்."

ஆர்வத்துடன் ஏறிட்டுப் பார்த்த ஹஸன் பஸ்ரியின் கால்கள் அந்த மனிதரை நோக்கி விரைவாக நடந்தன.

"தனித்து வாழ்வதில் நீங்கள் விருப்பம் கொண் டிருப்பதை நான் பார்க்கிறேன். மக்களோடு கலந்துவாழ முடியாதபடி எது உங்களைத் தடுக்கிறது?"



அந்த மனிதர் சொன்னார்: "ஒரு வேலையில் ஈடுபட் டிருக்கிறேன். என் சிந்தனை முழுவதும் அதில் மூழ்கியிருக் கிறது. நான் மேற்கொண்டிருக்கும் அந்த வேலை, என்னை மக்களிடம் கலந்து உறவாட முடியாதபடி தடுக்கிறது."

தம்மைத் தாமே சுட்டிக்காட்டிக் கொண்டபடி ஹஸன் பஸ்ரி கேட்டார்: "ஹஸன் என்று அழைக்கப்படுகிற இந்த மனிதனிடம் ஏன் நீங்கள் பழகக் கூடாது?"

கேட்கப்பட்டவரின் விடை அழுத்தத்துடன் வெளிப்பட்டது.

"மக்களிடம் பழக முடியாமல் தடுக்கிற அதே வேலை, ஹஸனிடமும் பழகமுடியாதவாறு எனக்குத் தடை போடுகிறது."

ஹஸன் பஸ்ரியின் கண்கள் வியப்பால் விரிந்தன. மாணாக்கர்கள். வாயடைத்துப் போய் கற்சிலைகளாக நின்றார்கள். இது சிறிதும் எதிர்பார்க்கப்படாத விடை அல்லவா?

''இறைவன் உங்களுக்கு அருள்பாலிப்பானாக! உலகத்தையே கட்டோடு ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தனிமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் அளவுக்கு நீங்கள் அப்படி என்ன வேலைதான் செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

—கேட்டவர் ஹஸன் பஸ்ரி.

உடன் பதில் வந்தது: "காலையிலிருந்து மாலைவரை இறைவனின் அருளும் என்னுடைய பாவமும் குவிந்து வருகின்றன. இறைவன் தருகிற அருளுக்கு நன்றி செலுத்துவதிலும் நான் செய்யும் பாவத்துக்கு மன்னிப்புக் கேட்பதிலும் என் எண்ணம் சுழன்று கொண்டிருக்கிறது. இதுதான் நான் மேற்கொண்டிருக்கும் வேலை."

சிறிதுநேரம் சிந்தனை செய்த ஹஸன் பஸ்ரியின் தீர்ப்பு மிகத் தெளிவாக வெளிப்பட்டது.

"உண்மையில் நீங்கள் ஹஸனைவிடத் தெளிவு படைத்தவர். இது என் தீர்மானம். நீங்கள் மேற்கொண்டிருக்கிற வேலையைக் குறையின்றிச் செய்யுங்கள். நீங்கள் எப்படி வாழ்கிறீர்களோ அப்படியே வாழுங்கள்."

—இங்கே நாம் புரிந்துகொள்ளும் உண்மை, நல்ல விளைவுகளைத் தோற்றுவிக்கிற தனிமைக்கு ஹஸன் பஸ்ரியின் ஆதரவு உண்டு என்பது மட்டுமல்ல, அவர் மிகப்பெரும் தைரியசாலி என்பதுமாகும். தம் மாணக்கர்களுக்கு எதிரில் தம்மைத் தாமே தாழ்த்திப் பேசும் துணிவு பெரும்பாலான அறிஞர்களிடம் இல்லாத ஒன்று.

அடுத்து, உவைஸ் கர்னியைப் பற்றிய வரலாற்றுத் துணுக்கு ஒன்றைப் பார்ப்போம். ஞான மார்க்கத்திற்குத் தம் வாணாளைத் தியாகம் செய்தவர்களில் உவைஸ் கர்னிக்கு மிக உயர்ந்த இடம் உண்டு. பெருமானார் மீது அவர் கொண்டிருந்த ஆழமான அன்பு எல்லாருக்கும் தெரிந்த ஒன்று.

ஒரு நாள் உவைஸ் கர்னி தனியே உட்கார்ந்திருந்த நேரத்தில் அறிஞர் ஹரம் அங்கு வந்தார்.

"ஹரம்! என்ன வேலையாக இங்கே வந்திருக்கிறீர்கள்?" ஹரம் பணிவுடன் பதிலளித்தார்:

"உங்கள் மீது நான் பேரன்பு வைத்திருக்கிறேன். உங்களிடம் பழகுவதற்காகவே வந்திருக்கிறேன்."

உவைஸ் கர்னியின் பார்வை கூர்மையடைந்தது; கணீரென்று வெளிப்பட்ட வார்த்தைகள் 'நீங்கள் நிறையத் தெரிந்திருக்கிறீர்கள். ஆனால் தெரிந்து கொள்ள வேண்டிய தெளிவான செய்தியை இன்னும் நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையே! நான் சொல்வதைக் கேட்டாகிலும் தெரிந்து கொள்ளுங்கள்' என்று கூறுவதுபோல் இருந்தன:



"தன் நாயனைப் பற்றித் தெரிந்து கொண்ட எந்த மனிதனும் மற்றவர்கள் மீது பேரன்பு கொண்டதாக இதுவரை எனக்குத் தெரியவில்லை!"

"என்னை இரவு நெருங்குகிறது என்பதை உணர்ந்ததும், 'இறைவனோடு—என் நாயனோடு தனித்திருக்கப் போகிறேன்' என்று நினைத்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். பகல் என்னை அணுகுகிறது என்பதைக் கண்டதும், மக்களைச் சந்திக்கவேண்டிய அவசியம் ஏற்படும்; அவர்களில் ஒருவன் என் சிந்தனையை இறைவனைவிட்டு வேறுபக்கம் திருப்பிவிடக்கூடும்' என்ற எண்ணத்தினால் என் மனம் வெறுப்படைகிறது."

—இது அறிஞர் புஸைலிடமிருந்து உதிர்ந்த கருத்து. இந்தக் கருத்தை அனுபவத்தினால் உணர்ந்து கொண்ட சிலரேனும் உங்களிடையே இருக்கலாம். "அந்தச் சிலரில் நானும் ஒருவன்" என்று மனப்பூர்வமாக நீங்கள் கூறுகிறீர்களா? அப்படியானால், நல்ல விளைவுகளையும் தீய முடிவுகளையும் தோற்றுவிக்கிற சொல்லையும் செயலையும் இனம் பிரித்துப் பார்க்கும் சக்தி உங்களுக்கு வந்துவிட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். தம்மிடம் இருக்கிற ஒன்றைத் தெரிந்து கொள்ளாமல் இல்லாத ஒன்றுக்கு உரிமை கொண்டாடுகிறவர்களின் பட்டியலில் உங்கள் பெயர் வந்துவிடக் கூடாது. 'தனிமையின் நன்மைகள்' எனும் தலைப்பின்கீழ் உரையாடுவதற்கென்று நாம் செலவிட்டுக் கொண்டிருக்கும் நேரம் உங்களுக்கு மிகப்பெரும் நன்மையை உருவாக்கித் தரக்கூடியதாகும்.

**விலை கேட்கும் வினா**

உங்களில் வேறு சிலருக்கு, அல்லது யாரேனும் ஒருவருக்கு—

'அறிஞர் புஸைலைப்போல் நடந்து கொள்வதானால் உலகத்தில் எப்படி வாழமுடியும்? நடைமுறைக்கு இது

எப்படிச் சாத்தியமாக இருக்க முடியும்' என்ற சந்தேங்கள் தோன்றினால், அவர்களுக்கு நான் நினைவுப்படுத்துகிறேன்:

தனிமை பற்றிய நமது உரையாடலின் ஆரம்பத்தில் 'என் பேச்சு முழுவதையும் கேட்பதற்கு முன்னர்—அதாவது இந்த நூல் முழுவதையும் படிப்பதற்கு முன்னர் நீங்கள் எந்த முடிவுக்கும் வந்துவிடக் கூடாது' என்று குறிப்பிட்டிருக்கிறேன். எனவே—

பொறுமையோடு உட்கார்ந்து நான் பேசுவதைக் கவனித்துக் கேளுங்கள். அப்புறம் உங்களை நீங்களே சற்றுநேரம் உற்றுப் பார்த்து, முன்னால் தோன்றிய சந்தேகம் பின்னாலும் நிலைத்து நிற்கிறதா என்று கண்டுபிடித்து எனக்குக் கூறுங்கள். தோன்றுகிற சந்தேகங்கள் அனைத்துக்கும் உடனடியான விளக்கங்கள் கிடைப்பது என்றைக்கும் சாத்தியமில்லாதது. மனத்தில் தோன்றும் சந்தேகத்தைத் துடைத்து வீசுகிற விளக்கம் சில வேளைகளில் பொறுமையை விலையாகக் கேட்பதுண்டு. இதனால், விலை கொடுக்காமல் விளக்கம் பெறத் துடிப்பவர்கள் தம் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பை அடியோடு இழந்து விடுவார்கள்.

உங்களில் யாரும் இந்த நிலைமைக்கு வந்து விடக்கூடாது என்பது என் விருப்பம். நீங்கள் என்னுடன் ஒத்துழைத்தால் உங்களுக்கு நிச்சயமாக விளக்கம் கிடைக்கும்; இதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. ஒத்துழைக்கவில்லை என்றால்—

ஏற்படப் போகும் இழப்பு உங்களை மறந்துவிட்டு மற்றவர்களைத் தேடியலையாது.

இப்போது, தனிமையினால் நன்மை அடைந்த வேறு சில அறிஞர்களின் கருத்துக்களை நாம் பார்க்க வேண்டும்.

அப்துல்லாஹ் பின் ஸைது சொன்னார்:



"உலகில் இருந்து கொண்டே மறுமையில் வாழும் மனிதன் சிறப்பு மிக்கவன்."

"அது எப்படிச் சாத்தியமாகும்? நீங்கள் குறிப்பிடும் மனிதன் எவ்வாறு நடந்து கொள்வான் என்று சொல்லுங்கள்!"

அப்துல்லாஹ் பின் ஸைதின் விடையில் சிறிதளவும் தயக்கம் காணப்படவில்லை.

"அவன் உலகில் வாழ்ந்து கொண்டே இறைவனோடு மோன உரையாடல் நடத்துவான். மறுமையில் இறைவனின் அண்டை வீட்டுக்காரனாக இருப்பான்!"

அடுத்து நீங்கள் கேட்கப்போவது துன்னூன் மிஸ்ரியின் குரல் :

"தனிமையில் உட்கார்ந்து நாயனோடு மோன உரையாடல் நடத்துவதில்தான் ஒரு மூமினுக்கு மகிழ்ச்சியும் இன்பமும் கிடைக்க முடியும்."

— இந்த இரண்டு அறிஞர்களின் கூற்றுக்களும் ஒரு முகமாக வலியுறுத்தும் கருத்து :

> இறைவனைத் தியானிப்பதும் அதில் இன்பம் அடைவதும் தனிமையை நாடிச் செல்கிறவர் களுக்குத்தான் சாத்தியம்; அல்லாதவர்கள் அவற்றை இழந்தே ஆக வேண்டும்.

இதே கருத்தை ஆதரிக்கிறது மாலிக் பின் தீனாரின் கூற்று. அதே நேரத்தில், எதிர்நடை போடுகிறவர்களுக் காகக் காத்துக் கொண்டிருக்கிற தீமைகளையும் சுட்டிக் காட்டுகிறது.

"ஒருவன் மக்களோடு கலந்து பேசுவதை விட்டுவிட்டு இறைவனோடு கலந்து பேசவில்லை என்றால்—

"அவனுடைய அறிவு குறைபாடு கொண்டது; தெளி வில்லாதது. அவனுடைய உள்ளம் குருட்டுத்தனம்

கொண்டது; உண்மையை ஊடுருவித் தெரிந்து கொள்ளும் சக்தியற்றது. அவனுடைய வாழ்க்கை பாழ்பட்டுப்போனது; தனது வலிமையை இழந்தது."

அறிவு, உள்ளம், வாழ்க்கை ஆகிய மூன்றும் தம் தகுதியைத் துறந்துவிட்ட பின்னர் ஒரு மனிதனுக்கு இந்த மண்ணுலகில் வாழ்வதற்குத் தேவையான திறமையே இருக்கமுடியாது. மண்ணகத்தில் வாழும் தகுதியே இல்லாத ஒருவனுக்கு ஆத்மிகத் துறையின் அரிய இன்பங்களைச் சுவைக்கும் பேறு எப்படிக் கிடைக்க முடியும்?

உலகத்தில் இன்பம் அடைவதைவிட ஆத்மிகத்தில் இன்பம் பெறுவது மிகக் கடினமானது என்பதில் அறிஞர்கள் கருத்து வேற்றுமை கொள்ளவில்லை!

கரடுமுரடான பாதையில் சிரமப்பட்டு நடந்து சென்று பேரின்பம் அடைகிற சிலரைப் பற்றித்தான், "எல்லாவித மான பிணைப்புகளையும் அறுத்தெறிந்துவிட்டு இறைவனை நெருங்குகிற மனிதனின் நிலைமை எவ்வளவு சிறந்தது!" என்று வியப்படைந்து கூறுகிறார் இப்னு முபாரக்.

இப்படிப்பட்ட மனிதனை இப்னு முபாரக் பாராட்டு கிறார் என்பது மட்டுமல்ல, இத்தகையவர்களில் அவரும் ஒருவர் என்பதும் இங்கு குறிப்பிடத் தகுந்தது.

**வாழ்க்கையே பயிற்சியாகி விடக்கூடாது**

இறைவன் காட்டிய வழியில் நடந்து சென்ற நல்லடியார்களில் ஒருவர் தம் அனுபவத்தைக் கூறுகிறார்:

சிரியாவைச் சேர்ந்த ஏதோ ஓர் ஊரில் அப்போது நான் தங்கியிருந்தேன். ஒரு வேலையாக நான் சென்று கொண்டிருந்தபோது, அங்கிருந்த மலைகள் ஒன்றின் குகையிலிருந்து ஒரு மனிதர் வெளியில் வந்தார்.



என்னை அவர் பார்த்ததும் பேதமடைந்த முகத்துடன் பக்கத்திலிருந்த பெரியதொரு மரத்தை நோக்கி விரைவாக நடந்தார். 'நடந்தார்' என்று சொல்வதற்குப் பதிலாக 'ஓடினார்' என்று சொன்னால் இன்னும் பொருத்தமாக இருக்கும்.

மரத்தை நெருங்கியதும் அவர் செய்த வேலை விசித்திரமானது: மரத்துக்குப் பின்னால் சென்று என் பார்வை படாதபடி மரத்தடியில் ஒளிந்து கொண்டார்!

அவரது செயலுக்குக் காரணம் தெரிந்து கொள்ளும் நோக்கத்தில் மரத்தடியை நோக்கி நடந்தேன். இனிமேலும் ஒளிந்து கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று உணர்ந்து கொண்ட முகத் தோற்றத்துடன் அவர் ஏறிட்டுப் பார்த்தார்.

"சுப்ஹானல்லாஹ்! ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? என்னைப் பார்ப்பதில் கூடக் கஞ்சத்தனம் காட்டுகிறீர்களே, இதற்குக் காரணம் தான் என்ன?" என்று நான் கேட்டேன்.

ஒளிந்து கொண்டிருந்த மனிதர் மலையைச் சுட்டிக் காட்டினார்.

நீண்ட காலமாக இந்த மலையில்தான் நான் தங்கியிருக்கிறேன். உலகத்தைவிட்டு—அதில் வாழும் மனிதர்களைவிட்டுத் தனித்து வாழ்வதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் சகித்துக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம் எனக்கு வரவேண்டும் என்ற குறிக்கோளில் என் உள்ளத்துக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தேன். இந்த வழியில் எனக்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன; என் வாணாளில் பெரும்பகுதி அழிந்துவிட்டது. பயிற்சியிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தால் பயனடைவது

எப்போது? தனிமையின் நன்மைகளை எந்தக் காலத்தில் அடைவது? எனவே—

"என் வாழ்க்கையில் மீதியிருக்கிற நாட்களையும் மனப் பயிற்சியில் செலவிட்டுத் தீர்க்க வேண்டிய நிலைமையை உண்டாக்கிவிடாதே; மனத்தோடு போராடுவதைத் தவிர்த்து வேறு எந்தப் பேறும் எனக்குக் கிடைக்காதபடி செய்துவிடாதே!" என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்தேன்; முறையிட்டேன்.

கலங்கித் தவிக்கும் அடியார்களுக்கு இறைவனிடம் முறையிடுவதில் கிடைக்கும் அமைதி முறைப்படி விளக்கிக் கூறுவதற்கு வார்த்தைகள் இல்லாத ஒன்று. வெற்றி தருகிறமனித முயற்சிகள் அனைத்தும் இறைவனின் உதவியுடனேயே நடந்து வருகின்றன. மனிதன் என்ன முயற்சி செய்தாலும், இறைவனின் உதவி மட்டும் இல்லை என்றால், அவனால் பயனடைய முடியாது. தாம் செய்யும் முயற்சிகளில் இறைவனின் உதவியும் கலந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல், வெற்றிகளுக்கு மட்டும் தம் திறமையைக் காரணமாகக் காட்டிக் கொண்டு தோல்விகளைச் சுமத்துவதற்கு பிறருடைய தலைகளைத் தேடிக் கொண்டிருக்கிற மனிதர்களை நீங்கள் பார்த்திருக் கலாம். இறைவனுக்குக் கொஞ்சமும் இடம் கொடுக்காமல், அவனைப் பற்றிச் சிறிதும் நினைக்காமல்—

"இல்லறமானாலும் துறவறமானாலும், மனித முயற்சிக்கு அசாத்தியமானது எதுவுமில்லை. எந்தத் துறையிலும் வெற்றிக்கு ஒரே காரணம் முயற்சிதான்; வேறு ஒன்று மில்லை" என்று கூறுகிறவர்களை நீங்கள் கண்டிருக்கலாம்.

ஆனால் சிரியாவின் மலைக்குகையில் மனத்துக்கு வைத்தியம் செய்து கொண்டிருந்த அந்த



மனிதர் இப்படிப்பட்டவர்களைச் சேர்ந்தவரல்ல. அவர் தொடர்கிறார், கவனித்துக் கேளுங்கள்.

"தன் அடியார்கள்மீது பேரன்பு கொண்ட எல்லாம் வல்ல இறைவன் என் முறையீட்டை ஏற்றுக் கொண்டான். நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்த என் உள்ளத்தை அமைதிப்படுத்தினான்; தனிமையின் துன்பத்தை நீக்கினான்; தனித்து வாழ்வதில் ஆர்வத்தைத் தோற்றுவித்தான்.

"உங்களை நான் பார்த்ததும் என் மனத்தில் ஒரு விதமான உறுத்தல் தோன்றிற்று. உங்கள்மீது பிரியம் ஏற்பட்டு, அதன்பலனாக—

"மிகப் பெரும் சிரமங்களுக்குப் பின்னர் நான் சுவைத்துக் கொண்டிருக்கிற தனிமையின்மீது வெறுப்பு ஏற்பட்டு, இறுதி விளைவாக—

"ஆரம்பத்தில் இருந்த அதே நிலைமைக்கு நான் தள்ளப்பட்டுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம் ஏற்பட்டது.

"அப்படிப்பட்ட நிலைமை எனக்கு வந்துவிடக் கூடாது என்று—

"இறையறிவு பெற்றவர்களுக்கு நாயனாகவும் பக்தி மனம் படைத்தவர்களுக்கு நண்பனாகவும் இருக்கிற இறைவனிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்று சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

பின்னர் அவர் ஏதோ தவறு செய்துவிட்டவர் போல் கைகள் இரண்டையும் உதறிக் கொண்டார்.

"இறைப் பணியின் இன்பத்தைத் தெய்வஞானம் பெற்றவர்களின் உள்ளங்களுக்கு உணர்த்திக் காட்டிய இறைவன் மிகத் தூய்மையானவன். மற்றப்

பிணைப்புகள் அனைத்தையும் துண்டித்துக் கொள்வதில் இருக்கிற தித்திப்பையும் அவர்களுக்கு அவன் தெளிவுப்படுத்தினான். இதனால்—

அவர்கள் சொர்க்கத்தையும் சொர்க்கத்து அழகிகளையும் நினைத்துக்கூடப் பார்க்காமல் தம் சிந்தனை முழுவதையும் இறைத் தியானத்திற்குச் செலவிட்டார்கள். தெய்வச் சிந்தனை ஒன்றைத் தவிர்த்து வேறு எதிலும் அவர்களுக்கு இன்பம் கிடையாது!

அப்புறம், அவர் "குத்தூஸ்—குத்தூஸ்" என்று சொல்லிக் கொண்டே மலையை நோக்கி நடந்தார்! 'குத்தூஸ்' என்பது இறைவனின் திருப்பெயர்களில் ஒன்று; 'மிகத் தூய்மையானவன்' என்பது பொருள்.

—சிரியாவைச் சேர்ந்த ஓர் ஊரில் தற்காலிகமாகத் தங்கியிருந்த அந்த நல்லடியார் தாம் பெற்ற அனுபவத்தை இவ்வாறு கூறி முடிக்கிறார்.

இதுவரை நான் எடுத்துக்காட்டிய கருத்துக்கள் அனைத்தையும் நீங்கள் தெளிவுபடப் புரிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இந்தக் கருத்துக்களுக்கு உரியவர்கள் அனைவரும் தனிமைக்குத் தம் ஆதரவு முழுவதையும் கொடுக்கிறார்கள். அதிலிருந்து கிடைக்கும் நன்மைகளுக்கு அனுபவத்தினால் விளக்கம் தருகிறார்கள்.

நீங்கள் கேட்கலாம் :

இதுவரை நீங்கள் எடுத்துக் கூறிய செய்திகளிலிருந்து, இறைவணக்கத்தில் இன்பம் அடைய விரும்புகிறவர்கள் தனிமையைத்தான் நாடிச்செல்ல வேண்டும் எனும் உண்மையை நாங்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டோம்; சமுதாயத்தில் கலந்து வாழ்கிறவர்களுக்கு அந்த இன்பத்தைச்



சுவைக்கும் பேறு கிடைக்க முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டோம். சிறிதுநேரம் சிந்தனை செய்து பார்க்கும்போது, நீங்கள் எடுத்துச் சொல்லாத பல்வேறு நன்மைகள் தனிமையினால் கிடைக்கின்றன என்பதையும் பார்க்கிறோம்.

தனிமை என்பது இறைவணக்கத்திற்கும் மூலத் தத்துவச் சிந்தனைக்கும் மட்டுமன்றி, அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும்—

குடும்பப் பிரச்சினையிலோ சமுதாயப் பிரச்சினையிலோ சிக்கித் தவிப்பவர்கள் அவற்றிலிருந்து வெளியேறுவதற்கும் உதவி செய்யக் கூடிய ஒன்று.

இன்றைக்கு உலகத்தில் காணப்படுகிற முன்னேற்றங்கள் அனைத்தும் ஒரு காலத்தில் தனிமையில் உட்கார்ந்து சிந்தனை செய்தவர்களாலேயே உருவாகியிருக்கின்றன. வர்த்தகத் துறையில் தோன்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இப்போதும் எத்தனையோ பேர் தனிமையைத் தேடிச் செல்கிறார்கள். உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களில் ஒன்றுகூடச் சமுதாயத்திற்கு நடுவிலிருந்து உருவானதில்லை. உங்களால் எழுதப்பட்ட 'இஹ்யாவு உலூமித்தீன்' எனும் இந்த பெருநூல் தனிமையின் உதவியினால்தான் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

"புழுதி படிந்த திண்ணையிலும் நிழல்தராத மரத்தடியிலும் தனியே உட்கார்ந்து இந்த நூலை எழுதினேன்" என்று அதன் முன்னுரையில் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இப்படிச் சிந்தனையைச் செலுத்தும்போது, "சமுதாயத்தில் இரண்டறப் பிணைந்து

வாழ்கிறவர்கள்கூடச் சில நேரங்களில்—அல்லது பல நேரங்களில் தனிமையின் உதவியைத் தேடித்தான் ஆகவேண்டும்" என்று கூறுவதில் தவறு கிடையாது என்ற தெளிவு எங்களுக்குக் கிடைக்கிறது.

தனிமையினால் ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் நன்மைகள் எண்ணற்றவை; எண்ணிப் பார்க்கிற எவருக்கும் அவை தெளிவானவை. ஆனால் மக்களில் பெரும்பாலோர் 'தனிமை' எனும் சொல்லைக் கேட்டதும் வெறுப்படைந்து முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன?

**முரண்பட்ட இரண்டு சூழல்கள்**

தனிமையும் சமுதாயமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு சூழல்கள் என்று ஏற்கெனவே நான் குறிப்பிட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். இப்படித்தான் குறிப்பிட்டேனே தவிர—

"தனித்து வாழ்வதில்தான் எல்லா நன்மைகளும் இருக்கின்றன" என்றோ—

"மக்களோடு கலந்து வாழ்வதில் தீய விளைவுகளைத் தவிர்த்து வேறு எதுவும் உருவாகாது" என்றோ நான் சொல்லவில்லை.

சமுதாயத் தொடர்பினால் சில நன்மைகள் கிடைக்கிற அதே நேரத்தில், தனித்து வாழ்வதால் வேறு சில நன்மைகள் தோன்றுகின்றன. இதேபோன்று, சமுதாய வாழ்வு சில தீமைகளை உண்டாக்குகிற அதே நேரத்தில், தனிமையில் வாழும் மனிதன் வேறு சில தீமைகளுக்குப் பலியாகிறான். இந்த இரண்டு சூழல்களிலும் பரபரப்பின்றி அமைதியாக வாழ்வதற்குச் சில தகுதிகள் இருக்கின்றன. அவற்றை ஒரு மனிதன் பிறப்பாலோ, பழக்கத்தாலோ, பயிற்சியாலோ அடைந்துவிட்டால்—



அவன் சமுதாய வாழ்வின் முழுப் பயனையும் தனிமையின் அனைத்து நன்மைகளையும் நிச்சயமாக அடைய முடியும். இந்தத் தகுதிகள் 'நட்பின் பெட்பு', 'சிந்தனையின் சிறப்பு', 'உணவருந்தும் முறை', 'பக்தர்களின் பாதை', 'ஞானக் கோட்டையின் தலைவாசல்' ஆகிய நூல்களில் விளக்கப்பட்டிருக்கின்றன.*

இந்தத் தகுதிகளைப் பெற்றுக் கொள்ளாத சிலரை—அல்லது பலரைச் சமுதாயத்தின் நடுவில் எந்தக் காலத்திலும் நீங்கள் பார்க்கலாம். இவர்கள் எப்போதும் சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்தே வாழ்வார்கள். எந்த நேரமும் இவர்கள் யாரிடமாவது பேசிக் கொண்டே இருப்பார்கள். கருமேகம் சூழ்ந்து மழை பொழிவதைக் கண்டால் முகத்தைச் சுளித்துக் கொண்டு வானத்தை ஏறிட்டுப் பார்ப்பார்கள் — 'வானம் கண்ணீர் வடிக்கிறதே!' என்ற கவலையினால் அல்ல; வெளியில் சென்று யாருடனும் பழக முடியவில்லையே என்ற ஏக்கத்தினால்! சமுதாயத்தில் கலந்து வாழும்போதுதான் இவர்கள் தைரியத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பார்கள். பழகுவதற்கு யாருமே இல்லாத நேரத்தில் அலைபாயும் மனத்துடன் சோர்வடைந்துபோய் உட்கார்ந்திருப்பார்கள்.

தனிமை என்பது இவர்களுக்கு அறவே பிடிக்காத ஒன்று. உண்மையில் இவர்கள் தனிமையைக் கண்டு பயந்து நடுங்குகிறார்கள். நல்லதொரு குறிக்கோளில் உள்ளம் நிலைக்காத காரணத்தால், அதைப் பற்றிய சிந்தனையில் லயிப்புக் கொள்கிற பக்குவம் இல்லாத காரணத்தால்—

---

* இந்த நூல்களில் முந்திய மூன்றும் 'இஹ்யா'வை சேர்ந்தவை. 'உணவருந்தும் முறை' எனும் நூல் ஒன்றைத் தவிர்த்து மற்ற இரண்டு நூல்களும் ஏற்கெனவே வெளிவந்துவிட்டன. பிந்திய நூல்கள் இரண்டும் 'மின்ஹாஜுல் ஆபிதீன்' என்ற அரபி நூலை அடிப்படையாகக் கொண்டவை. முன்னது பல வருடங்களுக்கு முன்னர் வெளிவந்துவிட்டது; பின்னது விரைவில் வெளிவரவிருக்கிறது. 'மின்ஹாஜுல் ஆபிதீன்' என்பது 'இஹ்யா'வுக்குப் பின்னால் இமாம் கஸ்ஸாலி எழுதிய இறுதி நூல்.

'தனிமையில் பாதுகாப்புக் கிடையாது' என்ற உள்ளுணர்வு இவர்களை வாட்டுகிறது. மக்களோடு கலந்து வாழ்வதில் பழக்கப்பட்டுப் போனதால், தனிமையில் இருக்கவேண்டிய அவசியம் ஏற்படும்போது பிறருடைய உறவை நினைத்து ஏங்கித் தவிக்கிறார்கள்.

மொத்தத்தில், இவர்களுக்குத் தனிமையை விடக் கொடிய தண்டனை வேறு எதுவுமில்லை.

இவர்களுக்குப் பல்வேறு துறைகளில் திறமை இருக்கலாம்; எடுத்த காரியத்தை மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கும் வலிமை இருக்கலாம்; இவர்களால் நன்மை அடைந்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் இருக்கலாம்; நிலைநாட்டிய சாதனைகளின் பட்டியல் மிகவும் நீண்டதாக இருக்கலாம். ஆனால்—

இவர்களின் திறமையையும் வலிமையையும் நீங்கள் மக்களுக்கு மத்தியில்தான் பார்க்க முடியும். சமுதாய மனம் படைத்த இவர்கள் சமுதாயத்திற்காகவே சமுதாயத்தில் வாழ்கிறார்கள்.

'தனிமை' எனும் சொல்லைக் கேட்டதும் வெறுப்படைந்து முகத்தைத் திருப்பிக் கொள்கிறவர்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்தான். யாரும் பக்கத்தில் இல்லாத நேரத்தில், உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைச் சுவைக்கத் தெரியாமல்—அல்லது சுவைக்க விரும்பாமல், தனிமையில் இவர்கள் அனுபவிக்கும் சித்திரவதை இந்த வெறுப்புக்கு ஒரு காரணம்; மக்களிடையே கிடைக்கிற மகிழ்ச்சியும் விளையாட்டும் தனிமையில் கிடைப்பதில்லை என்பது மறு காரணம்; மற்றவர்களிடம் பழகும்போது தோன்றுகிற அனுபவ அறிவு தனிமையில் தோன்ற முடியாது என்பது வேறொரு காரணம்; உள்ளத்தில் இருக்கிற வெறுமை பூத வடிவெடுத்து நையாண்டி செய்வதைப் பார்த்தே தீரவேண்டும் என்ற அவல



நிலைமையிலிருந்து சமுதாயத் தொடர்பு பாதுகாப்பு அளிக்கிறது என்பது மற்றொரு காரணம்.

சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டிய இல்லறப் பிரச்சினை குறுக்கிடும் நேரத்தில்கூட இவர்கள் தனிமையை நாடுவதில்லை: அந்த வேலையைப் பிறரிடம் ஒப்படைத்துவிட்டு, சொந்தச் சிந்தனைக்கு முழு ஓய்வு கொடுத்துவிடுவார்கள்.

"மக்களிடமிருந்து அன்பை எதிர்பார்ப்பது சிந்தனையின் வறுமையைக் குறிக்கும்!" என்று ஓர் அறிஞர் குறிப்பிட்டது இப்போது என் நினைவுக்கு வருகிறது.

இப்படிச் சமுதாயத்தின் அரவணைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிலர்—அல்லது பலர் 'தனிமை' எனும் சொல்லைக் கேட்டதும் வெறுப்படைகிறார்கள் என்றால்—

நாம் வியப்படைவதற்கு அதில் என்ன இருக்கிறது?

நான் கூறுவதைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருக்கும் நீங்கள் "சமுதாயத் தொடர்பு கொண்ட அனைவரும் இப்படிப்பட்டவர்கள் தான்" என்று, அல்லது—

"மக்களோடு கலந்துவாழ்கிற எந்த மனிதனுக்கும் தனிமையின் பயனை அடையும் தகுதி கிடையாது" என்று அல்லது—

"தனிமையில் வாழ்கிற எவருக்கும் சமுதாயம் நன்மையைக் கொடுக்காது. தனிமையின் இன்பத்தைச் சுவைத்துக் கொண்டிருக்கிற அறிஞர்களில்—பக்தர்களில் ஒருவரைக்கூட மக்களிடையில் காணமுடியாது!" என்று தீர்க்கமானதொரு முடிவுக்கு வந்துவிட்டீர்கள் என்றால், அதற்கு அர்த்தம்:

உண்மையையும் பொய்யையும் முறைப்படி பிரித்துக் காட்டி விளக்கம் தர வேண்டிய பதவியில் உட்கார்ந்திருக்கிற உங்கள் சிந்தனை கொஞ்சம்கூட

இரக்கம் காட்டாமல் உங்களுக்கே துரோகம் செய்துவிட்டது!

### சமுதாயத்தைத் தாழ்த்தி மதிக்காதீர்கள்

உங்கள் தீர்மானம் வரலாற்றிலிருந்து நாம் தெரிந்து கொண்ட செய்திகளுக்கு முற்றிலும் எதிரானது. பகலில் மக்களிடையே நெருக்கமாகப் பழக்கம் வைத்துக் கொண்டு இரவில் தம்மையே மறந்து தனிமையில் உட்கார்ந்து பேரின்பம் அடைந்த ஞானிகள் பலரை வரலாறு நமக்கு அறிமுகப்படுத்துகிறது. சமுதாயத்திற்கென்று ஒரு நேரத்தையும் தனிமைக்கென்று வேறொரு நேரத்தையும் ஒதுக்கிவைத்துக் கொண்டு இரட்டைப் பயனுக்கு உரிமை பெற்ற எத்தனையோ பேரை நான் பார்த்திருக்கிறேன். இனம் பிரிக்க முடியாதவாறு மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த பக்தர்களின் எண்ணிக்கை விரல் விட்டுக் கணக்கிட முடியாதது.

எனவே பலவீனப்பட்ட மனத்துடன் சமுதாயத்தில் வாழ்கிறவர்களைப் பார்த்துவிட்டுச் சமுதாய மக்கள் அனைவரையும் தாழ்த்தி மதிப்பிடுவது உங்களுக்கு அழகல்ல. மன வலிமையும் சிந்தனைத் திறனும் பெற்ற எந்த மனிதனும், அவன் எங்கே எப்படி வாழ்ந்து கொண டிருந்தாலும், தனிமையைக் கண்டு பயப்படப் போவதில்லை.

இதுவரை, தனிமையைத் தேர்ந்தெடுக்கும் மனிதனுக்குக் கிடைக்கவிருக்கிற நன்மைகளைப் பற்றிக் கூறினேன். இந்த நன்மைகள் மிகப்பெரும் சிறப்பு வாய்ந்தவை. அதே நேரத்தில், நிலையான இறையன்பும் நிரந்தரமான இறைச் சிந்தனையும் பெற்ற சிலருக்குத்தான் இந்த நன்மைகள் கிடைக்க முடியும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: இவர்கள் மற்றப் பிணைப்புகள்



அனைத்துக்கும் மேலாகத் தனிமையோடு தம்மை அழுத்தத்துடன் ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனிதன் இறைவன்மீது பேரன்பு கொண்டவனாக, அவனைப் பற்றி ஓரளவேனும் தெரிந்துகொண்டவனாக மரணமடைய வேண்டும் என்பதுதான் இறைவணக்கத்தின் இறுதிப்பயன்; நடைமுறைச் செயல்கள் அனைத்துக்கும் இதுவே கடைசி நன்மை. நிரந்தரமான தெய்வச் சிந்தனை இல்லாமல் இறைவன்மீது பேரன்பு தோன்ற முடியாது; இறைவனைப் பற்றிய அறிவு கிடைக்கமுடியாது. இந்தப் பயன்கள் இரண்டும் உருவாவதற்குத் தெளிவும் அமைதியும் கொண்ட உள்ளம் மிகத் தேவையான ஒன்று.

மக்களோடு கலந்து வாழ்கிற பெரும்பாலோருக்கு அமைதியும் ஓய்வும் நிறைந்த உள்ளம் இருக்க முடியாது.

தனிமையில் தோன்றுகிற முதல் நன்மையைப் பற்றி இவ்வளவு நேரம் உரையாடிக் கொண்டிருந்த நாம் சிறிதுநேரம் ஓய்வெடுத்துக் கொண்ட பின்னர் தனிமையில் கிடைக்கிற—

### இரண்டாம் நன்மை

—யைப் பற்றி விரிவாகப் பேசப் போகிறோம். 'நன்மை' என்பதற்குப் பதிலாக 'நன்மைகள்' என்று குறிப்பிட்டால் மிகப் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் இந்தத் தலைப்பின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட நன்மைகள் விளக்கப்படவிருக்கின்றன.

சமுதாயத்தில் கலந்து வாழும் மனிதன் பல்வேறு நன்மைகளை அடைகிறான் என்பது எல்லாருக்கும் தெரிந்த ஒன்று. இதை நானும் மறுக்கவில்லை; நீங்களும் மறுக்க முடியாது. அதே நேரத்தில், சமுதாயத்தின் நடுவிலிருந்து இடைவெளியின்றித் தோன்றிக் கொண்டிருக்கும் தீய விளைவுகள் எண்ணற்றவை என்பதை மறந்துவிடும் துணிவு உங்களில் யாருக்கும் வந்துவிடக் கூடாது.

மக்களிடம் பழகும்போது உருவெடுக்கிற தீமைகள் அனைத்தைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறுவதற்கு, நாம் ஒதுக்கி வைத்திருக்கும் நேரம் அனுமதி கொடுக்காது. அவ்வளவு அதிகமான தீமைகள் சமுதாயத்திற்கு மத்தியில் உருவெடுக்கின்றன! என்றாலும் அந்தத் தீமைகளில் சிலவற்றைப் பற்றி உரையாடுவது இப்போதைக்குப் பெரிதும் அவசியமாகும்.

மேற்கொண்டு பேசுவதற்கு முன்னர் நற்செய்தி ஒன்றை உங்களுக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்:

மக்களின் தொடர்பினால் எத்தனை தீமைகள் தோன்றினாலும், அவை அனைத்திலிருந்தும் உங்களுக்குத் தனிமை நிச்சயமாகப் பாதுகாப்பு அளிக்கிறது. தனிமையைப் புறக்கணித்தவர்களுக்கு இந்தப் பாதுகாப்பு அறவே கிடைக்க முடியாது!

மக்களிடையில் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கிற தீமைகளில் ஒன்று புறம் பேசுவது; புறம் பேசுவதைக் கேட்பது. பிறர் செய்யும் தவறுகளைத் துப்பறிந்து கண்டு பிடித்துக் கதை சொல்வதும், செவிகளைக் கூர்மைப்படுத்தி வைத்துக் கொண்டு அதனைக் கவனத்துடன் கேட்பதும் பொதுவாகச் சமுதாயத்தில் எல்லாரிடமும் காணப்படுகிற பழக்கங்கள். பிறரது துன்பங்களை— சோதனைகளை எடுத்து வைத்துப் புறம் பேசுவதிலும் அதைக் கேட்பதிலும் சமுதாய மக்கள் இன்பமும் மகிழ்ச்சியும் அடைகிறார்கள். இந்தச் சில்லரை இன்பத்திற்காகத்தான் அவர்கள் தனிமையைக் கண்டு பயந்தோடுகிறார்கள் என்று நினைப்பதில் அப்படியொன்றும் பெரிய தவறு கிடையாது.

எனவே மக்களோடு கலந்து வாழ்கிற எவரும் இந்தக் கொடிய தீமையிலிருந்து ஒருபோதும் தப்ப முடியாது—



'சித்தீக்' என்ற மிகச் சிலரைத் தவிர்த்து! *எஃகணத்தில் உறுதியும் ஒழுக்கத்தில் அக்கறையும் கொண்ட இவர்கள் எந்தச் சூழலிலும், எந்தக் காரணத்தாலும் இஸ்லாத்தின் எல்லைக் கோட்டைத் தாண்ட மாட்டார்கள்.

உங்களில் யாரேனும் ஒருவர்—

"மக்களிடம் பழகிக் கொண்டே என் ஒழுக்கத்தை முறைப்படி என்னால் பாதுகாத்துக் கொள்ளமுடியும். என்னைப் புறம் பேச வைக்கும் சக்தி எந்தச் சூழ்நிலைக்கும் கிடையாது. பிறர் புறம் பேசுவதைக் கேட்டு மகிழ்ச்சி அடையும் மனப்பான்மையும் எனக்கில்லை. இதில் எனக்கு ஆர்வத்தை உண்டாக்கும் வலிமை எந்த மனிதனுக்கும் இருக்கமுடியாது. கேட்கிறவர்கள் இருக்கிற காரணத்தால் தான் ஒருவன் புறம் பேசுகிறான்; புறம் பேசுகிறவன் உற்சாகத்துடன் விரிவுப்படுத்திக் கூறுகிற காரணத்தால்தான் மற்றவர்கள் அவன் பேச்சுக்குச் செவி சாய்க்கிறார்கள். என்னிடம் வந்து புறம் பேசும் துணிவு யாருக்கும் கிடையாது. ஏனெனில் பிறர் புறம் பேசுவதைக் கேட்பதில் எனக்கு இன்பம் கிடையாது; என் கவனத்தைக் கவரும் சக்தியும் அதற்கில்லை. அதனை நான் பெரிதும் வெறுப்பவன் என்று எல்லாருக்கும் தெரியும்.

"தவிர, புறம் பேசுவதையும் அதைக் கேட்பதையும் இஸ்லாம் கண்டித்து எல்லைக்கோடு போட்டு வைத்திருக் கிறது. இந்த எல்லைக் கோட்டைத் தாண்டாமல் மக்களுக்கு மத்தியிலேயே என்னால் வாழமுடியும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

---

*'சித்தீக்' எனும் வார்த்தை 'மிகவும் உண்மையானவர்' என்ற அர்த்தம் கொண்டிருந்தாலும் ஒழுக்கத்தின் மிக உயர்ந்த படித்தரங்களில் ஒன்றை அடைந்த ஒருவரைத்தான் இந்த அரபிச் சொல் குறிக்கும்.

"எனவே புறம் எனும் குற்றத்திலிருந்து என்னைப் பாது காத்துக் கொள்வதற்கு நானும் தனிமையைத்தான் தேட வேண்டுமா?" என்று கேட்டால்—

அவரைப் பார்த்து நான் சொல்கிறேன்:

உங்களைப்பற்றி நீங்கள் சொல்லும் செய்திகள் அனைத்தும் முழு உண்மை என்றால், அதில் உங்களுக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை என்றால், அதனை அனுபவத் தராசில் வைத்து முறைப்படி எடைபோட்டுத் தெளிவடைந்து விட்டீர்கள் என்றால்—கொஞ்சமும் தாமதம் செய்யாமல் உடனே இங்கிருந்து வெளியே சென்றுவிடுங்கள். ஏனெனில் நான் சொல்வதைக் கவனித்துக் கேட்காத, என் பேச்சைவிடத் தகுதியில் உயர்ந்த எந்த மனிதனும் இங்கே இருக்கக்கூடாது.

**பண்டிதனும் பச்சைக் கிளியும்**

மார்க்கத்தின் மர்மங்களைத் தெரிந்து கொள்கிற ஆசை உள்ளவர்களுக்குத்தான், தம் ஒழுக்கத்தின் தரத்தை உயர்த்திக் கொள்கிற துடிப்பு உள்ளவர்களுக்குத் தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேனேயல்லாமல்— உங்களைப் போன்ற 'சித்தீக்'குகளுக்கு அல்ல!

'சித்தீக்'குகளின் உள்ளத்திலிருந்து பெருக்கெடுத்து வெளிப்படும் அறிவு, நான் உங்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கும் அறிவைவிட ஆழமானது; அழுத்தமானது; தீர்க்கமானது.

இந்த நிலைமைக்கு நம்மில் யாரும் உயர் முடியாது என்பது என் கருத்தல்ல. இந்த நிலைமையை இன்னும் நாம் எட்டிப் பிடிக்கவில்லை என்பதே என் கருத்து. இன்னும் அடையாத ஒன்றை ஏற்கெனவே அடைந்துவிட்டதாக நினைத்துக் கொள்வது தவறு என்றுதான் சொல்கிறேனே தவிர, அதனை அடைவதற்கான முயற்சியில் யாரும் ஈடுபடக்கூடாது என்று கூறவில்லை.



உங்களில் ஒருவர் உண்மையிலேயே 'சித்தீக்'காக இருக்கிறார் என்று வைத்துக் கொண்டால், அவருக்கு மார்க்கத்தைப் பற்றிய செய்திகளை நான் எடுத்துக் கூறிப் போதனை செய்வது—

பண்டிதனுக்குப் பச்சைக் கிளி பாடம் சொல்லிக் கொடுக்கும் செயலைப் போன்றது!

எனவே நம்மைப் போன்றவர்கள் சமுதாயத்தில் கலந்து வாழும்போது அங்கே தோன்றுகிற தீமைகளிலிருந்து தற்காத்துக் கொள்வது நமக்கு அப்படியொன்றும் சுலபமான காரியமல்ல.

சிறிதுநேரம் சமுதாய வாழ்வை கற்பனை செய்து பாருங்கள்.

நீங்கள் நல்லெண்ணத்துடன் மக்கள்மீது முறையான அன்பு வைத்துச் சமுதாயத்தில் பழகுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். பெருமானாரின் நடைமுறையைப் பின்பற்றும் நோக்கத்துடன் நோயுற்ற ஒருவனைப் பார்க்கச் செல்கிறீர்கள். அல்லது, 'ஜமாஅத்' எனப்படுகிற அணி வகுப்புத்தொழுகையில் கலந்து கடமையை நிறைவேற்றும் எண்ணத்துடன் பள்ளிவாசலை நோக்கி நடந்து செல்கிறீர்கள்.

சற்றுத் தூரத்தில் பத்து—அல்லது பன்னிரண்டு பேர் கூடி நின்று ஆழ்ந்த கவனத்துடன் ஏதோ பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறீர்கள். நீங்கள் நோயாளியின் வீட்டுக்குப் போவதானாலும் பள்ளிவாசலுக்குச் செல்வ தானாலும், அவர்களைக் கடந்துதான் ஆகவேண்டும்.

கொஞ்சம் நெருங்கியதும், அவர்களில் ஒருவன் யாரைப் பற்றியோ உற்சாகத்துடன் புறம் பேசிக் கொண்டிருக்கிறான் என்பதையும் மற்ற அனைவரும் அதனை இன்பம் கலந்த கவனத்துடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும்

சந்தேகத்திற்கு இடமில்லாதபடி நீங்கள் தெரிந்து கொள்கிறீர்கள்.

**கவரும் சக்திக்குக் காரணம்**

உலகத்தையே மறந்துவிட்டுத் தம் காரியத்திலேயே கண்ணாயிருக்கும் இந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் நீங்கள் ஆச்சரியப்படலாம்—'பிறரது தவறுகளைப் பற்றிப் புறம் பேசப்படும்போது மனித மனத்தை முழுமையாகக் கவர்ந்து இழுக்கும் சக்தி அங்கு எப்படித் தோன்றுகிறது?' என்று!

ஆனால், நான் கொஞ்சம்கூட ஆச்சரியப்படவில்லை. ஏனெனில், ''மனிதனின் உணர்ச்சிகளில் மிகவும் வலிமையானது காமம். அடுத்து, கோபத்தைக் குறிப்பிட லாம். பின்னர், பொறாமைக்கு இடம் கொடுக்கலாம். அப்புறம், வெறுப்பைச் சுட்டிக் காட்டலாம்..." என்று பட்டியல் போட்ட அறிஞர் ஒருவர்—

"சில வேளைகளில் புறம் பேசுகிற துடிப்பு முந்திய அனைத்தையும்விட வலிமைபெற்று விடுவதுண்டு" என்று முடிக்கிறார்.

கோபம், பொறாமை, வெறுப்பு முதலிய பல்வேறு உணர்ச்சிகளைக் கூட்டுக் காரணமாக வைத்துத்தான் ஒரு மனிதன் புறம் பேசுகிறான். அமைதி, சகிப்புத் தன்மை, அன்பு முதலிய பண்புகளைப்பெற்ற எந்த மனிதனும் புறம் பேசும் வேலைக்காக ஒரு வினாடி நேரத்தைக்கூட வீணாக்க மாட்டான்.

எனவே, பல்வேறு உணர்ச்சிகளின் கூட்டுச் சக்தியின் அடிப்படையில் ஒருவன் புறம்பேசும்போது, மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்து ஈர்க்கும் வலிமை அதற்குக் கிடைப்பதில் வியப்பில்லை.

இப்போது நீங்கள் அந்தக் கூட்டத்திற்குப் பக்கத்தில் வந்து விட்டீர்கள். அவர்களைத் திரும்பியும் பார்க்காமல் விரைவாக நடைபோடுகிறீர்கள்.



கூட்டத்தின் நாயகன்—அதாவது புறம் பேசுகிறவன் உங்களைப் பார்த்து "செய்தி தெரியுமா? நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டுமே!" என்று கூறுவான்— சிறிது நேரத்திற்கு முன்னர் பெருமானாருக்குக் கிடைத்த இறைச் செய்தியைக் கேட்ட நபித் தோழர் ஒருவர் தமக்கு நெருக்கமான வேறொரு நபித் தோழருக்கு எடுத்துக் கூற முற்படுவதுபோல்!

அவனுக்கு அப்போது உங்களால் பதில் சொல்ல முடியாது. காரணம்: அதற்குச் சிறிதும் அவன் அவகாசம் கொடுக்கமாட்டான். மற்றவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்த அதே செய்தியை உடனே உங்களுக்கும் சொல்ல ஆரம்பித்துவிடுவான். காது கொடுத்துக் கேட்பவர் களின் எண்ணிக்கை உயரும் அளவையொட்டி அவனது இளக்காரப்பேச்சும் விரிவடையும்.

இந்தக் கட்டத்தில் உங்களால் என்ன செய்ய முடியும் என்று கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். நோயாளியைக் காண வேண்டிய வேலை—அல்லது 'ஜமாஅத்' தொழுகையில் கலக்க வேண்டிய வேலை தடைப்பட்டுப் போனது ஒரு புறம் இருக்கட்டும். மறுபுறம், அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டு மௌனம் சாதித்தால் புறம் பேசிய குற்றத்திற்கு நீங்களும் பலியாக வேண்டிய அவசியம் ஏற்படும். ஏனெனில், ''கேட்கிறவன் இருக்கிற காரணத்தால்தான் ஒருவன் புறம் பேசுகிறான்" என்று சற்றுமுன்னர் நீங்கள்தானே சொன்னீர்கள்?

''குற்றம் செய்கிறவனைவிட அவனைத் தூண்டி விடுகிறவன் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்" என்பது மார்க்கத்தின் தீர்ப்பு.

இப்படிப் பார்க்கும்போது, நீங்கள் புறம்பேசுவதைவிடப் பெரிய குற்றத்தைச் செய்தவராகிறீர்கள்.

எனவே அவன் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்கும்போது, அவன் செய்யும் பாவத்தைவிட நீங்கள் செய்யும் பாவம் எந்த வகையிலும் குறைந்ததல்ல என்ற நிலைமை தோன்றுகிறது.

அவன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் நீங்கள் அறிவுரை கூறுவதாக வைத்துக் கொள்வோம்.

"நீ செய்யும் வேலை, சமுதாயத்தில் கெட்ட எண்ணத்தை பரப்புகிறது. 'புறம் பேசக் கூடாது' என்ற சட்டம் உனக்குத் தெரியாத ஒன்றல்ல. இந்தப் பாவத்தி லிருந்து உடனே விலகிச் சென்றுவிடு..." என்று நீங்கள் கூறினால்—

உங்கள் வார்த்தைக்கு அவன் மட்டுமல்ல, அவனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறவர்களும் மதிப்புக் கொடுக்க மாட்டார்கள். ஏனெனில், அவனும் அவர்களும் பிறரைப் பற்றிய சிந்தனையில் இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் அறிவுரைக்காகத் தம் மகிழ்ச்சியை அவர்கள் ஒருபோதும் தியாகம் செய்ய மாட்டார்கள். உங்கள் அறிவுரையைக் கேட்டுத் திருந்த மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, உங்களைத் தம் பகைவனாகவும் நினைக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

**புறம் பேசுகிறவனுக்கு ஊக்கம் கொடுத்த குற்றம்**

புறம் பேசுகிற அந்த மனிதனைப் புறக்கணித்துவிட்டு உங்கள் வேலையைப் பார்க்கச் சென்றுவிடுகிறீர்கள் என்று வைத்துக் கொண்டால்—

இதுவரை எந்த மனிதனைப்பற்றிப் புறம் பேசிக் கொண்டிருந்தானோ அவனை அடியோடு மறந்துவிட்டு, புதுப்பிக்கப்பட்ட தெம்புடன் சினம் கொண்ட மனத்துடன் 'உங்களைப்' பற்றிப் புறம்பேசத் துவங்கிவிடுவான்!



இங்கே, புறம் பேசிக் கொண்டிருந்த ஒருவனுக்குத் தெம்பு கொடுத்து ஊக்கமூட்டிய குற்றம் உங்கள் தலைமீது விழுகிறது.

இப்படிப்பட்ட தீமைகளிலிருந்து உங்களைத் தனிமை பாதுகாக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு விளக்கம் ஒரு தேவையா என்ன? யாருமில்லாத இடத்தில் யாரைப் ற்றி யாரிடம் யார் எப்படிப் புறம் பேசமுடியும்? ஒருவன் தனக்குத்தானே எதைப் பேசிக் கொண்டாலும், அதற்குப் 'புறம் பேசுதல்' என்று பெயரிட முடியாது!

இப்போது நம் உரையாடலை வேறொரு திசைக்குத் திருப்ப வேண்டும்.

இந்தப் பரந்துவிரிந்த உலகில் எங்கு வேண்டு மானாலும் சென்று பாருங்கள். முழுமையான ஒழுக்கம் கொண்ட சமுதாயத்தையும் முற்றிலும் ஒழுங்கீனமான சமுதாயத்தையும் உங்களால் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் அப்படிப்பட்ட ஒரு சமுதாயம் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை, "இருக்கவும் முடியாது" என்பது, மனித வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து உண்மையைத் தெரிந்து கொண்ட அறிஞர்களின் கருத்து.

எனவே ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தில் சிலர்— அல்லது பலர் ஒழுங்கீனமான காரியங்களில் ஈடுபடலாம்; ஒழுக்கம் கெட்ட சமுதாயத்தில் சிலர் — அல்லது பலர் ஒழுக்கத்திற்கு இலக்கணம் வகுக்கலாம். ஒரு சமுதாயத்தின் தரத்தை, அதில் கலந்து வாழ்கிற மக்களின் தரத்தை வைத்துத்தான் தீர்மானிக்க முடியும். அவர்களில் பெரும்பாலோர் நல்லவர்களாக இருந்தால் அதனை 'நல்ல சமுதாயம்' என்று சுட்டிக் காட்டலாம்; அவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் கெட்டவர்களாக இருந்தால் அதனைக் 'கெட்ட சமுதாயம்' என்று குறிப்பிடலாம். அதாவது—

நல்ல சமுதாயத்தில் சிறுபான்மையோர் கெட்டவர்களாக இருப்பார்கள்; கெட்ட சமுதாயத்தில் பாதிக்குக் குறைந்தவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள்.

இது மிகத் தெளிவான உண்மை. இந்த உண்மையிலிருந்து உங்கள் சமுதாயத்திற்கு யாரும் விதிவிலக்குக் கொடுக்கவில்லை—யாராலும் விதிவிலக்குக் கொடுக்க முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இப்போது, உங்கள் சமுதாய மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று சற்று நேரம் எண்ணிப் பார்த்துவிட்டு—

"நல்ல செயல்களுக்கு ஊக்கம் கொடுங்கள்; கெட்ட காரியங்களுக்கு எதிர்ப்புக் காட்டுங்கள்" என்ற நபிக் கருத்தை நினைத்துப் பாருங்கள்.

இந்த நபிக் கருத்துக்கு, "மக்களில் ஒரு சாரார் பிறருடைய தூண்டுதல் இல்லாமல் தாமாகவே நற்காரியங்கள் செய்யமாட்டார்கள்; சமுதாயச் சூழலில் அவர்கள் தம்மையே மறந்து வாழ்கிறார்கள். பிறர் ஒப்புதல் கொடுத்தால் அவர்கள் தீயகாரியங்களில் ஈடுபடத் தயங்க மாட்டார்கள்; சமுதாயத்தின் தீயசக்திகளால் உந்தித் தள்ளப்பட்டு 'எதிர்க்க யாருமில்லை' என்ற எண்ணத்தில் செயல்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு ஊக்கம்கொடுத்து நற்காரியங்களைச் சமுதாயத்தில் பரப்புங்கள்; தீயகாரியங்களை எதிர்த்துத் தடுத்து நிறுத்தி மக்களின் மனத்தைத் தூய்மைப்படுத்துங்கள்" என்று நீங்கள் விளக்கம் கொடுத்தால், உங்கள் சிந்தனைத் திறனை நான் பாராட்டுகிறேன்.

பெருமானாரைப் பின்பற்றி வாழும் நீங்கள் சமுதாய வாழ்வில் உங்கள் கடமை என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டீர்கள்; இந்தக் கடமையை மக்களுக்கு மத்தியில்தான் நிறைவேற்ற முடியுமேயல்லாமல், தனிமையில் அல்ல.



இப்படிப் பார்க்கும்போது, நன்மைகளைப் பரப்புவதற்கும் தீமைகளை அழிப்பதற்கும் தேவையான சூழல் சமுதாயத்தில் தான் உண்டாக முடியும் என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றலாம். தனிமையில் ஆயிரம் நன்மைகள் கிடைத்தாலும், இந்தச் சூழலை அங்கே எதிர்பார்க்க முடியாது என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் இந்தக் குறிக்கோளை மனத்தில் வைத்துக் கொண்டு சமுதாயக் கடலில் குதிப்பதற்கு முன்னர் உங்கள் பலத்தையும் பலவீனத்தையும் நீங்கள் சுத்தமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த வழியில் சென்று தம் வாணாள் முழுவதையும் தியாகம் செய்து மக்களுக்கு மார்க்கத்தைக் கற்றுகொடுத்த பலர் வரலாற்றில் காணப்படுகிறார்கள் என்பது முற்றிலும் உண்மை. என்றாலும், அவர்கள் பெற்றிருந்த வலிமையும் திறமையும் அறிவும் உங்களுக்கு இருக்கின்றனவா என்று உங்களை நீங்கள் உற்றுப் பார்த்துக் கொள்ளுங்கள். சமுதாயத்தில் நீங்கள் எப்படிப் பழகுகிறீர்களோ அப்படித்தான் அவர்களும் பழகினார்களா என்று எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

அவர்கள் பெற்றிருந்த தகுதிகள் அனைத்தையும் நீங்கள் குறைவின்றி முழுமையாக அடைந்திருக்கவில்லை என்றால்—

அவர்கள் சமுதாயத்திற்குச் செய்த மார்க்கப் பணியை உங்களால் ஒருபோதும் செய்ய முடியாது!

நீங்கள் மக்களிடம் எப்படிப் பழகுகிறீர்கள் என்பதைப் பற்றிச் சற்றுநேரம் சிந்தனை செய்து பாருங்கள். வீட்டில் வேலை எதுவுமில்லை என்ற காரணத்தால்—அல்லது வெளியில் ஏதோ ஒரு வேலை இருக்கிறது என்ற காரணத்தால், வேளைக்கு வேளை தன் விருப்பப்படி நன்மைகளையும் தீமைகளையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிற சமுதாய எல்லைக்குள் காலடி எடுத்து வைக்கிறீர்கள்.

**எதிர்படும் மனிதர்கள்**

நீங்கள் செல்லும் வழியில் நண்பர்களையும் உறவினர்களையும் சந்திக்கிறீர்கள்; மலர்ந்த உள்ளத்துடன் சில வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்கிறீர்கள். அடுத்து, நல்லவர்களையும் கெட்டவர்களையும் பார்க்கிறீர்கள்; மனத்தில் மகிழ்ச்சியும் வெறுப்பும் கைகோத்துக் கொண்டு தோன்றுகின்றன. பின்னர், பழக்கப்பட்டவர்களையும் அறிமுகமில்லாதவர்களையும் காண்கிறீர்கள்; 'இவர்களைப் பார்த்துப் பல மாதங்கள் ஆகிவிட்டனவே!' என்ற நினைப்பும் 'இவர்களை நான் பார்த்ததில்லையே!' என்ற எண்ணமும் உங்கள் சிந்தனைக்கு வேலை கொடுக்கின்றன. அப்புறம், உங்களிடம் கடன் வாங்கியவர்களையும் உங்களுக்குக் கடன் கொடுத்தவர்களையும் எதிர் நோக்குகிறீர்கள்; 'இவர்களில் ஒருவன் அடுத்த நாள் திருப்பித் தருவதாகக் கூறிப் பணம் வாங்கிச் சென்றான். ஆறுமாதம் சென்றபிறகும் என்னைப் பார்க்க வரவில்லை. இவன் என்னைப்பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் ?' என்ற கோபமும் 'அவனுக்கு எதிரில் வந்தது தவறாகிவிட்டது. எந்தக் காரணத்தைக் காட்டி மீண்டும் தவணை கேட்பது ?' என்ற குழப்பம் கலந்த அச்சமும் உங்கள் எண்ணத்தில் துளை போடுகின்றன.

இதன் விளைவு : ஒரு வேலையை முடிப்பதற்காகப் புறப்பட்ட உங்கள் மனம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட உணர்ச்சிகளால் தாக்கப்பட்டுத் தன் வலிமையை இழக்கிறது. பலவீனமடைந்த மனம் தன் முத்திரையை உங்கள் சொல்லிலும் செயலிலும் மட்டுமன்றி, முகத்திலும் அழுத்தமாகப் பதிக்கிறது. இதனால், நீங்கள் மேற்கொண்ட காரியத்தில் வெற்றியடையும் வாய்ப்பை அடியோடு இழக்கிறீர்கள்.



இந்த நிலைமையில் இருக்கிற உங்களால் சமுதாயத்தில் எப்படி நல்லதைப் பரப்ப முடியும் ? எப்படிக் கெட்டதைத் தடுக்க முடியும் ? பலதரப்பட்ட உணர்ச்சிகளின் தாக்குதலினால் நிலைகுலைந்து கிடக்கிற உங்கள் மனம் இந்தப் புனிதக் காரியங்களுக்கு எப்படி ஒத்துழைப்புக் கொடுக்க முடியும் ? துணிவும் தெளிவும் நிறைந்த உள்ளத்துடன் வீட்டைவிட்டு வெளியில் புறப்பட்ட நீங்கள் மனத்தில் பட்டதை உறுதியுடன் எடுத்துச் சொல்லக்கூட இயலாதபடி தவித்துக் கொண்டிருக்கிற இந்தச் சூழலில் பெருமானாரின் கட்டளையை உங்களால் எப்படி நிறைவேற்ற முடியும் ?

நல்லதை எடுத்துக்கூறிக் கெட்டதைத் தடுத்து நிறுத்திச் சமுதாயத்தின் தரத்தை உயர்த்தும் சக்தி உங்களுக்கு இல்லை என்றால்—

மற்றவர்கள் உங்களுக்கு எதிரில் செய்யும் பாவங்களைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைத் தவிர்த்து வேறு எதுவும் உங்களால் செய்ய முடியாது.

குற்றங்களைத் தடுப்பதற்குப் பதிலாக அவற்றிற்குத் தூபம் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டிய நிலைமை சமுதாயத்தில்தான் தோன்ற முடியுமேயன்றி, தனிமையில் அல்ல!

குற்றம் செய்வதை மட்டுமல்ல, அதனைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பதையும் இஸ்லாம் கண்டிக்கிறது. முன்னதைப் 'பாவம்' என்று குறிப்பிட்டால் பின்னதையும் அதே இனத்தில் சேர்த்துத்தான் எடைபோட வேண்டும்.

இந்தப் பாவத்திலிருந்து தனிமை உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறது.

**புலியும் புள்ளிமானும்**

இப்போது, இந்தப் பாவத்தைத் தவிர்ப்பதற்கு நீங்கள் வேறொரு வழியைக் கையாள்கிறீர்கள்.

வீட்டிலிருந்து வெளியில் புறப்பட்ட நீங்கள் யாரையும் பார்க்காமல், எவரிடமும் பேசாமல், எடுத்த காரியத்தை முடித்துவிட்டுத்தான் அடுத்த வேலையைப் பற்றி நினைக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் வீதியில் விரைந்து நடக்கிறீர்கள்.

இது வெளிப் பார்வைக்கு மிகத் திறமையான செயலைப் போல் தோற்றமளிக்கலாம். ஆனால் செயலையும் விளைவையும் கூர்ந்து கவனிக்கிறவர்களுக்கு இதிலுள்ள தவறு மிகத் தெளிவானது.

நீங்கள் மற்றவர்களைப் பார்க்காமலிருப்பது, அவர்களின் பார்வையிலிருந்து உங்களை மறைத்துவிடுகிற சித்து விளையாட்டைத் தோற்றுவிக்காது. துள்ளிவிளையாடும் புள்ளிமான் திரும்பிப் பார்க்கவில்லை என்ற காரணத்தால், பசி கொண்ட எந்தப் புலியும் அதைவிட்டு வைத்ததில்லை.

இப்போது நீங்கள் மேற்கொண்டிருக்கிற பாதையில் நல்லவர்கள், அறிமுகமில்லாதவர்கள், உங்களிடம் கடன்பட்டவர்கள் ஆகியோரின் இடையூறுகளிலிருந்து நிச்சயமாகத் தப்பித்துக் கொள்ளலாம். நல்லவர்கள் உங்கள் கவனத்தைக் கெட்டவழியில் திருப்புகிற பாவத்தைச் செய்யமாட்டார்கள். தமக்கும் பிறருக்கும் நல்லது செய்கிற அழுத்தமான மனப்பக்குவம் படைத்த அவர்கள், தம் சிந்தனையிலேயே மூழ்கியபடி நடமாடிக் கொண்டிருப்பதால், உங்களை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். அப்படியே பார்த்துவிட்டாலும், உங்கள் நடையில் இருக்கிற அவசரத்தைக் கவனித்துவிட்டு, உங்கள் போக்கிலேயே விட்டுவிடுவார்கள். எனவே இவர்களால் உங்களுக்கு எந்தத் தீங்கும் கிடையாது.

அறிமுகமில்லாதவர்கள் உங்களைக் கவனிக்கும்போது தோன்றுகிற விளைவும் உங்களுக்குச் சாதகமானதுதான். அவர்களை இதற்குமுன் நீங்கள் பார்த்ததில்லை. யார் அவர்கள், எந்த ஊரைச் சேர்ந்தவர்கள், எப்படிப்பட்ட சுபாவம் கொண்டவர்கள் என்ற எந்த விவரமும் உங்களுக்குத் தெரியாது. உங்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் சமுதாயத்தில் இருப்பதும் இல்லாமலிருப்பதும் ஒன்றுதான். எனவே இவர்களும் உங்கள் குறிக்கோளுக்கு இடையூறு செய்ய மாட்டார்கள்.



அப்புறம், உங்களிடம் கடன் வாங்கியவர்களின் பார்வை உங்கள்மீது விழுகிறது. பணத்தைவிடப் பழக்கத்தை உயர்த்தி மதிக்கிற சிலரில் நீங்களும் ஒருவர் என்றால்—

கடன்பட்டவர்களின் நிலைமையைச் சிறிதும் சிந்திக்காமல், 'கொடுத்த பணத்தை எப்படியும் வாங்கியே தீரவேண்டும். இதனால் அவர்களின் மனம் எப்படிக் கலங்கினாலும் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை' என்று நினைக்கிற வெறித்தனம் உங்களுக்குக் கிடையாது என்றால்—

'அவர்கள் என்னிடம் கடன்பட்டிருக்கிறார்கள்; நான் மற்றவர்களிடம் கடன்பட்டிருக்கிறேன்' என்று தம்மைத் தாமே உற்றுப் பார்க்கிற பழக்கம் உங்களுக்கு உண்டு என்றால்—

நீங்கள் அவர்களைப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும், அவர்கள் உங்களைக் கண்டாலும் காணாவிட்டாலும், நீங்கள் சிறிதும் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில், உங்கள் பண்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாத அவர்கள்தான் பயந்து கலங்கிப் போய்க் கற்சிலைகளாக உட்கார்ந் திருப்பார்கள்—உங்கள் பார்வை தம்மீது பட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில்!

எனவே இவர்களாலும் உங்கள் வேலைக்குத் தடங்கல் கிடையாது.

**பூரிப்பும் பெருமிதமும்**

நான் இப்படிக் கூறுவதைக் கேட்டதும், ஒழுக்கத்தை இழக்காமல் சமுதாயத்தில் கலந்து வாழும் தகுதி உங்களுக்கு வந்துவிட்டது என்று நினைத்துப் பூரிப்படைந்து விடாதீர்கள். தனிமையின் நன்மைகளைச் சமுதாயத்தின் நடுவிலேயே என்னால் அடைய முடியும் என்று எண்ணிப் பெருமிதம் கொள்ளாதீர்கள். ஏனெனில் அடுத்து நான் சொல்லப் போகும் செய்தி உங்கள் மனத்தில் நேர் எதிரான தீர்மானத்தை உண்டாக்கக் கூடியதாகும்.

எனவே மின்னலைப்போல் பளிச்சிட்டு மறைகிற இந்தப் பூரிப்பும் பெருமிதமும் உங்களுக்குச் சிறிதும் தேவையில் லாதவை. அவற்றை உங்கள் மனத்தைவிட்டுத் துரத்தி விடுங்கள். அவை முற்றிலும் போலியானவை. உள்ளதை உள்ளபடி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற் காகத்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேனேயன்றி—

உள்ளதையும் இல்லாததையும் ஒன்று சேர்த்துக் குலுக்கிக் குழப்பி வைத்துவிட்டு, உள்ளதை இல்லாததென்றும் இல்லாததை உள்ளதென்றும் தீர்மானித்துக் கொண்டு வாழ்வதற்கல்ல!

கனவில் கிடைத்த பணத்தைக் காலையில் கண்விழித்துச் செலவு செய்ய நினைக்கிறவர்களும், சூறாவளியினால் தோன்றிய புழுதிப் படலத்தின்மீது ஓடி விளையாட எண்ணுகிறவர்களும் என் மாணவர்களாகிய உங்களிடையே இருக்கக்கூடாது.

இதற்குப் பின்னரும் உங்கள் எண்ணத்தில் அந்தப் பூரிப்பும் பெருமிதமும் நிலைத்து நிற்கின்றனவா ?

அப்படியானால் நான் கூறும் செய்திகளைச் சிதறாத மனத்துடன் செவி சாய்த்துக் கேளுங்கள்.



யாரையும் பார்க்காமல், யாருடனும் பேசாமல் சமுதாயத்தில் வாழும் உங்களுக்கு — கெட்டவர்கள், அறிமுகமில்லாதவர்கள், கடன்பட்டவர்கள் ஆகியோரினால் தீங்கு கிடையாது என்று குறிப்பிட்டேனல்லவா ? இது முற்றிலும் உண்மை!

**நீங்களும் வண்டிச் சக்கரமும்**

ஆனால் இதை வைத்துக் கொண்டு, ஒழுக்கத்திற்குப் பாதகம் ஏற்படாதவாறு சமுதாயத்தில் கலந்து வாழும் தகுதி உங்களுக்கு வந்துவிட்டது என்று நினைப்பது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிற செயலாகும். சமுதாயத்தில் நீங்கள் கலந்ததாக நினைப்பது வெறும் கற்பனையே யல்லாமல், வேறொன்றுமில்லை. 'சமுதாயம்' என்பது மக்கள் கலந்துவாழும் ஒரு சூழலுக்குப் பெயராகும். சமுதாய மக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசிக் கொண்டும் ஒருவருக்கொருவர் பணத்தாலோ செயலாலோ சொல்லாலோ உதவி செய்து கொண்டும் இருப்பார்கள். அங்கே சந்திப்புக்கும் உரையாடலுக்கும் பஞ்சமில்லை. அவர்களில் ஒருவன் மற்றொருவன்மீது கடுஞ்சினம் கொண்டிருக்கலாம். அதே நேரத்தில் மற்றொருவனை உயிர்த் தோழனாகப் பெற்றிருப்பான். முன்னவனை அவன் பார்க்காமலிருக்கலாம்; அவனிடம் பேசாமலிருக்கலாம். ஆனால் பின்னவனை அவனால் பார்க்காமல் இருக்க முடியாது; அவனோடு உரையாடாமல் இருக்க இயலாது. யாரையும் பார்க்காமல் எவரிடமும் பேசாமல் இருக்கிற ஒரு மனிதனைக் கூடச் சமுதாயத்தில் பார்க்க முடியாது. எனவே—

வேகமாக உருட்டித் தள்ளப்பட்ட வண்டிச் சக்கரத்தைப் போல், யாரையும் பார்க்காமல் எவரிடமும் பேசாமல் வீதியில் விரைந்து நடக்கிற உங்களைச் 'சமுதாய உறுப்பினர்'— 'சமுதாயத்தில் கலந்தவர்' என்று அறவே குறிப்பிட முடியாது. சமுதாயத்தில் புகுந்து நடந்துசெல்கிறீர்கள் என்ற

காரணத்தால் உங்களைச் 'சமுதாய உறுப்பினர்' எனக் கூறலாம் என்றால்—

சமுதாயத்தின் நடுவில் உருட்டித் தள்ளப்பட்ட அந்த வண்டிச் சக்கரத்தையும் 'சமுதாயத்தில் ஓர் உறுப்பினர்' என்று குறிப்பிட வேண்டும். ஏனெனில் யாரையும் பார்க்காமல் எவரிடமும் பேசாமல் அதுவும் சமுதாய வீதியில் விரைந்துசென்று கொண்டுதான் இருக்கிறது. எனவே—

'ஒழுக்கத்திற்குப் பாதகம் ஏற்படாதவாறு சமுதாயத்தில் கலந்து வாழும் வழியைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்று நினைத்து நீங்கள் பூரிப்பு அடைவதிலும், 'தனிமையின் நன்மைகளைச் சமுதாயத்திலேயே என்னால் அடைய முடியும்' என்று எண்ணிப் பெருமிதம் கொள்வதிலும் அர்த்தமே கிடையாது.

நீங்கள் கையாளும் தந்திரத்தினால்—நல்லவர், அறிமுகமில்லாதவர், கடன்பட்டவர் ஆகியோரின் இடையூறுகளிலிருந்து உங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது என்று சொன்னேனல்லவா? இது முற்றிலும் உண்மை. ஆனால் நண்பர், உறவினர், கெட்டவர், பரிச்சயமுள்ளவர், உங்களுக்குக் கடன் கொடுத்தவர் ஆகியோரின் குறுக்கீடுகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கும் சக்தி இந்தத் தந்திரத்திற்குக் கிடையாது. தூரத்தில் தெரிகிற நீலமலைத் தொடரைப் பார்த்துக் கொண்டு நடந்தாலும், எதிர்திசையில் முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றாலும்—அவர்கள் தாமாகவே விரைந்து வந்து உங்கள் பாதைக்குக் குறுக்கே நின்றுவிடுவார்கள்.

இதைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசலாமா?

தெருவழியே விரைந்து செல்லும் நீங்கள் யாரையும் பார்க்கவில்லை என்றாலும், உங்கள் நடையில் காணப்படுகிற அவசரம் நண்பரையும் உறவினரையும் கவர்ந்து இழுக்கிறது.



தாம் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே நிறுத்தி வைத்துவிட்டுக் காரணம் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் உங்களை ஏறிட்டுப் பார்க்கிறார்கள். உடனே விரைந்துவந்து உங்கள் தோள்மீது கைவைக்கிறார்கள்; அல்லது உங்களுக்கு எதிரில்வந்து நின்று வழி மறிக்கிறார்கள்.

இந்தக் கட்டத்தில், நீங்கள் நடந்துசென்ற அவசரத்தையும் அவர்கள் உங்களை நோக்கி நடந்துவந்த அவசரத்தையும் எடைபோடுவது சாத்தியம் என்றால்—

உங்கள் அவசரத்தைவிட அவர்களின் அவசரம் குறைந்தது ஒரு மடங்காவது அதிகமாக இருக்கும்!

"என்ன செய்தி? யாருக்காவது உடல் நிலை சரியில்லையா? ஜரீனாவுக்கு ஒன்றுமில்லையே? குழந்தை எப்படி இருக்கிறாள்? வீட்டில் எல்லாரும் நல்லபடியாக இருக்கிறார்களா? எங்கேதான் இவ்வளவு அவசரமாகப் போகிறீர்கள்? இந்தக் கடுமையான வெய்யிலில் குடையைக்கூட எடுத்துக் கொள்ளாமல் புறப்பட்டிருக்கிறீர்களே, இது உங்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளுமா? என் குடையைத் தரட்டுமா?" என்று ஒரே மூச்சில் எட்டுக் கேள்விகள் கேட்கிறார், உங்களுக்கு எதிரில்வந்து நின்று வழிமறித்தவர்.

அவர் உங்கள் மாமனார். 'ஜரீனா' என்பது உங்கள் மனைவியின் பெயர்.

அவரது கேள்விகளில் எதற்கும் பதில் சொல்லாமல் வெறித்த பார்வையோடு நிற்பது சாத்தியமில்லை. ஏனெனில் மனைவியின் தந்தை என்ற உறவு உங்கள் வாயை நிச்சயமாகத் திறந்து வைத்துவிடும்.

"எல்லாரும் நன்றாக இருக்கிறார்கள். மிகவும் முக்கியமான ஒரு வேலை..." என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே நடுவில் புகுந்து—

"அப்படி என்ன முக்கியமான வேலை? தலைபோகிற காரியமா என்ன? கொஞ்சம் உட்கார்ந்துவிட்டுப் போனால் என்ன?.... ஆமாம், முந்தாநாள் குழந்தைக்குச் சொறி சிரங்கு இருந்ததே. இப்போது தேவலையா?...." என்று அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்பார் உங்கள் மாமனார். இப்போது ஒரு மூச்சில் பன்னிரண்டு கேள்விகள் இருக்கும்; அவர் ஜரீனா பிறந்த பிறகும் மூச்சுப் பயிற்சி செய்து கொண்டிருந்தவர்!

நீங்கள் சொல்கிற ஒவ்வொரு பதிலுக்கும் அவர் புதிது புதிதாகப் பத்துப் பத்துக் கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருப்பார். அவசரமாகப் போய்க் கொண்டிருக்கும் மனிதனை வழிமறித்துப் பேச்சுக் கொடுக்கிறவர்களுக்குப் பிறரது உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளும் சக்தி கிடையாது.

இதன் விளைவு: பொன்னான நேரத்தை அவசியமற்ற உரையாடலில் வீணடித்த குற்றம் உங்கள்மீது சுமத்தப் படுகிறது. எடுத்த காரியத்தை உரிய காலத்தில் முறைப்படி நிறைவேற்ற இயலாமற்போனதால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மை உங்களைப் பார்த்து இளக்காரத்துடன் சிரிக்கிறது; இது நீங்கள் அடுத்து மேற்கொள்ளும் காரியங்களில் உங்கள் தெம்பைக் குறைக்கும் வலிமை படைத்தது.

உங்கள் மாமனார் கேட்ட வினாக்களுக்குச் சுருக்கமாக விடை கொடுக்கும்போது நீங்கள் இந்த நிலைமைக்கு வருகிறீர்கள். இது நீங்கள் சிறிதும் விரும்பாத ஒன்று.

**அமைதியும் போராட்டமும்**

அவரது கேள்விகளுக்கு நீங்கள் அறவே பதில் கொடுக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். அவரையும் அவரது கேள்விகளையும் புறக்கணித்துவிட்டு அங்கிருந்து விரைந்து செல்கிறீர்கள். அப்போது தோன்றுகிற விளைவும் வரவேற்கத் தகாததுதான்.



இந்தக் கட்டத்தில், மாமனாரிடம் மருமகன் இப்படித் தான் நடந்து கொள்ளவேண்டும் என்று இஸ்லாம் வகுத்து வைத்திருக்கிற சட்டத்தை மீறிய பாவம் உங்களை வந்தடைகிறது. காட்டப்பட்ட அன்புக்கு நன்றி செலுத்தாத குற்றம் உங்கள்மீது வந்து விழுகிறது.

மருமகனால் அலட்சியம் செய்யப்பட்ட அவர் சினம் கொண்டு உங்கள் வீட்டிற்குச் செல்வார். ஜரீனாவைப் பார்த்துச் சத்தம் போடுவார். அவள் கணவன் தம்மை அவமானப்படுத்திவிட்ட செய்தியைப் பெருக்கல் குறிபோட்டு விளக்கிக் கூறுவார். தன் தந்தையார் புறக்கணிக்கப்பட்ட செய்தியை அறிந்த ஜரீனா சினம் கொண்டு சீறுவாள். குற்றவாளியைத் தண்டிப்பதற்கான திட்டத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவாள்.

வெளியில் புறப்பட்டுச்சென்ற நீங்கள் வேலையை முடித்துக்கொண்டு, அல்லது முடிக்கிறத் திறமையை இழந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிவரும்போது அங்கே —

அமைதி நிலவுமா, இல்லை—போராட்டம் நடக்குமா? நீங்களே சிந்தனை செய்து முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பிரச்சினையை வேறொரு கோணத்திலிருந்து சிறிது நேரம் ஆராய்வது நல்லது என்று நினைக்கிறேன்.

**மீண்டும் ஒரு போராட்டம்**

நீங்கள் வேகமாக நடந்து வருவதை உங்கள் மாமனார் பார்க்கிறார் அல்லவா? பார்த்ததும் எந்தக் காரணத் தினாலோ பெயர் சொல்லி உங்களைக் கூப்பிடுகிறார். நீங்கள் திரும்பிப் பார்க்க வில்லை என்றால் அவர் உங்களை விடப்போவதில்லை; எதிரில் வந்து நின்றுவிடுவார். எனவே விருப்பமில்லாமல் திரும்பிப் பார்க்கிறீர்கள். மார்க்கத்துக்கு முரணான ஏதோ ஒரு செயலில் அவர் ஈடுபட்டிருக்கிறார் என்பதைக் காண்கிறீர்கள்.

அப்போது, "நல்லதை எடுத்துக் கூறுங்கள்; கெட்டதைத் தடுத்து நிறுத்துங்கள்" என்று இஸ்லாம் வகுத்த சட்டத்தை உங்களால் பின்பற்ற முடியுமா? அறவே முடியாது. ஏனெனில் நீங்கள் அவர் செய்யும் பாவத்தைத் தடுக்க முற்பட்டால்—

"என் தகப்பனாருக்குப் புத்தி சொல்லும் அளவுக்கு நீங்கள் உயர்ந்துவிட்டீர்களா?" என்ற வசனத்தைத் துவக்கமாக வைத்துப் புதியதொரு போராட்டத்தை ஜரீனா ஆரம்பித்துவிடுகிற இக்கட்டான நிலையை விரைவில் நீங்கள் எதிர்நோக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாமனாரைத் திருத்துவதற்கு உங்கள் குடும்ப அமைதியைத் தியாகம் செய்யும் துணிவு உங்களுக்கு இருக்கிறதா? இல்லை என்றால் அவர் செய்கிற பாவத்தைப் பார்த்துக் கொண்டு பேசாமலிருக்கிற குற்றத்தைச் செய்வதைத் தவிர்த்து வேறு வழியில்லை. இருக்கிறது என்றால், குடும்ப அமைதிக்கு பாதகம் விளைவிப்பதில் உங்களை மிஞ்சியவர் வேறு யாருமில்லை. ஏனெனில் நீங்கள் ஒரு நன்மை செய்கிற அதே நேரத்தில் பெரியதொரு தீமையையும் செய்துவிடுகிறீர்கள். அதாவது—

ஒரு நன்மை செய்யும் நேரத்தில் ஒரு தீமை தோன்றுவதற்கு வாய்ப்புக் கொடுத்துவிடுகிறீர்கள் — அல்லது, ஒரு நன்மையின் பயனை ஒரு தீமையின் விளைவால் அழித்துவிடுகிறீர்கள்.

இதற்கு இஸ்லாம் ஒருபோதும் அனுமதி கொடுக்காது. குடும்பத்தில் அமைதியும் ஆனந்தமும் நிலவி நிற்க வேண்டும் என்றுதான் அது வலியுறுத்துகிறதே தவிர, அங்கே சச்சரவும் போராட்டமும் பேயாட்டம் போடுவதற்குச் சிறிதும் ஆதரவு தெரிவிக்கவில்லை.

யாரையும் பார்க்காமல் யாரிடமும் பேசாமல் சமுதாயத்தில் நடமாடுகிற நீங்களே இப்படித் தவறுகளில் சிக்கித்



தவிக்கிறீர்கள் என்றால், மக்களோடு நெருக்கமாகத் தொடர்பு கொண்டு வாழ்கிறவர்களின் நிலைமை எப்படியிருக்கும் என்று நீங்களே கணித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட தீங்குகளிலிருந்து உங்களுக்குத் தனிமைதான் பாதுகாப்புக் கொடுக்குமேயன்றி, சமுதாயத் தொடர்பு அல்ல!

பார்த்தீர்களா? உங்கள் மாமனார் பற்றிய பேச்சில் சூடுபிடித்த காரணத்தால் நாம் ஒரு தவறு செய்து விட்டோம். உங்கள் தோள்மீது கைவைத்துக் கொண்டு நின்ற நண்பரை அடியோடு மறந்துவிட்டோமல்லவா? தெரிந்தால் நிச்சயமாக வருத்தப்படுவார். எனவே—

இப்போது அவர் தலையைக் கொஞ்சம் உருட்டுவோம், அதாவது, அவரால் தோன்றுகிற நல்லது—கெட்டது பற்றி உரையாடுவோம்.

உங்களுக்கு ஒருவன் நண்பனாக இருந்தால் அவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இஸ்லாம் இலக்கணம் வகுத்து வைத்திருக்கிறது. அதனை நான் எழுதிய 'நட்பின் பெட்பு' என்ற நூலிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம். என்றாலும் நண்பனைப் பற்றிப் பேச வேண்டிய இந்தக் கட்டத்தில் நட்பின் இலக்கணத்தில் சில செய்திகளை எடுத்துக் காட்டுவது அவசியம் என்று எண்ணுகிறேன்.

**நண்பனும் திருடனும்**

ஒருவனுக்கு நீங்கள் நண்பன் என்றால், அவனது இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். இன்பத்தில் மட்டும் பங்கெடுத்துப் பக்கத்தில் உட்கார்ந்து சிரித்து விளையாடிவிட்டு, துன்பத்தில் நிலை குலைந்து தடுமாறும் நேரத்தில் நீங்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டால்—

உங்களுக்கு 'நண்பன்' என்ற குணப் பெயர் அறவே பொருந்தாது. என்றாலும் வேறொரு குணப் பெயர் உங்களுக்குப் பெரிதும் பொருத்தமானது: 'திருடன்'

இன்பத்தை மட்டும் கூறுபோட்டுப் பறித்துக் கொண்டு, துன்பத்தைப் புறக்கணித்துத் தப்பியோடுகிற உங்களைத் திருடன் என்று குறிப்பிடுவதில் தவறில்லை. ஏனெனில், ஒரு வீட்டுக்குள் நுழைகிற திருடன் தனக்குத் தேவையான வற்றை எடுத்துக் கொண்டு ஓடிவிடுகிறானே தவிர, அங்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நோயாளிக்கு மருந்து ஊற்றிக் கொடுப்பதில்லை.

ஆனால் ஒரு வித்தியாசம்: அவன் யாருக்கும் தெரியாமல் பயந்து நடுங்கிக் கொண்டே திருடுகிறான்; நீங்கள் எல்லாருக்கும் தெரியும் வகையில் சிறிதும் பயமில்லாமல் திருடுகிறீர்கள்.

உங்கள் நண்பன் குடும்பப் பிரச்சினையிலோ தொழிற் பிரச்சினையிலோ நிதானமிழந்து தவிக்கும் நேரத்தில், உங்கள் கவலையைவிட அவனது கவலைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் சிந்தனை செய்து தீர்வுகாண வேண்டும்; அவனைப் பழைய நிலைமைக்குக் கொண்டுவர உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யவேண்டும்.

தான் எடுத்த காரியத்தில் வெற்றியடைந்து விட்டதால் அவன் வரம்பைத் தாண்டி மகிழ்ச்சியடையும்போது—

"முட்டாள்! இதற்குமேல் எந்த வெற்றியும் எனக்குத் தேவையில்லை என்பதுபோல் ஆனந்தத்துடன் ஆட்டம் போடுகிறாயே, இது வெற்றிக்குமேல் வெற்றியடைந்து கொண்டிருக்கிற எந்த மனிதனும் செய்யாத வேலை. ஒரு வெற்றியைக் கண்டு அதிகமாகப் பூரிப்படைகிற— பெருமைப்படுகிற எவருக்கும் அடுத்த வெற்றி சுலபமாகக் கிடைப்பதில்லை. வெற்றியைப் பார்த்துப் பெருமகிழ்ச்சி



அடைகிறவர்களுக்குத் தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் சக்தி கிடையாது. வெற்றியானாலும் தோல்வியானாலும், எந்த நேரத்திலும் நிதானத்தை இழந்துவிடக்கூடாது!" என்று நீங்கள் கண்டித்துக் கூறவேண்டும்.

அவனிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்களோ அப்படித்தான் அவன் உங்களிடம் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்களையும் அவனையும் 'நண்பர்கள்' என்று குறிப்பிட முடியும்.

நீங்கள் ஏதோ ஒரு காரியத்தில் தோல்வியடைந்து விரக்தி கொண்டிருக்கும் நேரத்தில்—

"நீ என்ன செய்கிறாய்? விரக்தியடைவது இஸ்லாத் தைப் பின்பற்றுகிற எந்த மனிதனிடமும் இருக்கக் கூடாத ஒரு மனநிலை. இதை நீ வளர்த்துக் கொண்டு உட்கார்ந் திருக்கிறாயா? தோல்வியைக் கண்டு கலங்குகிற எந்த மனிதனும் வெற்றிக்கு உரிமைபெற முடியாது. இந்த மனப்பான்மைக்கு இஸ்லாம் பெரிதும் எதிர்ப்புத் தெரிவிக்கிறது!" என்று அவன் உங்களுக்கு அறிவுரை கூறவேண்டும்.

'நண்பர்கள்' என்று தம்மைக் கூறிக் கொள்கிற பலர் இப்படி நடந்து கொள்வதில்லையே என்ற நினைப்பு உங்களுக்குத் தோன்றினால், அவர்கள் இஸ்லாத்தின் சட்டங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று நீங்களே உங்கள் மனத்துக்குப் பதில் சொல்லிக் கொள்ளுங்கள். மார்க்கத்துச் சட்டங்களைப் பின்பற்றி நடக்கிற மனவலிமையை அவர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை. அவர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள்—இருப்பார்கள் என்றால், அதற்கு நீங்களோ நானோ பொறுப்பாளியல்ல!

தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் தவறு செய்ய முற்படும்போது உங்களைத் தடுத்து நிறுத்துகிற முதல் மனிதன் உங்கள் நண்பனாகத்தான் இருக்கவேண்டும்.

அவன் ஏதேனும் நற்காரியம் செய்ய முயலும்போது அவனுக்கு ஊக்கமளிப்பதில் நீங்கள் மகிழ்ச்சி அடையவேண்டும். நீங்கள் நோயுற்றிருக்கும் செய்தியறிந்ததும் அவன் ஓடிவந்து உங்களைப் பார்த்துவிட்டு வைத்தியனின் வீட்டை நோக்கி விரைந்து செல்வதைத் தன் கடமையாக நினைக்கவேண்டும். நோயுற்றுக்கிடந்த அவன் குணமடைந்து வருகிறான் என்ற செய்தி காதில் பட்டதும் தாமதம் செய்யாமல் உடனே அவனது வீட்டிற்குச் சென்று முழுமையான ஆரோக்கியம் கிடைப்பதற்குத் தேவையான அலுவல்களைக் கவனிப்பதில் உங்களுக்குப் பெருத்த உரிமை இருக்கிறது என்று நீங்கள் நினைக்க வேண்டும். உங்கள் வெற்றியைக் கண்டு அவன் பூரிப்படைய வேண்டும், அவனுடைய தோல்வி உங்கள் மனத்தை உறுத்த வேண்டும்.

மொத்தத்தில், அவன் கலங்கினால் உங்கள் கண்களிலிருந்து நீர் வடியவேண்டும். நீங்கள் மகிழ்ந்தால் அவன் முகத்தில் அதன் முத்திரை தெரிய வேண்டும்.

"இப்படிப்பட்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்" என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றினால்—

''நட்பின் இலக்கணத்தை நடைமுறைக்குக் கொண்டுவருகிற சிலர் எப்போதும் இருப்பார்கள். இத்தகையவர்களை இந்த உலகம் எந்தக் காலத்திலும் இழந்ததில்லை!'' என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்; அல்லது தெரிந்த உண்மையைப் பசுமைப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் நடந்து செல்கிற வேகத்தைப் பார்த்ததும் விரைந்துவந்து உங்கள் தோள்மீது கைவைக்கிறானல்லவா நண்பன்? அவன் செயலுக்குக் காரணம் என்ன? இதைப்பற்றி இப்போது நாம் ஆராய வேண்டும்.



தான் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு, உங்கள் அவசரத்திற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொண்டு திரும்பிச் சென்று, விட்ட வேலையை விட்ட இடத்திலிருந்து தொடரும் எண்ணம் அவனுக்கு உண்டா? அப்படியானால்—

உண்மையில் அவன் உங்களுக்கு நண்பனல்ல! நீங்கள் அவனை நண்பன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் அந்த தவற்றுக்கு அவன் பொறுப்பாளியல்ல. உங்கள் 'நட்பு' ஒரு தலைப்பாங்கானது; இதற்கு நட்பு என்றும், அவனுக்கு நண்பன் என்றும் பெயரிடுவது சுத்தமான அறியாமை; வேண்டுமானால், நீங்கள் "அவன் என் நண்பன்" என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் அவனைக் கேட்டால் என்னைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரிப்பான். "நீங்கள் பெரிய மனிதர்; பாரசீகத்தில் பிறந்து பக்தாத் நகரத்து அறிஞர்களைத் திகைக்க வைத்தவர்; தத்துவக் கலைக்குத் தைலம் தடவிவிட்டவர்; மூலத்தத்துவ விவாதத்திற்கு வாயாப்புப் போட்டவர்; நிஜாமியா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகத் தொண்டாற்றிய காலத்தில் எதிர்த்து மோதிய அறிஞர்கள் அனைவருக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தவர். இவ்வளவு தகுதிகள் இருந்தும், நீங்கள் மனிதர்களைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ள வில்லையே?" என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரிப்பான்.

இத்துடன் என்னை விட்டுவிடுவான் என்று நினைக்கிறீர்களா! உங்கள் கணிப்பு முற்றிலும் தவறானது. அவன் தொடர்ந்து பேசுவான்.

''இருமுனை நட்புக் கொண்டு வாழ்வது சிறப்பு மிக்கதுதான். ஆனால் இப்படி வாழ்கிறவர்களில் எத்தனை பேரை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்? எத்தனை பேரை உங்களால் எனக்குக் காட்டமுடியும்? மக்களில் பலர்—மிகப் பலர் என்னைப் போலத்தான் வாழ்ந்து கொண்டிருக்

கிறார்கள். எத்தனை பேரை வேண்டுமானாலும் என்னால் உங்களுக்குக் காட்டமுடியும். எனக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் எனக்கு ஏதேனும் ஒரு காரியம் ஆக வேண்டிய நிலைமை ஏற்பட்டால், நட்பு என்ற உறவைக்கூறிச் சிரித்துப் பேசி, சிரிக்கவைத்து என் வேலையை முடித்துக் கொள்வேன். வேலை முடிந்ததும் அவர்களை மறந்துவிடுவேன். இதில் பாவம் கிடையாது என்பது என் நம்பிக்கை. ஏனெனில் என்னால் ஆக வேண்டிய காரியங்களுக்கு அவர்களும் இதே வழியைத்தான் கையாள்கிறார்கள்.

"இந்த உறவை நட்பு என்று எப்படிக் குறிப்பிட முடியும் என்று நீங்கள் கேட்கலாம். இந்த உறவுக்கு நீங்கள் என்ன அர்த்தம் கொடுத்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலை யில்லை நான் கொடுக்கும் அர்த்தம் வித்தியாசமானது. இதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. இந்த உறவுக்கு நானும் அவர்களும் ஒருமித்த மனத்துடன் சூட்டுகிற பெயர் 'நட்பு'. இந்த உறவில் கட்டுப்பட்டவர் களுக்கு நாங்கள் வைத்துக் கொள்ளும் பெயர் 'நண்பர்கள்'. தெருவில் விரைந்து சென்ற உங்கள் மாணவர் எங்களுக்கு மாறுபட்டவர் என்றால், அது நான் செய்த தவறல்ல!"

அவன் சொல்வதைக் கேட்ட நீங்கள் சினம் கொண்டு "அப்படியானால், அவசரமாகப் போய்க் கொண்டிருந்த என்னைத் தோள்மீது கைவைத்து ஏன் நிறுத்தி வைத்தீர்கள்?" என்று அவனிடம் கேட்கிறீர்களா?

இதற்கும் அவன் உடனே பதில் கொடுப்பான்.

"நண்பரே, உங்களுக்கும் எனக்கும் நீண்டகால நட்புண்டு. வெள்ளிக்கிழமைத் தொழுகைக்கு முன்னாலும் பெருநாள் தொழுகைக்குப் பின்னாலும் வெகுநேரம் நாம் உரையாடிக் கொண்டிருப்பதுண்டு. சிரமங்களை என்னிடம் சொல்லிக் காட்டுவதில் உங்கள் மனம் அமைதி அடைந்தது.



என் சிரமங்களை உங்களிடம் எடுத்துக் கூறி நானும் அமைதி அடைந்திருக்கிறேன். ஒரு நாள் உங்களிடம் நான் கடன் கேட்டபோது உடனே உதவி செய்தீர்கள்; அதில் மகிழ்ச்சியும் அடைந்தீர்கள். மற்றொரு நாள் என்னிடம் நீங்கள் உதவி கேட்டபோது, நான் நிறைவேற்றினேன். ஆனால் உங்களைப் போல் என்னால் மகிழ்ச்சி அடைய முடியவில்லை. உங்கள் மனம் அப்படி; என் மனம் இப்படி! நீங்கள் நட்பின் இலக்கணத்தை வாழ வைக்கிறீர்கள்; பாராட்டுகிறேன். ஆனால் நான் அப்படியில்லை. மக்களில் பெரும்பாலோர் நடந்து கொள்ளும் வழியைப் பின்பற்றி நட்பு வைக்கிறேன்.

"நானும் உங்கள் மாமனாரும் பழங்கதை ஒன்றை எடுத்து வைத்து அசைபோட்டுக் கொண்டு உட்கார்ந்திருந் தோம். அதில் அப்படியொன்றும் எனக்கு உற்சாகம் தோன்ற வில்லை. அப்போதுதான் நீங்கள் அவரசமாக நடந்து வந்தீர்கள். உங்கள் மாமனார் எந்த எண்ணத்துடன் உங்களை வழிமறித்தார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் உங்கள் அவசரத்தின் காரணத்தைத் தெரிந்து கொண்டால் உற்சாகத்தை உண்டாக்குகிற செய்தி ஏதேனும் கிடைக்கலாம் என்று நான் நினைத்தேன். அப்படி எதுவும் கிடைக்காவிட்டால் விட்ட இடத்திலிருந்து அந்தப் பழங்கதையைத் தொடரலாம் என்று எண்ணினேன். இதனால் தான் உங்களை நெருங்கி வந்தேன். இது ஒரு தவறா?"

இது தவறா, இல்லையா என்ற ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. ஆனால் சமுதாயத்தில் கலந்து பழகும்போது, நீங்கள் எந்தத் தந்திரத்தைக் கையாண்டாலும், இப்படிப் பட்டவர்களின் குறுக்கீடுகளிலிருந்து உங்களால் தப்ப முடியாது என்பதை உணர்ந்து கொள்ளவில்லை என்றால் அது உண்மையிலேயே தவறுதான். சமுதாயத்தில் இத்தகையவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம்.

இவர்களால் உங்களுக்கு ஏற்படுகிற தீமைகளை நாம் மறந்து விட்டாலும், அவர்களுக்கு நல்லதை எடுத்துக் கூறிக் கெட்டதைத் தடுத்து நிறுத்தும் வலிமை உங்களுக்குக் கிடையாது என்பது எவரும் மறக்கக்கூடாத ஒன்று.

நல்லதை எடுத்துக் கூறினால் அவர்கள் பின்பற்ற மாட்டார்கள். ஏனெனில் அல்லாததில் அவர்களின் மனம் போதை கொண்டிருக்கிறது.

கெட்ட செயல்களில் ஈடுபடும்போது அவர்களை உங்களால் தடுத்து நிறுத்த முடியாது. காரணம்: உங்கள்மீது அவர்கள் நட்புக் கொள்ளாவிட்டாலும், நீங்கள் அவர்கள்மீது ஆழ்ந்த நட்பு வைத்திருக்கிறீர்கள். அன்பும் நட்பும் நிறைந் திருக்கிற உங்கள் உள்ளத்திற்கு அவர்களைக் கண்டித்துத் திருத்தும் சக்தி கிடையாது. அன்பு நிறைந்த நெஞ்சம் தீமையை நன்மையாகக்கூடக் காட்டிவிடும். அப்படியானால் நடக்கும் தவறுகளைப் பார்த்துக் கொண்டு பேசாமலிருப்ப தைத் தவிர்த்து வேறு என்னதான் உங்களால் செய்யமுடியும்?

சில நேரங்களில் இருமுகப் பகைமையைவிட ஒரு முக நட்பினால் மிகப் பெரும் தீமைகள் உருவாகிவிட முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

எனவே, இத்தகைய தொல்லைகள் தனிமையில் உருவெடுக்க முடியாது என்பதற்கு ஆதாரம் தேவையில்லை. அவற்றிற்குச் சமுதாய வாழ்வில் பஞ்சமில்லை என்பதற்கு விளக்கம் அவசியமில்லை.

இப்போது நாம் ஒரு வேலை செய்வோம். அந்த நண்பனின் குணத்தையும் கொள்கையையும் அடியோடு அழித்துவிட்டு உண்மையான நண்பனுக்கு இருக்க வேண்டிய குணங்கள் அனைத்தையும் கொள்கைகள் எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுத்துவிடுவோம். கற்பனையில்தான்! உண்மையில் ஒரு மனிதனின் குணத்தை மாற்றுவது அப்படியொன்றும் இலகுவான காரியமல்ல. காட்டில் அராஜகம் செய்து கொண்டிருக்கிற ஒரு மிருகத்தை இழுத்துவந்து வீட்டில் குடும்பம் நடத்தச் செய்வதைவிட இது கடினமான வேலை.



இந்தக் கட்டத்தில் அவன் உங்களுக்கு உண்மையான நண்பன் எனும் நிலைமைக்கு உயர்ந்துவிடுகிறான்.

நீங்கள் வீதியில் செல்வதை அவன் பார்த்துவிட்டான் என்று வைத்துக் கொண்டால், அப்போது தோன்றும் விளைவு உங்களுக்கு முற்றிலும் சாதகமாக இருக்கும். அவன் உங்களை விட்டுவிடுவான் என்று நினைத்து விடாதீர்கள். உங்களைக் கண்டதும் விரைந்து வருவான்—

தன் குழப்பத்தையும் அச்சத்தையும் எடுத்துக் கூறி உங்கள் தன்னம்பிக்கையைக் கெடுத்துவிட்டு, அவற்றி லிருந்து தனக்கு விடுதலை தேடிக்கொள்ளும் எண்ணத் தினால் அல்ல!

அவன் ஓடிவந்து உங்கள் தோள்மீது கை வைக்கலாம்—

மற்றவர்களிடம் உற்சாகத்துடன் உரையாடுவதற்கு புதிய செய்தி ஏதேனும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தினால் அல்ல!

**ஒரு சிறு சைக்கினையே போதுமானது!**

நோக்கத்திலும் செயலிலும் அவன் வித்தியாசமானவன். நீங்கள் செய்யப் போகிற காரியத்திற்குத் தன்னால் ஏதேனும் உதவி செய்யமுடியுமா என்ற நல்லெண்ணத்துடன் அவன் உங்களை நெருங்கி வருவான். உங்களைத் தடுத்து நிறுத்தாமல் உங்கள் அவசரத்துக்கு ஈடுகொடுத்தவாறு உங்களுடனேயே நடந்து வருவான். அவன் சேர்ந்து வருவதால் உங்கள் வேலைக்கு இடையூறு தோன்றலாம் என்று நீங்கள் நினைத்தால் ஒரு சிறு சைக்கினையே

அவனுக்குப் போதுமானது. உடனே ''வெற்றியோடு திரும்பிவா. இறைவன் உனக்கு அருள்பாலிப்பானாக!'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி வந்துவிடுவான்.

இப்படிப்பட்ட நண்பர்களால் உங்களுக்கு நல்லதைத் தவிர்த்து வேறு எதுவும் கிடைக்காது என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத ஒன்று. ஆனால் இத்தகையவர்கள் சமுதாயத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்டவர்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

நீங்கள் தனிமையில் வாழ்ந்தாலும் சமுதாயத்தில் கலந்தாலும் இவர்களால் உங்களுக்கு எந்தத் தீமையும் ஏற்படப்போவதில்லை. அவர்களுக்கு நீங்கள் நல்லதை எடுத்துக் கூறலாம்; அவர்கள் உடனே பின்பற்றுவார்கள். தவறு செய்ய முற்பட்டால் அவர்களை உங்களால் நிச்சயமாகத் தடுத்து நிறுத்த முடியும்.

காரணம் : உங்கள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுச் சொந்த உணர்ச்சிகளைப் புறக்கணிக்கும் அளவுக்கு அவர்கள் உங்கள்மீது அழுத்தமாக நட்பு வைத்திருக் கிறார்கள்.

இதனால் "நல்லதை எடுத்துக் கூறுங்கள்; கெட்டதைத் தடுத்து நிறுத்துங்கள்'' என்ற நபிக் கட்டளையை நிறைவேற்றிய பெருமைக்கு நீங்கள் உரிமை பெறுகிறீர்கள். இந்த உரிமை பெரிதும் பாராட்டுக்குரிய ஒன்று. ஆனால்—

உண்மையான நண்பனால்தான் இந்த உரிமையை நீங்கள் அடைகிறீர்களேயல்லாமல், சமுதாயத்துடன் உங்களுக்கு இருக்கிற தொடர்பினால் அல்ல! எனவே—

தனிமையின் சிறப்பை இது எந்த வகையிலும் குறைக்காது.

இப்போது கெட்டவர்கள், பழக்கப்பட்டவர்கள், உங்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் ஆகியோரைப் பற்றி



நாம் உரையாட வேண்டுமல்லவா? இதுவரை நான் கூறிவந்த செய்திகளை அடிப்படையாக வைத்துச் சிந்தனைக்கு வேலை கொடுத்து அவர்களினால் எப்படிப்பட்ட தீமைகள் தோன்ற முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். சொந்தச் சிந்தனையைத் தூங்கப் போட்டுவிட்டு என் பேச்சை மட்டுமே கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தால்—

நீங்கள் சிந்திக்கும் திறனையே இழக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். இப்படிச் சிந்தனைச் சக்தியை அடியோடு இழந்தவர்கள் பலரை எப்போதும் நீங்கள் பார்க்கலாம். ஒரு பொருளைச் சரியான உபயோகத்திற்குக் கொண்டுவராமல் அப்படியே போட்டுவிட்டால் அது உபயோகப்படுகிற தகுதியை இழந்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியாத உண்மையா என்ன?

இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிற செல்வங் களில் சிந்தனைச் சக்திக்குப் பெரிதும் உயர்ந்த இடமுண்டு. அதனை அடிக்கடி உபயோகித்துக் கொண்டிருப்பவர்கள் அடைகிற அறிவுக்கும் தெளிவுக்கும் விளக்கம் கொடுப் பதற்குப் பொருத்தமான வார்த்தைகள் எந்த மொழியிலும் கிடையாது. அதனை நீங்கள் முறைப்படி பயன்படுத்தவில்லை என்றால் இறைவன் உங்களுக்குக் கொடுத்த செல்வத்தைப் பயனின்றிப் பாழாக்கியவராவீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

## எனக்கு ஓய்வு கொடுங்கள்

நீண்ட நேரமாக உங்களிடம் நான் உரையாடிக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்த செய்திகளை உங்கள் மனத்தில் ஆழமாகப் பதியவைக்கும் எண்ணத்துடன் சிரமப்பட்டுப் பேசிக் கொண்டிருக்கும் எனக்குச் சிறிது ஓய்வு கிடைக்கவேண்டும் என்பதற்காகவாவது நீங்கள்—

உங்கள் சிந்தனைக்குக் கொஞ்சம் வேலை கொடுக்கக் கூடாதா?

இப்போது நீங்கள் செய்ய வேண்டிய வேலை :

என்னுடைய பேச்சோடு இணைந்துவந்த உங்கள் சிந்தனைக்குக் கனத்த பொறுப்பு ஒன்றைக் கொடுங்கள். மேற்குறிப்பிட்ட மூன்று சாராரும் அவசரமாகச் சென்று கொண்டிருக்கும் ஒரு மனிதனிடம் எப்படி நடந்து கொள்வார்கள்? அவனுக்கு அவர்களால் நன்மை கிடைக்குமா, தீமை தோன்றுமா? நன்மையும் தீமையும் தோன்றலாம் என்றால், எதைவிட எது அதிகமாக இருக்கும்? தீமைதான் அதிகமாக இருக்கும் என்றால், அந்த மனிதனுக்குச் சமுதாயத் தொடர்பு தேவைதானா? யாரையும் பார்க்காமல் எவரிடமும் பேசாமல் வில்லைவிட்டுப் புறப்பட்ட அம்பைப் போல் விரைந்து செல்கிற அந்த தந்திரக்காரனுக்கே இந்த நிலை என்றால், சமுதாயத்தில் கலந்து பின்னிப் பிணைந்து வாழ்கிற ஒருவனுக்கு எப்படிப்பட்ட நிலைமை ஏற்படும்? அவன் சமுதாயத்தில் ஒருவனாக வாழ வேண்டுமா, தனிமையில் நாட்டம் கொள்ள வேண்டுமா?

இந்த வினாக்களை எல்லாம் உங்கள் சிந்தனைக்குக் கொடுத்துத் தெளிவும் தீர்க்கமும் கொண்ட உண்மைகளைத் தெரிந்துக் கொள்ளுங்கள். உங்கள் சிந்தனைக்கு இந்தத் திறமை நிச்சயமாக உண்டு என்பது என் நம்பிக்கை.

எனக்கு நீங்கள் கொடுக்கிற ஒய்வுநேரம் உங்கள் சிந்தனைக்கு வேலை நேரமாக அமையட்டும்!

**உண்மையான பூரிப்பும் பெருமிதமும்**

இப்போது நீங்கள் ஆழ்ந்து சிந்தனை செய்ததால் ஏற்பட்ட களைப்புடனும் யாரும் எடுத்துக்கூறாமல் நீங்களாகவே உண்மைகளைத் தெரிந்து கொண்ட பார்வையுடனும் காணப்படுகிறீர்கள். உங்கள் உள்ளத்தில் பூரிப்பும் பெருமிதமும் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பூரிப்பும் பெருமிதமும் உண்மையானவை; உங்களுக்கே சொந்தமானவை; உள்ளதை உள்ளபடி தெரிந்து கொண்டதால் உங்களுக்குக் கிடைத்தவை. இங்கே போலித்தனத்திற்கு அறவே இடம் கிடையாது. ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ளும்போது தோன்றுகிற மகிழ்ச்சி உள்ளத்தின் சக்தியைக் கூர்மைப்படுத்தக் கூடியது. அந்த உண்மையைச் சொந்தச் சிந்தனையினால் தெரிந்து கொண்டால் உங்களுக்குக் கிடைக்கிற மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் வாழ்க்கைக்குப் பெரிதும் தேவையானவை.



நான் சொல்லும் செய்திகளை எடுத்து வைத்துச் சிந்திக்கிற பழக்கம் உங்களுக்கு வந்துவிட வேண்டும். இந்தப் பழக்கம் வந்துவிட்டால் —

நான் சொல்ல மறந்த செய்திகளை மட்டுமன்றி சொல்லாமல் மறைத்த உண்மைகளையும் கூட நீங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம்.

இப்போது, விட்ட இடத்திலிருந்து நாம் உரையாட வேண்டும். அதற்குமுன்னர் உங்கள் பூரிப்பையும் பெருமிதத்தையும் அடக்கிவைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அதிகமான மகிழ்ச்சி மனத்தை நிரப்பிக் கொண்டிருந்தால் நான் சொல்லும் செய்திகளை உங்களால் கவனித்துக் கேட்க முடியாது; அப்படியே கேட்டாலும் அவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. மனிதனுக்கு இறைவனால் கொடுக்கப் பட்டிருப்பது ஒரே ஓர் உள்ளம். ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளைச் செய்யும் சக்தி அதற்குக் கொடுக்கப்பட வில்லை. மனத்தில் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கும் பூரிப்பு உங்கள் கவனம் முழுவதையும் கவர்ந்து கொண்டிருக்கும்போது, நான் சொல்கிற செய்திகளை மட்டுமல்ல— நான் உரையாடிக் கொண்டிருக்கிறேன் என்பதைக்கூட உங்களால் கவனிக்க முடியாது, ஏனெனில்—

ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைக் கவனித்துக் கொள்கிற கலையில் நீங்கள் சிறிதும் பயிற்சி இல்லாதவர். எனவே—

மனத்தை நடுநிலையில் வைத்துக் கொண்டு, நான் சொல்கிற செய்திகளைக் கவனித்துக் கேளுங்கள். சமுதாயத்தில் கலந்துவாழ்கிறவர் யாராக இருந்தாலும், அவர் எந்த தந்திரத்தைக் கையாண்டாலும், அங்கு தோன்றுகிற தீமைகளிலிருந்து தற்காத்துக் கொள்வது மிகச் சிரமமான காரியம் என்பது உங்கள் சிந்தனை உங்களுக்குத் தெளிவுபடுத்திய உண்மை. திறமை மிக்கவர்களே சமுதாயத்தின் நடுவில் பலவீனப்பட்டுத் தடுமாறுகிறார்கள் என்றால், சாதாரண மனிதன் சமுதாயத்தில் இடையிடையே தோன்றுகிற தீமையிலிருந்து ஒரு போதும்—

**தப்பமுடியாது — அது தப்பவிடாது**

—என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானதல்ல. சமுதாய வாழ்வில் உங்களுக்குப் பல்லாயிரம் நன்மைகள் கிடைக்கலாம்; யாரும் மறுக்க முடியாது. ஆனால் சமுதாயத் தொடர்பினால் உங்கள்மீது விழுகிற பாவங்களின் எண்ணிக்கை அதற்குச் சிறிதும் குறைந்ததல்ல.

மக்கள் கலந்து வாழும் சமுதாயத்தின் ஒரு பகுதியில் நன்மைகள்—மிகச் சிறந்த நன்மைகள் உருவாகலாம். வேறொரு பகுதியில் கணக்கின்றித் தீமைகள் தோற்ற மெடுக்க முடியும். நன்மைகள் தோன்றும் பகுதி எப்போதும் அப்படித்தான் இருக்கும் என்று சொல்ல முடியாது. அங்கே ஒரு நேரத்தில் நன்மைகள் தோன்றினால் வேறொரு நேரத்தில் பயங்கரமான தீமைகள் உண்டாகலாம்.

நீங்கள் மக்களோடு கலந்து உறவாடும்போது அவற்றை உங்களால் பார்க்காமல் இருக்கமுடியாது. அவற்றையும் அவற்றிற்கு உயிர் கொடுக்கிறவர்களையும் பார்த்துவிட்டு



மௌனம் சாதித்தால் நீங்கள் குற்றம் செய்தவராவீர்கள். ஏனெனில் மார்க்கத்திற்கு முரணான செயல்கள் நடந்தால் அவற்றைத் தடுத்து நிறுத்துவது ஒவ்வொரு மனிதனுக்கும் கடமையாகும்; கடமையைப் புறக்கணிப்பது குற்றமாகும்.

தீமை செய்கிறவர்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டால், தவறு செய்வதில் சுவை கண்ட அவர்கள் உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, உங்கள்மீது கோபம் கொண்டு பல்வேறு வழிகளில் உங்களுக்குத் தொல்லைகளும் கொடுப்பார்கள். அவர்கள் கொடுக்கிற தொல்லைகளினால் நிதானத்தை இழந்த நீங்கள் சினத்தின் கட்டளைக்கு அடிபணிந்து—

அவர்களுக்குத் தீங்கு செய்வதில் ஒரு படிமேலே செல்ல வேண்டிய அவசியம் ஏற்படும். அதாவது, ஒரு தீமையைத் தடுக்கப்போன நீங்கள், அதைவிடப் பெரிய தீமைகளைச்செய்ய வேண்டிய நிலைமைக்குத் தள்ளப் படுகிறீர்கள். இந்தக் சூழலை உங்களால் தவிர்க்க முடியாது.

**மனிதனும் மண்சுவரும்**

தீமையில் பழக்கப்பட்ட அவர்களைத் திருத்த முற்படுவது, உங்களைப் பொறுத்தவரையில், சாய்ந்து நிற்கிற சுவரை நேராக்கி வைக்கத் துணிவது போன்றதொரு காரியமாகும். அதனை நேராக்கி நிமிர்த்தி வைக்கும் சக்தி உங்களுக்குக் கிடையாது என்பது மட்டுமல்ல, உங்கள் பலத்தினால் ஆட்டம் கண்ட அந்தச் சுவர்—

உங்கள் மீதே விழுந்துவிடுகிற ஆபத்தும் ஏற்பட்டுவிட முடியும்! உதவிக்குச் சிலர் ஓடிவந்தால் எதையாவது வைத்து முட்டுக் கொடுத்து அதனை நேராக்கிவிடலாம் என்ற சபலம் அப்போது உங்கள் மனத்தில் தோன்றும். ஆனால் அந்த நேரத்தில் யாரும் உங்களுக்கு அருகில் வரமாட்டார்கள். ஏனெனில்—

உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைப் பங்கு போட்டுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறவர்கள் அங்கே இருக்க மாட்டார்கள். நீங்கள் சத்தம் போட்டால் நிச்சயமாகப் பலர் பறந்து வருவார்கள் —வேடிக்கை பார்க்க!

வேடிக்கை பார்க்கிறவர்கள் வேதனையில் பங்கெடுத்துக் கொள்வார்களா? அல்லது—

"யாருக்கும் இல்லாத அக்கறை உங்களுக்கு ஏன் வந்தது?" என்று கேட்டு உங்களைக் குற்றவாளியாக்கு வார்களா? அல்லது—

"சாய்ந்து நின்ற காரணத்தால் அந்தச் சுவர் உச்சிவேளையில் கொஞ்சம் நிழல் கொடுத்துக் கொண்டிருந்தது. இவருக்கு அது என்ன தீங்கு செய்தது? சாய்ந்த சுவரை நேராக்குவது சாதாரணக் காரியமல்ல என்பதை இவர் உணர்ந்து கொள்ளவில்லை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். மறுபக்கம், உச்சி நேரத்தில் சிறிதள வேனும் கிடைத்துக் கொண்டிருந்த நிழலை இல்லாதபடி செய்யும் வகையில் இவர் இந்தச் சுவர்மீது கை வைத்ததே குற்றமாகும்" என்று தீர்ப்பு வழங்குவார்களா?

அவர்கள் எதைச் செய்தாலும் எதைச் செய்யா விட்டாலும், முந்திய ஒன்றை மட்டும் நிச்சயமாகச் செய்ய மாட்டார்கள். அதாவது —உங்கள் வேதனையில் பங்கெடுத்துக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் வேடிக்கை பார்க்கத்தான் பறந்து வந்திருக்கிறார்களே தவிர, உங்கள் வேதனைக்குப் பேரம் பேச அல்ல!

தவறு செய்யும் மனிதனைத் திருத்த முற்படும்போது இதே நிலைமைதான் உங்களுக்கும் ஏற்படும் என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது. உங்களுக்குச் சந்தேகம் தோன்றினால் மார்க்கத்திற்கு முரணான செயலில்



ஈடுபட்டிருக்கிற ஒரு மனிதனுக்கு அறிவுரை கூறிப் பாருங்கள்.

உங்கள் அறிவுரையை அவன் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஏனெனில் நீங்கள் காட்டுகிற பாதைக்கு முற்றிலும் எதிரான வழியில் அவன் சென்று கொண்டிருக் கிறான்; அதில் அவன் மகிழ்ச்சியும் அடைந்து கொண்டிருக் கிறான். நீங்கள் சொல்கிற அறிவுரைக்காக தன் மகிழ்ச்சியை அவன் தியாகம் செய்துவிடுவான் என்று நம்புவது சுத்தமான அறியாமை.

உங்கள் முயற்சி பயனற்றுப் போனதை உணர்ந்த நீங்கள் உங்கள் சக்தி முழுவதையும் திரட்டி வைத்துக் கொண்டு மீண்டும் அறிவுரை கூறுவீர்கள். அவன் செல்லும் பாதை மார்க்கத்தின் சட்டத்திற்கு முரண்பட்டது என்பதை நிரூபித்துக் காட்ட முற்படுவீர்கள்; இறை வசனங்களையும் நபிக் கருத்துக்களையும் எடுத்து வைத்து ஆதாரம் காட்டுவீர்கள்.

உங்கள் பிடிவாதம் அவன் கௌரவத்திற்கு ஒரு சவாலைப் போல் அமைந்துவிடும். அப்புறம் அவன் சும்மா இருப்பானா?

சினம் கொண்ட சிறுத்தையைப்போல் அவன் உங்கள்மீது பாய்வான்; உங்கள் கௌரவத்தைக் காற்றில் பறக்கவிடும் முயற்சியில் ஈடுபடுவான்.

"இறைவசனத்தையும் நபிக்கருத்துக்களையும் எடுத்து வைத்துப் பேசும் நீங்கள் ஒழுக்கத்தில் என்னைவிட எப்படி உயர்ந்தவர்?" என்று உரத்த குரலில் கேட்டுவிட்டு—

நீங்கள் செய்யாத தவறுகளையும் செய்த தவறுகளையும் எடுத்துக் காட்டி எல்லாருக்கும் கேட்கும்படி சத்தம் போட்டு விளக்கம் கொடுப்பான் —இதற்கிடையில் இந்த வேடிக்கையைக் கண்டும் கேட்டும் ரசிப்பதற்கு அங்கே

ஒரு கூட்டம் திரண்டு நிற்கும்.

''ஒழுக்கத்தில் உங்களைவிட நான் நிச்சயமாக உயர்ந்தவன்தான்; நீங்கள் வேண்டுமென்றே என்னை அவமானப்படுத்துகிறீர்கள்; என் கௌரவத்திற்குக் களங்கம் கற்பிக்கிறீர்கள். நான் எந்தத் தவறும் செய்தது கிடையாது; எண்ணத்தாலோ செயலாலோ ஒரு சிறு பாவமும் நான் செய்ததில்லை" என்று நீங்கள் சொன்னால் கூடி நிற்பவர்கள் வாய்விட்டுச் சிரிப்பார்கள். ஏனெனில்—

ஒரு சிறு பாவம் கூடச் செய்யாத மனிதனும் அறவே நன்மை செய்யாத மனிதனும் உலகில் கிடையாது என்ற உண்மை, தனிமையில் வாழ்கிறவர்களுக்கு மட்டுமன்றி—சமுதாய மக்களுக்கும் நன்றாகத் தெரிந்த ஒன்று!

இதற்குமேல் உங்கள் பிரச்சாரத்தைத் தொடர்ந்தால், அவன் உடனுக்குடன் கொடுக்கும் பதிலில்—

'நீங்கள்'—'உங்கள்' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக 'நீ'— 'உன்' எனும் சொற்கள் புகுந்து விளையாடும்! இதனால் பலத்த கைகலப்பும் ஏற்படலாம்.

நீங்கள் மேற்கொண்ட புனிதப் பணிக்குத் துணை தேடும் எண்ணத்தில் எல்லாரையும் ஏக்கத்தோடு பார்ப்பீர்கள்; ''நான் நல்லதைத்தானே எடுத்துச் சொல்கிறேன்! நீங்களாவது அவருக்குப் புத்திமதி சொல்லக் கூடாதா?" என்று கேட்பீர்கள்.

கூடியிருப்பவர்கள் சிறிதும் தயக்கம் காட்டாமல் உடனே முன்வருவார்கள் உதவிசெய்ய—உங்களுக்கல்ல, அவனுக்கு! ஆரம்பித்த மார்க்கப் பணியைத் தெரு வேடிக்கையாக்கிய உங்களைவிட யாரையும் வம்புக்கு இழுக்காமல் பாவம்செய்து கொண்டிருந்த அவனை அவர்கள் உயர்த்தி மதிப்பார்கள்.

''அவன் எப்போதும் இப்படித்தான் தவறுசெய்து கொண்டிருக்கிறான். அவனை உங்களால் திருத்த முடியாது என்று



தெரிந்து கொள்ளாதது உங்கள் குற்றம். நீங்கள் அவன் வழியில் குறுக்கிடவில்லை என்றால், புனிதமிக்க மார்க்கப் பிரச்சாரம் இப்படி எல்லாரும் கூடி நின்று பார்க்கிற வேடிக்கையாக மாறியிருக்காது'' என்று உங்களுக்கு அறிவுரை கூறுவார்கள்—

நீங்கள் செய்த தவற்றை 'அவர்கள்' திருத்துவதுபோல்; அல்லது, "நல்லதை எடுத்துக் கூறுங்கள்; கெட்டதைத் தடுத்து நிறுத்துங்கள்" என்ற நபிக் கருத்துக்கு 'அவர்கள்' உயிர் கொடுப்பது போல்!

**பதவிப் பிரமாணமற்ற நீதிபதி**

இறுதியில், கூட்டத்திலிருந்த ஒருவன் விரைவாக நெருங்கி வந்து உங்களுக்கு எதிரில் நிற்பான். உங்கள் நெஞ்சுக்கு நேராகத் தன் ஆள்காட்டி விரலை நீட்டிக் குற்றப்பத்திரிகை வாசிப்பான்.

அவன் பாவம் செய்து கொண்டிருந்தான் என்பது உண்மையாக இருக்கலாம்; நான் பார்க்கவில்லை. நீங்கள் பார்த்திருக்கலாம்; நான் மறுக்கவில்லை. அவன் ஏதோ ஒன்று செய்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு அதற்கு எதிரான வேறொன்றைச் செய்து கொண்டிருப்பதாக நீங்கள் நினைத்திருக்கலாம். இது உண்மை என்றால், "பிறரைப் பற்றித் தாழ்வாக நினைக்காதீர்கள்" என்ற இறைக் கருத்து உங்களைக் குற்றவாளியாக்குகிறது.

அவன் மறைவான இடத்தில் உட்கார்ந்து தவறு செய்து கொண்டிருந்தான் என்பது உண்மை என்றால், நீங்கள் சிரமப்பட்டுத் துப்பறிந்து பாவத்தைக் கண்டு பிடித்திருக்கிறீர்கள் என்று அர்த்தம். அப்படியானால், "பிறர் செய்யும் பாவங்களைத் துப்பறியாதீர்கள்" என்ற இறை வசனம் உங்கள் மீது குற்றத்தைச் சுமத்துகிறது.

பாவம் செய்வதில் இன்பம் கண்ட ஒருவனைத் திருத்துவது அப்படியொன்றும் சுலபமான வேலையல்ல என்ற உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ளவில்லை; இது உங்களால் சாதிக்க முடியாத காரியம் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. உங்கள் பலவீனத்தை மறந்துவிட்டுப் பலத்தை மட்டும் உயர்த்திவைத்து மதித்துவிட்டீர்கள்.

எனவே ஒரு மனிதனைத் திருத்த முற்பட்ட நீங்கள் உங்கள் பலவீனத்தை மறந்தது ஒரு குற்றம்; சாதிக்க முடியாததைச் சாதிக்க நினைத்துக் காரியத்தில் இறங்கியது மறு குற்றம்; சாதிக்க முடியவில்லை என்று தெரிந்தபிறகும் விலகிச் செல்லாமல் இங்கே கூடியிருப்போரை உதவிக்கு அழைத்தது வேறொரு குற்றம்; புனிதமிக்க மார்க்கப் பணியை வேலையற்றவர்கள்—வேலையை மறந்தவர்கள் ரசித்துக் களிப்படைகிற வேடிக்கையாக மாற்றியது மிகப் பெரும் குற்றம்....எனவே—

பாவம் செய்து கொண்டிருந்த அந்த மனிதனை விட அவனைத் திருத்தப் போன நீங்கள்தான் பெரும் குற்றவாளி!

—என்று தீர்ப்பு வழங்குவான். எண்ணிப் பாருங்கள். எவ்வளவு விசித்திரமான விளைவு!

தவறு செய்கிறவனைத் திருத்தி நல்வழிப்படுத்தப் போன நீங்கள் குற்றவாளியாகிறீர்கள்; வேடிக்கை பார்க்க வந்தவன் யாருடைய பதவிப் பிரமாணமும் இல்லாமல் மதிப்புமிக்க நீதிபதியாகிறான்!

இப்படிப்பட்ட அவலநிலை சமுதாயத்தில்தான் தோன்ற முடியுமேயன்றி தனிமையில் அல்ல!



இந்த நிலைமைக்கு வந்துவிட்ட ஒருவன் மற்றவர்கள் செய்கிற தவறுகளைப் பார்த்துக் கொண்டு பேசாமலிருப்பதைத் தவிர்த்து வேறு என்ன செய்ய முடியும்? தனிமையைத் தேர்ந்தெடுத்த மனிதனுக்கு இந்தத் தீமையிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கிறது என்பதை நீங்கள் எப்படி மறுக்க முடியும்?

இதுவரை நாம் பேசிக் கொண்ட செய்திகளிலிருந்து, உங்கள் உள்ளத்தையும் ஒழுக்கத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு எது சிறந்த வழி என்பதைத் தெரிந்து கொண்டீர்கள். சபலத்திற்குச் சிறிதும் இடம் கொடுக்காமல் அதை முறைப்படி பின்பற்றுங்கள்.

நபித்தோழர் அபூபக்ர் சித்தீக் அவர்கள் பள்ளிவாசலில் மக்களுக்கு எடுத்துக் கூறிய செய்தியொன்றை இங்கே குறிப்பிடுவது இடத்திற்குப் பொருத்தமானது என்று நினைக்கிறேன்.

நீங்கள் திருக்குர்ஆனை ஓதுகிறீர்கள், உயர்வான காரியம்தான். ஆனால்—

"நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நல்வழியில் சென்று கொண்டிருக்கும்போது தீயவழியில் சென்று கொண்டிருப்பவர் உங்களுக்குத் தீங்கு செய்யாதபடி உங்களை நீங்களே கண்காணித்துக் கொள்ளுங்கள்" என்ற இறைவசனத்தை ஓதும் நீங்கள் அதன் உட்கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இந்த வசனம் எந்தச் சூழலைச் சுட்டிக் காட்டுகிறதோ அதனை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளவில்லை.

"தவறு செய்யும் மனிதனைப் பார்க்கிற மக்கள் அவனைத் திருத்தவில்லை என்றால், இறைவனின் தண்டனைக்கு அவர்கள் பலியாக வேண்டிய

நிலைமை ஏற்படும்" என்று பெருமானார் சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்த இறைவசனத்திற்கும் பெருமானாரின் கருத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு.

இதன் கருத்து :

தவறு செய்கிறவனைத் திருத்தி நல்வழிப்படுத்துவது மக்களில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. இதனை ஒருவன் பின்பற்றினால் அவன் பாராட்டுக் குரியவன். ஆனால் இதில் அவன் பெருத்த எச்சரிக்கை யுடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில், முரண்வழியில் செல்கிற மனிதனால் அவனுக்குத் தீங்கு ஏற்பட்டுவிடக்கூடும். எனவே நல்வழியில் சென்று கொண் டிருக்கும் உங்களுக்கு முரண்வழியில் சென்று கொண்டிருப் பவர்களால் தீங்கு ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்!

மீண்டும் கூறுகிறேன் : உங்கள் உள்ளத்தையும் ஒழுக்கத்தையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நல்லதை எடுத்துக் கூறிக் கெட்டவர்களைத் திருத்தும் வழியில் அவர்களால் உங்களுக்கு ஏற்படும் தீங்குகளி லிருந்து தற்காத்துக் கொள்ளும் சக்தி உங்களுக்கு கிடையாது என்று எனக்கு நன்றாகத் தெரியும்! இது உங்களுக்கும் தெரிந்தது தான். அப்படியானால் தனிமையில் தான் உங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்க முடியும் என்பதில் எனக்கும் உங்களுக்கும் கருத்து வேறுபாடு எப்படித் தோன்ற முடியும்?

இந்தப் பாதுகாப்பு, தனிமையினால் உங்களுக்குக் கிடைக்கவிருக்கிற நற்பயன்களில் மற்றொன்று. இது, 'இரண்டாம் நன்மை' எனும் துணைத் தலைப்பின் கீழ் இடம் பெறுகிற இரண்டாம் நற்பயன்.



'தனிமையின் நன்மைகள்' என்ற தலைப்பில் வெகு நேரமாக உரையாடிக் கொண்டிருக்கும் நாம் இப்போது—

**'எங்கு வந்து நிற்கிறோம்?'**

—என்பதை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். நான் சொல்லும் செய்திகளை மனத்தில் அழுத்தமாகப் பதிய வைத்துக் கொள்ளும் சக்தி உங்களுக்குக் கிடையாது என்ற எண்ணத்தினால் அல்ல, அழுத்தமாகப் பதிந்த செய்திகளைக் கூட ஆழமாகப் புதைத்துவிடும் சக்தி நேர ஓட்டத்திற்கு உண்டு என்ற காரணத்தால்!

ஒருவன் சமுதாயத்தில் கலந்து வாழ்கிறான். மற்றொருவன் தனிமையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு சமுதாயத் தொடர்புக்கு முற்றுப்புள்ளி வைக்கிறான்.

இந்த இருவரில் யாருக்கு இஸ்லாம் ஆதரவு கொடுக்கிறது?

இந்தக் கேள்வி தான் நம் உரையாடலுக்கு மூலக்கருவாக அமைந்திருக்கிறது. இந்த வினாவுக்கு விடைகாணும் முயற்சியில் நாம் ஈடுபட்டு அறிஞர்களின் கருத்துக்களை ஆராயும்போது, அவர்கள் இந்தப் பிரச்சினையில் கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை நமக்குத் தெளிவாகிறது.

அவர்களில் ஒரு சாரார் தனிமைக்குத் தம் ஆதரவு முழுவதையும் கொடுக்கிறார்கள்; ஆதாரங்கள் பலவற்றையும் எடுத்துக் காட்டுகிறார்கள்.

மறுசாரார் "சமுதயத்தைவிட்டுத் தனித்து வாழ்வது கூடாது" என்று அடித்துப் பேசுகிறார்கள். இவர்களும் த ீர்மானத்திற்குப் பல ஆதாரங்களைக் கொண்டு வருகிறார்கள்.

ஆனால் இருசாராரின் ஆதாரங்கள் அனைத்தையும் நாம் அலசி ஆராய்ந்து பார்க்கும்போது அவை அத்தனையும் பலவீனமானவை என்பதை உணர்கிறோம். இவர்களில் எந்தச் சாராரும் தம் கருத்துக்கு வலிமைமிக்க ஆதாரம் எதையும் எடுத்து வைக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

எனவே 'விளைவுகளை வைத்தே செயல்களின் தரம் தீர்மானிக்கப்பட வேண்டும்' எனும் சட்ட நுணுக்கத்தின் அடிப்படையில், தனிமையினால் விளைகிற நன்மைகளையும் தீமைகளையும் அமைதியுடன் ஆராய்ந்து முடிவுகாண வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது.

தனிமையின் தீமைகளை 'சமுதாய வாழ்வு' எனும் நூலுக்கு—அல்லது உரையாடலுக்கு மூலக் கருவென்று ஒதுக்கி வைத்துவிட்டு, தனிமையின் நன்மைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்போது ஆறுவகையான நன்மைகள் நம் பார்வைக்கு எதிரில் வந்து நிற்கின்றன.

இறைவணக்கத்திற்குத் தேவையான அமைதி கொண்ட மனநிலையை அடைவது, இறைத் தியானத்தில் தித்திப்புப் பெறுவது, இறைவன்மீது பேரன்பை உண்டாக்கிக் கொள்வது, படைப்புக்களில் அவன் மறைத்து வைத்திருக்கிற மர்மங்களைக் கண்டுபிடித்து ஞானத்துறையில் பற்றுக் கொள்வது முதலியவை முதல் வகையைச் சேருகின்றன.

இவை அனைத்தையும் பற்றி 'முதல் நன்மை' எனும் துணைத் தலைப்பின் கீழ் உரையாடினோம்.

அடுத்த வகைக்கு 'இரண்டாம் நன்மை' என்று துணைத் தலைப்புக் கொடுத்தோமல்லவா? இதில் நான்குவித நற்பயன்கள் இடம்பெறுகின்றன. பிறர் புறம் பேசுவதைக் கேட்கிற பாவத்திலிருந்து உங்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு முதற் பயனாகும். இரண்டாம் பயன்: தடுத்து நிறுத்தும் சக்தி உங்களுக்கு இல்லாததால், மற்றவர்கள் செய்கிற தவறுகளைப் பார்த்துக் கொண்டு மௌனம் சாதிக்க வேண்டிய விரும்பத்தகாத நிலைமையிலிருந்து நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்கள்.



இந்தப் பாவங்கள் சமுதாயத்தில்தான் நடக்க முடியுமேயன்றி, தனிமையில் அல்ல. எனவே இவற்றிலிருந்து தற்காத்துக் கொள்வதானால் நீங்கள் தனிமையைத்தான் நாட வேண்டுமேயல்லாமல், சமுதாயத் தொடர்பை அல்ல!

நாம் இந்த இடத்தில்தான் வந்து நிற்கிறோம். தனிமையின் நன்மைகளைப் பற்றிய ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் நமக்கு இன்னும் வெகுதூரம் நடந்து செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கடந்து வந்த தூரம் அதிகமா, இல்லை—கடக்க வேண்டிய தூரம் அதிகமா என்பதை நீங்கள்தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

'இரண்டாம் நன்மை' எனும் தலைப்பில் இடம்பெற வேண்டிய நான்கு பயன்களில் இரண்டைப் பற்றிப் பேசி முடித்துவிட்டோமல்லவா? மற்ற இரண்டு பயன்கள் நம் சிந்தனைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. அப்புறம் மூன்றாம் வகையைச் சேர்ந்த நன்மைகள்—அதாவது 'மூன்றாம் நன்மை' குறித்து நாம் ஆழ்ந்து ஆராய வேண்டும் பின்னர்—

'நான்காம் நன்மை'—

'ஐந்தாம் நன்மை'—

'ஆறாம் நன்மை' ஆகிய தலைப்புகளில் விரிவாக உரையாட வேண்டும்.

இந்தச் செய்திகள் அனைத்தையும் இப்போதே பேசி முடிப்பது சாத்தியமில்லாத ஒன்று. ஏனெனில் நாம் பேச முற்பட்டதும், இதுவரை பொறுமையாக இருந்த நேரம்

முகத்தைச் சுளிக்க ஆரம்பித்துவிடும். நமக்கு அது ஒத்துழைப்பும் தராது; அனுமதியும் கொடுக்காது.

எனவே இன்றைய உரையாடலை இத்துடன் நிறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

சமுதாயத்திலும் தனிமையிலும் பல்லாயிரம் நன்மைகளை மலரச் செய்து, முன்னதை மறந்துவிட்டுப் பின்னதைத் தேர்ந்தெடுத்துப் பேரின்பம் அடைகிற மனப்பக்குவத்தைத் தன் அடியார்களில் சிலருக்குக் கொடுத்த இறைவனே அனைத்துப் புகழுக்கும் உரியவன்!

★